அன்பே ஆண்டவன்

# தமிழரசு

ஒரு செந்தமிழ் மாத வெளியீடு

'எல்லாரும் இன்புற் றிருக்க நினைப்பதுவே
அல்லாமல் வேறொன் றறியேன்...'

ஆசிரியர்: டாக்டர் மே. மாசிலாமணி முதலியார்

| மலர் | யுவஹூ ஐப்பசிமீ | இதழ் |
|---|---|---|
| 6 | 1935ஹூ அக்டோபர்மீ 15உ | 10 |


## பொருள் அடக்கம்


| | |
|---|---|
| ஆசிரியர் குறிப்புகள் | ... 722 |
| அழகு ... | ... 729 |
| லேடி டாக்டர் மிஸ். மேரி | ... 732 |
| காதலர் கஷ்டங்கள் | ... 737 |
| குவெட்டா பூகம்பத்தில் ஜானகிராமன் | ... 749 |
| 'வெங்காய வெடி' | ... 757 |
| புருஷர்களை சீர்திருத்தும் விதம் | 760 |
| பள்ளிக் காதல் | ... 762 |
| சுந்தர ரமணி அல்லது காதலின் பயன் | ... 769 |
| இது என்ன அதிசயம்? | ... 773 |
| 'சர்க்கரைப் பொங்கல்—சாப்பிடாதே!' | ... 777 |
| டாக்டர் சாரதை | ... 780 |
| அத்தான் நானுக்குச் சொந்தம்! | 784 |
| போலித் திருடனின் வீரச் செயல் | ... 795 |
| வெளி விகடம் | ... 798 |


குறிப்பு:—'தமிழரசி'ல் வெளிவரும் பெயர்கள் யாவும் கற்பனைப் பெயர்களாகும். அவை யாரையும் குறிப்பிடுவன வல்ல.

கட்டுரையாளர்களின் கருத்துக்களுக்கும், அபிப்பிராயங்களுக்கும் ஆசிரியர் ஒரு சிறிதும் பொறுப்பாளி யாகார்.

நம்பிப் பிரசுரிக்கும் கட்டுரைகள் முன்னரே உரிமை செய்யப்பட்டவை யாயின் அதற்குப் பத்திராதிபர் உத்தரவாதியாகமாட்டார்.




## யுத்தம் ஆரம்பம்

இத்தலி அபிஸீனியா தகாறு இப்பொழுது கடுமையான போக்கை அடைந்துவிட்டது. யுத்தம் ஆரம்பமாகி விட்டதென்றே சொல்லவேண்டும். இத்தலி துருப்புக்கள் அபிஸீனியா பிரதேசத்துக்குள் புகுந்து அடோவா என்னும் நகரை முற்றுகை போட்டனர். அவர்கள் அங்குள்ள செஞ்சிலுவைச் சங்கத்தின் ஆஸ்பத்திரியின் மீது ஆகாயத்திலிருந்து குண்டுகள் போட்டனர். அதனால் பல தாதிகள் இறந்துள்ளனர். பலர் காயமடைந்துள்ளனர். மற்றும் குடிகளிலும் ஆயிரக்கணக்கான பேர் குண்டுக்கு இரையாகியுள்ளனர். அபிஸீனியா சக்ரவர்த்தி படைகளைத் திரட்ட உத்தரவிட்டிருப்பதற்கு மேல் ஒன்றும் செய்யவில்லை. ஆனால் அகிலதேச சங்கத்துக்கு இச்செய்திகளை தெரிவித்து இத்தலி அத்துமீறி காரியஞ் செய்துள்ளதென்றும், அதை விசாரித்து உறுதி செய்ய தாமதமின்றி ஒரு விசாரணைக் கமிஷன் அனுப்பும்படியும் தந்தி கொடுத்திருக்கிறார். நாம், அகிலதேச சபை ராஜிப் பேச்சு என்று சொல்லி இத்தலியின் கைஓங்க இடமளித்து வருகிறதென்றும், ராஜிப் பேச்சு ஒருவிதமாக முடியும் வரையிலாவது யுத்த ஏற்பாடுகள் செய்வதை தடுத்து வைக்க வேண்டும் என்றும் முந்திய மாத இதழில் கூறினோம். அவ்விதம் செய்யாததால் இப்பொழுது இந்நிலை ஏற்பட்டுள்ளது. அகிலதேச சபையையே முற்றிலும் நம்பியிருந்த அபிஸீனிய சக்கரவர்த்தி இப்பொழுது திண்டாடும் நிலையில் நிற்கிறார். அகிலதேச சங்கத்தை நம்பியிருந்த அவரை உலகோர் 'ஏமாந்த சோணகிரி' என்று ஏளனம் செய்யும் நிலைமையை அடைந்து விட்டார். இப்பொழுதாவது அகில தேசசபை துரிதமாய் ஏதாவது செய்யுமா என்பதும் சந்தேகமாகவே இருக்கிறது. அகிலதேச சபையின் காரியம் எல்லாம் 'தேவடியாள் சிங்காரிக்கும் முன் தேர்நிலைக்கு வந்துவிடும்' என்ற கதையாகவே இருக்கிறது. முசோலியின் (இத்தாலி சர்வாதிகாரியின்) செய்கை மற்றைய வல்லரசுகட்கு ரோஷத்தை உண்டுபண்ணியிருக்கவேண்டும். அவர்கள் செய்கைகளை பொருட்படுத்தாது அவர் இவ்விதம் செய்வது அவர்களின் கௌரவத்துக்கும் தன்மதிக்கும் இழிவன்றோ? மற்றும் இத்தலி மத்தியஸ்த கமிட்டியின் யோசனையையும் ஏற்க மறுத்து விட்டதும் சர்வதேச சங்கத்தையே அவர் அலட்சியப் படுத்தி விட்டதாக அல்லவோ ஏற்படுகின்றது? இச்செய்கையானது

அச்சங்க மெம்பர்களின் மனதை உறுத்தவில்லையோ? உள்ளத்தில் தைக்கவில்லையோ? அல்லது தங்கள் கையைக் கடிக்காதவரை நாமேன் தலையிட்டுக்கொள்ளவேண்டும் என்ற எண்ணத்துடன் பேச்சளவில் மட்டும் அபிஸீனியாவிடம் அனுதாபம் காட்டிவருகின்றனரா? நிலைமை சகிக்க முடியாதபடி முற்றிவிட்டமையால் இப்பொழுதாவது அகில தேச சபை இத்தலியுடன் வியாபாரப் போக்குவரத்துச் செய்தல், லேவாதேவி செய்தல், அரசியல் சம்பந்தம் வைத்துக்கொள்ளல் முதலியவைகளை நிறுத்தச் செய்து முசோலினிக்கு நல்ல பாடம் கற்பிக்குமா? அல்லது இன்னும் வழவழ வென்றே காரியம் செய்யுமா? நாம் திரும்பத் திரும்ப எடுத்துக் காட்டியபடி, இது அகில தேச சபைக்கும் மேல் நாட்டாருக்கும் ஓர் சோதனைக் காலமாகும். இனி உலகில் சமாதானம் ஏற்படுவது இதில் வெள்ளையர்கள் நடந்துகொள்ளும் மாதிரியையே பொறுத்திருக்கிறது என்பதை மறவாமல் மேல்நாட்டார் காரியம் செய்து, இந்த சச்சரவை நிறுத்தி அமைதிக்கு அடிகோல துரிதமாய் வேலை செய்ய வேண்டும்.



இத்தலி தேசத்து சர்வாதிகாரி சினர் மசோலினி.

‘என்றுஞ் சிரஞ்சீவி’

குற்றச்சட்டத் திருத்த மசோதா இப்பொழுது நாட்டில் நிரந்தரமான சட்டமாகிவிட்டது. அதாவது நாட்டில் அமைதியும் ஒழுங்கும் குடிகொண்டு நிலவ சர்க்காருக்கு வேண்டிய சாதாரணச் சட்டங்களில் இப்பொழுது இதுவும் ஒன்றாகிவிட்டது. இந்த விசேஷ அதிகாரச்சட்டம் சாதாரண நிரந்தரச்சட்டமானது மிகவும் வருந்தத்தக்கது. இச்சட்டத்தின் வரலாற்றைப் பார்த்தால் இன்னும் வருந்தத்தக்கது. இச்சட்டம் சட்டமறுப்பின்போது அரசப் பிரதிநிதியின் விசேஷ அதிகாரத்தால் அவசர அதிகாரச் சட்டமாக

எழுந்தது. பின்னர் அதன் ஆயுள் முடிந்தபோது, சட்டமறுப்பு நின்றுவிட்ட பின்பு, சர்க்கார் இதை அப்பொழுதே நிரந்தரச் சட்டமாக்க முயன்றனர். ஆனால் அம்முயற்சி அப்பொழுதும் பலிக்கவில்லை. யானாலும் அதற்கு மூன்று வருட(!) ஆயுள்விருத்தி கிடைத்தது. இச்சட்டத்தால் அதிகாரிகளுக்கு வேண்டிய அளவுக்கு மிஞ்சிய அதிகாரங்கள் இருப்பதால், அவர்கள் இதை துர்பிரயோகம் செய்யலாம். மற்றும் இதனால் பத்திரிகைகட்கு பலமான வாய்பூட்டும் இருக்கிறது. பத்திரிகைகட்கு சுதந்திரம் வேண்டும் என்றும், அப்பொழுதுதான் நாட்டின் உண்மை பாவி பகுத்தறிவு ஏற்பட வழியுண்டென்றும் பன்முறை முறையிட்டும் அரசாங்கத்தார் அதை சட்டை செய்யவில்லை. லண்டன் லார்டு மேயர் பத்திராசிரியர்கள் சங்க ஆண்டுவிழா விருந்தில் பத்திரிகைகளைப்பற்றிப் பேசிய 'பத்திராசியர்கள் பொதுஜன அபிப்பிராயத்தை சிருஷ்டித்து அதை ஒரு ஒழுங்குபடுத்தி உருவாக்குபவர்கள்' என்று கூறினர். அப்பத்திரிகைகட்கு சுதந்திரமில்லாவிடில் ஒரு விஷயத்தைப்பற்றி எவ்விதம் அவைகள் அபிப்பிராயங்



அபிஸீனியா சக்ரவர்த்தி ஹெயிலி செலாஸி

கள் வெளியிட்டு பொதுஜன அபிப்பிராயத்தை உருவாக்க இயலும்?

நிற்க, இப்பொழுது அந்த குற்றச் சட்டத்தின் ஆயுள் முடிவடைய இருக்கின்றமையால், அதை மீண்டும் நிரந்தரமான சட்டமாக்க முன்வந்தனர். ஆனால் இந்தியச் சட்டசபை அதற்கு இணங்கவில்லை. அது, இந்த மசோதாவை ஆலோசனைக்கு எடுத்துக்கொள்ளவேண்டும் என்று இந்திய சர்க்கார் உள்நாட்டு மெம்பர் சர். ஹென்ரிகிரெயிக் கொண்டுவந்த தீர்மானத்தை தோற்கடித்துவிட்டது. பின்னர் வைஸ்ராய் அதை திரும்பயோசிக்கும்படி மறுபடியும் இந்தியச் சட்டசபைக்கு சிபார்சுசெய்து அனுப்பினர். அதையும் இந்தியச் சட்டசபை நிராகரித்துவிட்டதில் ஆச்சரியப் படத்தக்கது ஒன்றுமில்லை. சர்க்கார் அந்த மசோதாவில் அது, விசேஷ அதிகாரச் சட்டமாயிருந்த காலத்தில் அதிலிருந்த கடுமையான விதிகளில் ஒரு சிறிதும் மாறுதல் செய்யாததினால் இந்தியச் சட்டசபை அவ்விதம் செய்துவிட்டது. சர்க்கார் அவ்விதிகளில் ஏதாவது சில மாறுதல்கள் செய்திருந்தால் ஒருக்கால் அம் மசோதா இக்கதியை அடையாதிருந்தாலும் இருக்கும். பின்னர் வைஸ்ராய் அதை தனது விசேஷ அதிகாரத்தினால் அதற்கு என்றுஞ் சிரஞ்சீவி வரம் அளித்து (அதாவது அது இந்திய சட்டசபையில் நிறைவேறிய சட்டமாக நற்சாட்சி பத்திரமளித்து) அதை ராஜாங்க சபைக்கு அனுப்பினர். எப்பொழுதும் சர்க்காருக்கு நல்ல பிள்ளைகளாகவே நடக்கும் அச்சபையினர் அதை நிறைவேற்றிவிட்டனர்.

ஆனால் சர்க்கார் நாட்டில் இப்பொழுது நிலவிவரும் நிலைமையை நன்ருக ஆராய்ந்து பார்த்திருந்தால் அவர்கள் இம்மாதிரி செய்திருக்க முடியாது. முதலாவது இப்பொழுது நாட்டில் சட்டமறுப்பு உப்புச் சத்தியாக்கிரகம், வனசத்தியாக்கிரகம், வரிகொடா இயக்கம் முதலியவை ஒன்றுமில்லை. மற்றும் இதுவரை சட்டசபைகளை பகிஷ்கரித்துவந்த ஒரு அரசியல் கட்சியார் இப்பொழுது அவைகளை கைப்பற்ற முன் வந்துள்ளனர். அத்துடன் அவர்களில் ஒரு பிரிவினர் உத்தியோகங்களும் ஏற்கவேண்டும் என்று கூறுகின்றனர். இப்படிப்பட்ட நிலைமையில் வைஸ்ராய் அம்மசோதாவுக்கு சர்டிபிகேட் அளித்து தனது விசேஷ அதிகாரத்தை பிரயோகம் செய்தது மிகவும் விசனிக்கத்தக்கது. வைஸ்ராயின் இச் செய்கையானது காங்கிரஸில் உத்தியோகம் ஏற்கக்கூடாது என்ற கூட்டத்தாரின் கையைப் பலப்படுத்துவதாக இருக்கிறது. உத்தியோகம் ஏற்கக்கூடாது என்ருல் சட்ட சபைக்கு சென்ற காங்கிரஸ் வாதிகள் என்ன செய்யமுடியும்? சர்க்காரை சதா எதிர்த்துத் தானே நிற்பார்கள். எனவே வைஸ்ராய் தனது செய்கையால் காங்கிரஸ் வாதிகள் ஒத்துழைப் பாளர்களாக மாறக்கூடிய ஒரு நிலைமையையும் பாதித்துவிட்டது. மற்றும் காங்

ரஸ் சட்டசபை கட்சித்தலைவர் திரு புலாபாய்தேசாய், எதிர்கட்சியார் கூறுவதை சற்றுக்கவனித்து ஒரு சமாதானமான முடிவுக்கு வரக்கூடிய வழியைப்பற்றி சிந்திக்குமாறும் சர்க்காரை வேண்டினர். அதற்கும் அவர்கள் இசையவில்லை. திரு. தேசாய் இவ்விதம் கூறியது சர்க்காருக்கு ஓர் அரிய சந்தர்ப்பமாகும். அவர் கூறியபடி சர்க்கார் இருகட்சியாருக்கும் பிடித்தமான ஒரு வழியைக் கண்டுபிடித்து அம் மசோதாவில் சில மாறுதல்கள் செய்திருந்தால் அம் மசோதா நியாயமன வழியில் சட்டமாகி இருந்தாலும் இருக்கலாம். அத்துடன் ஒத்துழையாமையை கைவிட்டு சர்க்காருடன் ஒத்துழைத்தால் நாட்டிற்கு அதிக நன்மை ஏற்படும் என்று காட்டுவதற்கும் சர்க்கார் இதை ஓர் உதாரணமாகவும் பயன்படுத்திக் கொள்ளலாம். இப்படிப்பட்ட ஓர் நிலை ஏற்படுவதற்கு ஏதுவாக இருந்த அரிய சந்தர்ப்பத்தை சர்க்கார் கைவிட்டதும் பெருந் தவறேயாம். இன்னும் சில சுயேச்சை கட்சியினர் மசோதாவுக்கு தீர்க்காயுள் கொடுப்பதற்குப் பதில் அதற்கு ஐந்தாண்டுகள் ஆயுள் விருத்தி கொடுத்து மசோதாவிலும் சில மாறுதல்கள் செய்தால் அதை ஆதரிப்பதாகக் கூறினார்கள். அதைப்பற்றியும் எவ்விதமான செய்தியும் தெரியவில்லை. இன்னோரன்ன நிலைமையில் இந்தியச் சட்டசபை அம் மசோதாவை நிராகரித்ததைப்பற்றி ஆச்சரியப்படுவதற்கு ஒன்றுமில்லை.

## ‘ஒரு காரியம் செய்திருந்தால்’

இவ்வாண்டில் இந்திய நாட்டில் ஏற்பட்ட பேராபத்தான, மிகவும் துக்கிக்கத்தக்க காரியம் குவெட்டா பூகம்பமே. அவ்வாபத்தில் சிக்கிய பேர்களை காப்பாற்றவும் அவர்களுக்கு உதவியளிக்கவும், புதைபட்ட சொத்துக்களை மீட்கவும் சர்க்கார் தங்களால் இயன்றதை எல்லாம் செய்துள்ளார்கள். இதற்கு இந்திய சட்டசபையில் அவ்வேலைகள் சரிவர செய்யப்பட்டனவா என்று விசாரித்து அறிக்கை செய்ய உத்தியோகஸ்தர்களும் உத்தியோகப்பற்றற்றவர்களும் அடங்கிய ஓர் கமிட்டி நியமிக்க வேண்டும் என்று கொண்டுவரப்பட்ட தீர்மானத்தைப்பற்றி வாதம் நடந்தபோது பேசியவர்கள் எல்லாம், துருப்புக்களின் செயல்களைப் பாராட்டிப் பேசியிருப்பதே போதிய சான்றாகும். அப்படியிருந்தும் அவ்விதமான தீர்மானம் கொண்டு வருவதற்கு, காங்கிரஸ் தலைவர் திரு. ராஜேந்திர பிரசாத்தையும் மகாத்மாவையும் அங்கு போக அனுமதிக்கவில்லை என்றதும், கஷ்ட நிவர்த்தி வேலை ஜாதி வித்தியாச முறையில் நடைபெற்றனவென்று வதந்திகள் பரவியதுமே காரணமாகும். சிற்சில விவகாரங்களில் பொதுஜனங்கள் ‘இரண்டு பேரும் செய்தது சரிதான். இரண்டு பேரும் செய்ததும் தப்புத்தான்’ என்று அபிப்பிராயங்கள் கூறுகின்றனர். இந்தியச் சட்ட சபையில் மேற்குறித்த தீர்மானத்தைப்பற்றி நடந்த வாதத்தைப் பார்க்கும்போது இந்த

அபிப்பிராயந்தான் நமக்கு ஞாபகத்துக்கு வருகிறது. அங்கு பேசியவர்களில் திரு. எம். எஸ். ஆனே ஒருவரை தவிர வேறொருவரும் அவ்விதமான விசாரணை நடத்தவேண்டியது அவசியமென்று வலியுறுத்தப் போதிய ஆதாரங்கள் காட்டவில்லை. திரு. ஆனே சொத்துக்களை மீட்கும் வேலை ஜூன் மாதம் இரண்டாந் தேதியே நின்று விட்டதாக ஒரு பம்பாய் தினப் பத்திரிகையின் நிருபர் எழுதி யிருப்பதாய் குறிப்பிட்டார். சர்க்கார் தரப்பில் பேசியவர்கள் அவ்விதமில்லை என்றும், தண்ணீர் கஷ்டமும், பஞ்சக் கஷ்டமும், தொத்து வியாதி பரவக்கூடிய நிலைமையும் இருந்ததால் வேறு யாரையும் ஜூன் 2-ந் தேதிக்குப் பின்போக அனுமதிக்கவில்லை என்றும், 'காங்கிரஸ் தலைவர் தான் போக விரும்புவதாய் கூறவில்லை என்றும், கஷ்ட நிவர்த்தி செய்ய ஆட்கள் அனுப்பப் போவதாகவே கூறினர் என்றும், திரு. காந்தியும் அவ்விதமே கூறினர் என்றும், அதனாலே மேலே குறிப்பிட்ட காரணங்களை முன்னிட்டு அவர்களை போக அனுமதிக்கவில்லை என்றும் கூறினர்கள். மற்றும் சர்க்கார் சார்பில் பேசிய வியாபார மெம்பர் சர். முகமத் சாபருல்லாகான் சர்க்கார் விசாரணை நடத்துவதற்கு சம்மதிக்க தயாராக இல்லாவிட்டாலும் சொத்துக்களை மீட்கும் வேலை சம்பந்தமாயும், மீண்டும் ஜனங்களை குடியேற்றுவது சம்பந்தமாயும் அதிகாரிகளுக்கு உதவிசெய்ய ஓர் ஆலோசனை கமிட்டி நியமிக்கத் தயாராக இருப்பதாகவும், மற்றும் சட்டசபை மெம்பர்கள் குவெட்டா சென்று பார்க்க வசதிகள் செய்யவும் சர்க்கார் தயாராக விருப்பதாகவும் கூறினர். இவ்விதம் சர்க்கார் செய்தது நம்பமுடியாத வதந்திகள் உலாவுவதை தடுப்பதற்குப் பெரிதும் பயன்படும். ஆனல் சர்க்கார் இப்பொழுது இவ்விதம் செய்ததைவிட முன்னரே வேறொரு காரியம் செய்திருந்தால் இவ்விதமான தீர்மானம் கொண்டு வந்திருக்கப்படமாட்டாது. சர்க்கார் பெருந்தொகையினரை அனுமதிக்க இயலாதிருந்தாலும் மகாத்மாவையும் திரு. ராஜேந்திர பிரசாத்தையும் மட்டும் ஒன்றிரண்டு சகாக்களுடன் சென்று பார்க்க அனுமதிக்கத் தயாராக விருப்பதாய் தெரிவித்திருக்கலாம். அவ்விதம் செய்திருந்தால் சர்க்காருக்கு இவ்வளவு கெட்ட பெயரும் பொய் வதந்திகளும் வந்திருக்காது.

## 'எந்தக் காலத்தில் நடக்கும்'

பெங்களூரில் இண்டர்மீடியட் காலேஜ் சங்கத்தில் செப்டம்பர் 18-ந் தேதி வியாழக்கிழமை சர். டி. விஜயராகவாச்சாரியார்பேசியபோது ஓர் நல்லுரை பகர்ந்துள்ளார். அதைக் கடைப்பிடித்து ஒழுகப்படுமானல் ஒழுங்கும் அமைதியும் நாட்டில் ஒருங்கே நிலவும். ஜாதிச் சண்டை, மதச்சண்டை, மசூதி முன் வாத்தியச் சண்டை, கோவில் முன் வாத்தியச் சண்டை, இப்பொழுது பஞ்சாப்பில் நடப்பது போன்ற சச்சரவு முதலியவை தலைகாட்ட

மாட்டா. சர். டி. விஜயராகவாச்சாரியர் 'இந்தியாவில் ஜாதி மதங்களை அடிப்படையாகக்கொண்ட தப்பபிப்பிராயங்களை (தப்பான கொள்களை, விட்டொழிக்க வேண்டும். பொது விவகாரங்களில் மதக் கொள்கைகளை கொண்டுவந்து புகுத்துவதை விட்டொழிக்க வேண்டும். மதத்தை வீட்டிற்குள்ளே வைத்துக்கொள்ள வேண்டும்' என்று கூறினர். ஆனல் இந்தியாவில் இது எந்தக் காலத்தில் நடக்கும் என்பதுதான் நமது சந்தேகம்.

## நல்ல அறிகுறி

வெளிநாடுகளிலுள்ள இந்தியர்கள் கௌரவமாக நடத்தப்படாததுடன் அங்கு அவர்கள் பிழைப்புக்கும், குடியிருப்புக்குமே ஆபத்துக்களும் செய்யப்படுகின்றன. இந்திய சர்க்கார் வெளிநாடுகளிலுள்ள இந்தியர்கள் நிலைமை சகிக்கமுடியாதபடி ஆனபின்பே அதில் கவனம் செலுத்துகின்றனர். இதற்கு வெளிநாடுகளிலுள்ள இந்தியர்கள் நிலைமையை கவனிக்க தனி இலாக்காயில்லாமையும் போதிய அவகாசமின்மையுமே காரணமாகக் கருதப்பட்டது எனவே வெளிநாடுகளிலுள்ள இந்தியர் நிலைமையை கவனிக்க தனி இலாக்கா ஏற்படுத்த வேண்டுமென்று கேட்கப்பட்டது. ஆனல் தனி இலாக்கா ஏற்படுத்தினல் அதற்கு போதிய வேலை இருக்காது என்று சர்க்கார் கூறிவந்தனர். இப்பொழுது பர்மாவை இந்தியாவிலிருந்து பிரிக்கப்போகின்றமையால் வெளிநாடுகளிலுள்ள இந்தியர்கள் நிலைமையை கவனிக்கத் தனி இலாக்கா ஏற்படுத்தினல் அதற்குப் போதிய வேலை இருக்கும் என்று கருதி இந்திய சர்க்கார் அதற்காக தனி இலாக்கா ஏற்படுத்த தீர்மானித்து விட்டனர். இது இந்தியர்கள் க்ஷேமத்திற்கு ஓர் நல்ல அறிகுறியாகும். தனி இலாக்கா ஏற்படுத்துவதினல் வெளிநாடுகளிலுள்ள இந்தியர்கள் குறைகளை நிவர்த்திக்க அதிகக் கவனம் செலுத்த முடியும். அதனல் வெளிநாடுகளிலுள்ள இந்தியர்கள் நன்முக நடத்தப்படுவதுடன் பொதுவாக வெளிநாடுகளில் இந்தியர்கள் அந்தஸ்தும் உயரும். மற்றும் அவர்களின் சுயமரியாதையும் காக்கப்படும். வெளிநாடுகளிலுள்ள இந்தியர்கள் நன்மைகளை கவனிக்க ஒரு தனி இலாக்கா ஏற்படுத்துவதினல் இந்திய சர்க்கார் தாங்கள் இதுவரை செய்யாது அலட்சியமாய் இருந்த ஒரு கடமையை செய்துவிட்டவர்களாகின்றனர்.

## ஜோதி

ஜோதி என்னும் பெயருடன் சிதம்பரத்தினின்றும் ஒரு வார வெளியீடு வரப்பெற்ருேம் பழைய வழிபாடான சுத்தழி வழிபாட்டை, அதாவது சிவன், விஷ்ணு, சத்தி முதலான கடவுள்

# அழகு

[திருவையாறு கே. வைத்தியநாதன்]

பெரும்பாலும் நம்மவர்களது கட்புலனுக்கு ஏற்றவகையில் அமைந்துள்ள பொருள்களை அழகுள்ளன என்று நாம் கருதுகிறோம். அதாவது நமது பார்வையைத் தம்பால்வலிந்து இழுத்துக்கொள்ளக் கூடிய எவையும் அழகுள்ளதாகின்றன. ஆகவே ஒரு பொருள் அழகுள்ளதாயின் அது நமது விழிகளைக் கவர்கிறது. விழிகளினூடே நமது உள்ளத்தையும் தன்னிடம் ஈர்க்கிறது.

*　　　　*　　　　*

மக்களின் அழகு அவரவர்களுடைய அங்க அமைப்பு, நிறம், உயரம், பருமன் முதலியவற்றைச் சார்ந்துள்ளது. இவற்றில் ஒன்றோ பலவோ ஏற்றவகையில் பொருந்தியதாலேயே அழகென்னுஞ் செழுமையைப் பெற்றதாகி விடுகிறார்கள். இவையாவும் அந்தந்த நாட்டினரின் அறிவுக்கேற்ப' பழக்க வழக்கங்களுக்கேற்ப மாறுபட்டுக் காணப்படும். உதாரணமாகச் சிலநாட்டினர் வனிதையர்களது கருங்குழலை அழகியது எனக் கருதுவர். வேறு சிலர் செம்பட்டைக் கூந்தலே சிங்காரமானதென மதிப்பர். அதுவேபோல் ஒரு தேசத்தினர் அழகென மதிப்பதை பிறதேசத்தினர் அழகில்லாததெனக்

---

வழிபாட்டிற்கு (ஆரியக் கலப்புக்கு) முன் மக்கள் வணங்கிவந்த வழிபாட்டை நினைவூட்டுவான் பொருட்டு ஆரிய ஜாதிக்குள் அகப்படாத தனித் தமிழாகவே வாழ்ந்துவரும் பழந்தமிழர் வகுப்பில் வந்த சாமி சகஜானந்தா அவர்களால் நடத்தப்படும் பத்திரிகையை, பரம்ஜோதி அருளால் வளரப்பட்ட நந்தனார் மடத்தினின்றும் வெளிவரும் பத்திரிகையை தமிழ் மக்களும் ஆரியத் தமிழரும் ஆரியர்களும் ஆதரிக்க வேண்டுமாய் கேட்டுக் கொள்ளப்படுகின்றது. சந்தாத் தொகை வருடம் ஒன்றுக்கு ஒரு ரூபாய். வேண்டுவோர் நந்தனார் மடம், சிதம்பரம் என்ற விலாசத்துக்கு எழுதவும்.

கருதலுமுண்டு. எனவே அழகின் சுவை (Taste of beauty) தேசத்துக்கு தேசம் மாறுபட்டுவிடும்.

* * *

'கல்விக்கழகு கசடற மொழிதல்' என்பது போல, படிப்பிலும் சொல்லிலுங்கூட அழகு உண்டு. கல்விக்கு அழகு கொடுக்கவே, கல்விக்கேதுவாகிய மொழிக்கு அழகு கொடுக்கவே இலக்கணம் போன்ற நூல்கள் முன்னோர்களால் அருளப்பட்டுள்ளன. சொற்களைப் பிழையின்றிச் சொல்லவும் எழுதவும் போதிப்பது இலக்கணமாகும். ஆதலால் எழுத்துகளின், சொற்களின் இலக்ஷணமே இலக்கணமாம். இலக்கணங்கற்ற ஒருவனது இலக்கியப் பேச்சில், எழுத்தில் எத்தனை அழகிய பதங்கள் நமது உள்ளத்தைக் கொள்ளை கொள்ளுகின்றன.

* * *

சொல்லில் (பேச்சில்) அழகிருப்பதுபோலவே எழுத்திலும் அழகுண்டு. மொழியின் எழுத்துகளேயன்றி, கருத்துகளை பாமரர்களும் எளிதில் உணர்ந்துகொள்ளும் வண்ணம் விளக்கிக் காட்டும் சித்திரங்களிலும் அழகு உண்டு. பிராணிகளின் உருவங்களையோ அவற்றின் செய்கைகளையோ உணர்ச்சி வெளிப்படுமாறு வரையப்பட்டிருக்கும் சித்திரங்களைக் கண்டு வியவாதார் யார்? ஓவியங்களையும் உருவப் படங்களையும் கண்டு அவற்றிலுள்ள பெண்களையோ, ஆண்களையோ காதல் கொள்ளும் ஆடவர்களும் பெண்டிர்களும் உலகில் இல்லையா?

* * *

'அழகை'க் கண்களாலும் கருத்தாலுமே அறியலாம். அதைப் பிறருக்கு எடுத்துச் சொல்லுவதும் மிகச் சிரமமானதொரு செய்கையாகும். வேண்டுமானல் பல உதாரணங்களைக்கொண்டு ஒரு பொருளின்—ஒரு பிராணியின் அழகைச் சித்தரிக்க முடியும். இதைத்தான் வர்ணனை என இலக்கியக்காரர்கள் கூறுவார்கள். இந்த வர்ணனையைக்கொண்டே எத்தனை அழகாகத் தமது கற்பனாசக்தியால் கதாசிரியர்கள் பலர் வனிதையர்களது ரூபலாவண்யத்தையும், மலை, அருவி, சோலை, கடல் இவற்றின் தோற்றங்களையும் சித்தரித்துக் காட்டுகின்றனர்.

* *

பொதுவாக உலகில் உள்ள உயர்திணை, அஃறிணைப் பொருள்களின் அழகிய தோற்றங்களெல்லாம் இருவகையில் எழுந்தனவாகும். இயல்பாக—சுபாவமாக மக்களது முயற்சித்திறனன்றி எழுந்தவையும் இயற்கைத் தேவியின் அருள் பெற்றனவாகும். அவற்றில் நிறைந்து காணப்படும் அழகு முழுதும் பிருகிருதி யன்னையின் கிருபையால் வந்த வரப்பிரசாதமாகும். ஏனையவகையில் தோன்றியன யாவும் செயற்கை முறையில் எழுந்தனவாகும். இவ் விருவகைத்

தோற்றத்தில் எது சிறந்தது என ஆராயப்புகின், இயற்கை யழகே சிரியதென யாரும் எளிதில் கண்டறியலாம். இயற்கை வனப்பு குன்றிய ஒரு மாது எத்துணை ஆடை யாபரணங்களால் தன்னை அலங்கரித்துக்கொள்ளினும், அவள் இயற்கையெழில் பெற்றவளைப் போல் அத்துணை யழகு பெற்றவளாய் விடமாட்டாள். எனவே இயற்கைச் சாபத்தைச் செயற்கை வரத்தால் மாற்றுவது எளிதான காரியமல்ல.

* * *

அழகே ஆசைக்குக் காரணமாகிறது. அழகுள்ள பொருள்களிடத்தில்தான் மக்களுக்கு நாட்டம் செல்லுகிறது; மோகம் அதிகமாகிறது. அத்தகைய ஆசைப்பெருக்குக்கு ஒவ்வோர் சமயங்களில் எத்தனையோபேர் அடிமைகளாகித் தத்தளிப்பதுமுண்டு. மக்களிடையே உண்டாகும் காதல் உணர்ச்சிக்கு ஒரு காரணமாவதும் அழகுதான். ஆதலால் அழகின் காரணமாக காதல், ஆசை, அன்பு முதலியன தோன்ற, அவற்றின் காரணமாக மனித சமூகத்தினிடையே நட்பும், ஒற்றுமையும் வளர்கின்றன.

* * *

மனிதனுடைய உள்ளத்தைக் கவர்வது அழகு; அதை ஒரு வழிப்படுத்த உதவுவது அழகு; அதற்கு அமைதியைக் கொடுத்துக் குதூகலத்தைப் பெருக்குவது அழகு. அழகிய ஒரு பொருளிலோ, பிராணியிலோ மனிதன் எவனும் தன் ஐம்புலன்களையும் ஈடுபடச் செய்கிறான். அழகிய காட்சிகளைக் காணும்போது தன் துயரத்தையெல்லாம் மறந்துவிடுகிறான். ஏன்? சிற்சில சமயங்களில் தன்னையே மறந்துவிடுகிறான். ஆகவே மனிதன் எவனும் கருத்தொருமித்துகளிப்புறும் நேர்மை இந்த அழகு ஒன்றில்தான்.

* * *

அழகிய பொருள்கள் நிறைந்த—இயற்கை வளம் நிறைந்த காட்சிகளைக் காணும்போது புலமை மிக்க உள்ளம் துள்ளுகிறது. துள்ளியெழுகிறது. அப்படி எழும் வேகத்தில் தன் தாய்மொழிக்கு அழகு செய்யவோ என்னவோ தீங்கவி மழை பொழியத் தொடங்குகிறது. ஆக அழகு அறிஞர்களது உள்ளத்தைப் பரவசப்படுத்தி அவர்களது அறிவுப்பெருக்கை வெளிப்படுத்தும்வன்மை வாய்ந்தது. அழகு, நன்மை, அறிவு இவைமூன்றும் சகோதரிகள் (Beauty, Good, Knowledge are three sisters—Tennyson) என்பது டெனிசன் என்ற பெரியாரின் வாக்கு. அழகில் எய்தப்பெறும் நன்மைகள் அனந்தம். ஆனாலும் அவற்றில் சிறந்தது அறிவு வளம் பெறலாகும்.

---

# லேடி டாக்டர் மிஸ். மேரி

[எஸ். ஆர். சுந்தரராமன்]



'மணி 10½-க்குமேல் ஆய்விட்டதே. அந்தோ! நேரமாகி விட்டதே என் செய்வது. அவள் என்ன நிலையில் இருக்கிறாளோ' என்று பலவாறாக சிந்தனை செய்யுங்கால் வண்டி 'சடக்' என்று ஓர் வைத்திய சாலையின் முன் நின்றது. அதிலிருந்து அகன்ற மார்பும், பரந்த தோள்களும், சுருண்ட மயிரும், கண்டோர் காமுற வல்ல கட்டழகும், திடசரீரமுமுள்ள ஓர் இளஞ்சிங்கம் இறங்கினார்.

வண்டியை விட்டு இறங்கினவுடன் தன்னிடமிருந்த 'விஸிடிங் கார்டை' (Visiting Card) அங்கு இருந்த வேலைக்காரனிடம் கொடுத்து அதை எஜமானியிடம் கொண்டுபோய் கொடுக்கும்படி சொன்னார். அதற்கு அவன் 'எஜமானி வேலையா இருக்காங்கோ, நான் இப்போ போகமாட்டே' கொஞ்சம் உக்காருங்க. அம்மா வந்துடுவாங்க' என்று சொன்னான்.

வந்திருப்பவர்:—'அப்பா! நான் உட்காருவதற்கு நேரமில்லை. இங்கு காத்துக்கொண்டு இருந்தால் என் வேலை நடக்காது. நீ சற்று...............'

வேலையாள்:—'அது மாத்ரம் முடியாது சாமி. இத்தனை பேர் காத்துக்குனு இருக்க உங்களுக்கு மாத்திரம் என்ன? நான் இப்ப போனா அம்மா என்னை வேலையிலிருந்து எடுத்துடுவாங்க. எங்கப்பானே நான் போகமாட்டே'........

வந்:—'ஏது. நீ ரொம்ப பிடிவாதக்காரனாய் இருக்கிறாயே. உனக்கு வேலை போனால் நான் ஜவாப்தாரி. நீ இந்த கார்டைமட்டும் உன் எஜமானியிடம் கொடு. மற்றதை நான் பேசிக்கொள்ளுகிறேன்' என்று சொன்னார்.

'இது என்னடா இழவாய் இருக்குது. அவன் பிடிச்ச முசலுக்கு மூனுகால் என்கிறானே. என் செய்றது. உள்ளே போய் தான் பார்க்கலாமே' என்று ஒருவாராக தன்னைத் தைரியப்படுத்திக் கொண்டு 'கன்ஸல்டிங்' (Consulting Room) ரூமுக்குள் நுழைந்தான் மாரி.

'என்னடா மாரி. நான் வேலையாக இருக்கும்பொழுது என்னை 'டிஸ்டர்ப்' (Disturb) தொந்திரவு செய்யக்கூடாது என்று உனக்கு எத்தனைதரம் சொல்றதுடா' என்று கோபத்துடன் கேட்டாள் ஓர் இளமங்கை. இவள்தான் மதுரையம்பதியின் கீர்த்திவாய்ந்த லேடி டாக்டரான மிஸ். மேரி.

மாரி:—'அம்மா இந்த தரம் என்னை மன்னிச்சுடுங்கோ. உங்களை அவசியம் இப்போ பார்க்கவேண்டும் என்று ஒருவர் வந்திருக்கிறார். நான் என்ன சொல்லியும் அவர் கேக்கலிங்கோ. அப்புறம் நான் என்ன செய்றது. அவங்க உங்ககிட்ட இந்த 'காட்டை' (Card) கொடுக்கும்படி சொன்னாங்கோ' என்று சொல்லிக்கொண்டே விஸிடிங்கார்டை மேரியிடம் கொடுத்தான். (மேரி விரைவாய் கார்டை வாங்கி படிக்கிறாள்.)

என்ன இது. 'மிஸ்டர் N. புஷ்பராஜ் B. A. டிப்டி தாசில்தார்! இது யாராய் இருக்கலாம்? ஒருவேளை நம்முடன் விழுப்புரம் ஹைஸ்கூலில் படித்த புஷ்பராஜாக இருப்பாரோ. எதற்கும் நேராக போய் பார்ப்போம்' என்று தன் ஆபீஸ் ரூமுக்குள் (Office Room) வந்தாள்.

வாசகர்களே! புஷ்பராஜனும், மிஸ். மேரியும் இளமையில் ஒரே பாடசாலையில் கல்வி பயின்றவர்கள். விழுப்புரம் ஜமீன்தார் நாகரத்தின முதலியாரின் ஏகபுத்திரன் புஷ்பராஜ். அவ்வூர் தாசில்தார் மிஸ்டர். பாலின் ஏகபுத்திரியே மிஸ். மேரி. மேரி முதலியாரின் வீட்டு வழியாகத்தான் பள்ளிக்குப் போகவேண்டும். அப்பொழுது அவள் தன் கோச்சை (Coach) நிறுத்தி, புஷ்பராஜையும் அழைத்துக் கொண்டு செல்வது வழக்கம். இவ்வாறாக இவர்கள் ஜோடியாக பள்ளிக்குச் சென்றுவரும் நாளில் இவர்களுக்குள் ஏற்பட்ட நட்பானது நாளடைவில் காதலாக மாறிற்று.

இஃது இவ்வாறிருக்க, ராஜுவின் சகாக்கள் (Class Mates) ராஜுவும், மேரியும் ஜோடியாக பாடசாலைக்கு சென்று வருவதையும் அவர்களுக்குள் ஏற்பட்டிருக்கும் நட்பையும் கண்டு பொறாமை கொண்டார்கள். ஆகையால் அவர்களைப்பற்றி பலவிதமான கதைகளை முதலியாரிடம் சொன்னார்கள். பையன் கெட்டு விடுவான் என்ற மூட நம்பிக்கையுடைய முதலியார் அன்றுமுதல் ராஜுவை கண்டிக்க ஆரம்பித்தார். ஆகையால் ராஜுவும், மேரியும் முன்போல் சந்திக்க முடியாமல் போயிற்று.

இப்படி இருக்கும் நாளில் மிஸ்டர் பாலை திருச்சினாப்பள்ளிக்கு டிப்டி கலக்டராக மாற்றினார்கள். ஆகையால் கன்றைவிட்டு அகலும் பசுவேபோல் காதலர்கள் பிரிந்தார்கள். ஆபீஸ் ரூமுக்குள் வந்ததும் அவளுக்குண்டான சந்தோஷத்திற்கு அளவேயில்லை. ஏன்? அங்கு மன்மதனைப்போல் வீற்றிருப்பவர் அவள் பாலிய சிநேகிதன் அன்றோ!

'வாரும் என் ராஜ். இன்றே நான் பாக்கியவதியானேன்' என்று மிகுந்த சந்தோஷத்துடன் வரவேற்றாள்.

பிரபல டாக்டர் மிஸ். மேரியாக இருப்பதைக் கண்ட புஷ்ப ராஜுக்குண்டான களிப்பு சொல்லத் தக்கதன்று.

ராஜ்:—'நான் உன்னை லேடி டாக்டராக கண்டது எனக்கு மிகுந்த சந்தோஷம்'

மேரி:—ராஜ்! என்னை நீங்கள் எப்படி இந்த எட்டு வருஷமும் மறந்திருந்தீர்கள்.

ரா:—'உன்னை நான் மறக்கவே இல்லை. நீ இருக்கும் இடம் எனக்கு தெரியாமல் இருந்ததுதான் காரணம்'

மே:—நான் போட்ட கடிதங்களுக்கு நீங்கள் ஏன் ஓர் கடிதமாகிலும் பதில் போடவில்லை. என் பேரில் உங்களுக்கு..........'

ரா:—'மேரி கவலைப்படாதே. எல்லாம் இப்பொழுது நன்றாக தெரிகிறது. இது என் தந்தை செய்த விஷம். உன்னிடமிருந்துவரும் லெட்டர்களை என்னிடம் அவர் கொடுக்கவில்லை. மற்றும் நான் S. S. L. C. பாஸ் செய்தவுடன் கிரிஸ்டியன் காலேஜ்ஜிக்கு (Christian College) படிக்கச் சென்று விட்டேன்.'

மே:—'நீங்கள் சென்னையிலோ படித்தீர்கள். நான்கூட அல்லவோ அங்கு இருந்தேன். S. S. L. C. யில் தேறியவுடன் நான் 'லேடி வில்லிங்டன் 'மெடிகல் ஸ்கூலில்' சேர்ந்து வைத்திய சாஸ்திரம் படிக்கலானேன். என்ன நம் துர்அதிர்ஷ்டம்! நாம் சென்னையில் ஒரு முறையாகிலும் சந்திக்கவில்லையே........'

ரா:—அது போகட்டும்: நீ டிஸ்பன்ஸரி வைத்து எத்தனை வருடமிருக்கும்'

மே:—சுமார் 2 வருடமாகிறது. நீங்கள் ஏன் விசனமுற்றிருக்கிறீர்கள்? உங்களுக்கு என்ன நேர்ந்தது? அடியாளிடம் சொல்லக் கூடாதா ?'

ரா:—'ஒன்றுமில்லை. உன்னிடம் சொல்வதற்கு நாவெழ மாட்டேன் என்கிறது. என் மனைவி சுலோசனாவிற்கு உடம்பு அசௌக்கியமாய் இருக்கிறது. அவளுக்கு 4, 5, நாட்களாக ஜுரம் அடிக்கிறது. துடையில் (Thigh) ஓர் கட்டி கண்டிருக்கிறது. அதனால் தான் காய்ச்சல் வருகிறது என்று டாக்டர் சுப்பாராவ் சொன்னார். மற்றும் ஓர் லேடி டாக்டரிடம் காட்டி அதை அறுத்துவிடும்படி சொன்னார்.

மே:—'கவலைப்பட வேண்டாம். எல்லாம் கூடிய சீக்கிரத்தில் நன்றாய்விடும். நீங்கள் இன்று மாத்திரம் 'காஸ்வல் லீவ்' (Casual leave) எடுத்துக் கொள்ளுங்கள்.' என்றாள்.

ரா:— எனக்கு லீவ் எடுத்துக்கொள்ள வேண்டுமென்று அதிக ஆவல் இருக்கிறது. என்ன செய்வது. இப்பொழுது ஜமாபந்தி டைம். மணி 11–15 ஆய்விட்டது. நான் ஆபீஸிக்கு போய் 5–30 மணிக்குள் வந்து விடுகிறேன். பிறகு பேசலாம்' என்று சொல்லிவிட்டு மேரியினிடம் விடை பெற்றுக்கொண்டு சென்றார்.

தன்னுடைய சிநேகிதன் மனைவியை பார்க்க வேண்டுமென்ற அவாவினாலும், அவளுக்கு சீக்கிரம் சிகிச்சை செய்ய வேண்டுமென்ற எண்ணத்தாலும் தன்னுடைய வேலைகளை சீக்கிரம் முடித்துக்கொண்டு சரியா 11-40 க்கு புஷ்பராஜின் வீட்டுக்குச் சென்றாள் மிஸ். மேரி.

அங்கு சுலோசனாவின் உடம்பை ஜாக்கிரதையாக பரிஷித்தாள். 'ஒன்றும் கவலைப்பட வேண்டாம் அம்மா. உங்களுக்குள்ள ஜுரம் சீக்கிரம் போய்விடும்' என்று சுலோசனாவிற்கு தைரியம் சொன்னாள். இதற்குள் லேடி காம்பவுண்டர் மிஸ் கமலம் டாக்டர் கொண்டு வரும்படி சொன்ன கத்தி முதலியவைகளைக் கொண்டுவந்தாள்.

மிஸ். மேரி சுலோசனாவின் தொடையில் இருந்த கட்டியை அறுத்து அதிலிருந்த சீ (Pus)லை வெளிப்படுத்தினாள். இதற்குள் மணி 12-10 ஆய்விட்டபடியால்தான் மறுபடியும் சாயந்திரம் 4½-மணிக்கு வருவதாக சொல்லிவிட்டு சென்றாள்.

மணி 4-30 ஆயிற்று. மேரியும் ராஜுவின் வீட்டிற்குள் நுழைந்து மேல்மாடியில் இருக்கும் தன் நோயாளியை (Patient) பார்க்கச் சென்றாள். சுலோசனாவிற்கு நாடி தளர்ந்து இருப்பதை கவனித்தாள். மேரிக்கு ஒன்றுமே விளங்கவில்லை. சுற்றுமுற்றும் பார்த்தாள் தான் ஆப்ரேஷன் (Operation) செய்த கத்தியைக் கவனித்தாள். இப்பொழுதுதான் அவளுக்கு விளங்கிற்று. என்ன அந்தப் பாழும் முண்டை கமலம் கத்தியை 'ஸ்டெர்லைஸ்' (Sterlize) செய்யவில்லை யென்றும், தானும் அவசரத்தில் அதை கவனிக்காமல் கட்டியை அறுத்ததால் காயமானது 'ஸெப்டிக்' (Septic) (அதாவது உடம்பில் விஷம் ஏற்) ஆய்விட்டது என்றும் அவளுக்கு தெரிந்தது.

இதை அறிந்ததும் அவள் துக்கசாகரத்தில் மூழ்கினாள். 'நம்மை நம்பி அல்லவோ நம்மிடம் இவளை ராஜ் ஒப்புவித்தார். இதை அவர் அறிந்ததால் எவ்வளவு விசனப்படுவாரோ? ஒருசமயம் உயிரை மாய்த்துக்கொண்டாலும் மாய்த்துக் கொள்வாரே. ஓ! நான் இதை எவ்வாறு காண்பேன்? இவள் இறப்பது நிச்சயம். நான் இனி ஒரு நிமிடமும் உயிருடன் இருக்கமாட்டேன். விண்ணுலகிற் சென்றாவது, நான் செய்த குற்றத்திற்கு சுலோசனாவிடம் மன்னிப்பு

கேட்டுக் கொள்கிறேன்' என்று பலவாறாக நினைத்து வருந்தி அருகில் இருந்த பாஷாணத்தை (Poison) குடித்தாள்.

மணி 5-30 ஆயிற்று. ராஜ் வெகு விரைவாக தன் வீடுவந்து சேர்ந்தார். டாக்டர் மேரி மேல்மாடியில் இருப்பதாக சேவகன் சொன்னான். உடனே தானும் மேலே சென்றார். ஆனால் அவர் அங்கு மேரியை காணவில்லை. சுற்று முற்றும் பார்த்தார். மேஜையின் மேல் தனக்கு ஒரு லெட்டர் வைத்திருப்பதைக் கண்டார். அதில் பின்வருமாறு வரைந்திருந்தது.

எனது அன்புள்ள ராஜ்,

நீங்கள் என்னை மன்னிக்க வேண்டுமென்பதே நான் என் கடைசிக் காலத்தில் விரும்புவது. அதுவே எனக்கு மிகுந்த திருப்தியை அளிக்கும். என் கம்பவுண்டர் கமலம் ஆயுதங்களை ஸ்டெர்லைஸ் (Sterlize) செய்ய மறந்து விட்டாள். ஆகையால் உங்கள் மனைவியின் உடம்பில் விஷம் ஏறி இருக்கிறது. நீங்கள் வருவதற்குள் அவள் இறப்பது நிச்சயம். நீங்களாகிலும் சென்றதை பற்றி கவலைகொள்ளாமல் இன்பமாக வாழ வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

என் சவத்தை இக்கட்டிலின் அடியில் காணலாம்.

இப்படிக்கு,

அபாக்கியவதி மேரி.

இதை வாசித்த உடன் அடியற்ற மரம்போல் கீழே விழுந்தார் ராஜ். தலையிலும் மார்பிலும் அடித்துக்கொண்டார். என் செய்வதென்று அவருக்கொன்றும் புலப்படவில்லை.

'ஐயோ! என் விதி இப்படியும் ஆமோ. என் அருமை மனைவி உயிர் நீத்தாளே. என் பாலிய சிநேகியும் அல்லவோ அநியாயமாக மாண்டாள். இவ்விரு பெண்களும் இறக்க காரணமாய் இருந்த என்னை யல்லவோ இப்பழி சாரும். அவள் பாஷாணம் குடித்த போது அவள் என்ன பாடுபட்டாளோ? மனைவியும், அருமை சிநேகியும் இறந்த பிறகு நான் உயிர் வாழ்வதெதற்கு? 'இதோ உங்களுடன் நானும் வருகிறேன். மேரி! நாம் வாழ்க்கையில் ஒன்று படாவிடினும் சாவிலாவது ஒன்று படுவோம்' என்று சொல்லிக் கொண்டே மேஜையின்மேல் உள்ள மீதி பாஷாணத்தை குடித்து மேரியின் அருகில் வீழ்ந்து மாண்டார்.

---

# காதலர் கஷ்டங்கள்

[தூயோன்]



(முன் வெளியான பாகத்தின் சுருக்கம்
மலர் 5. இதழ் 9. 1934)

முருகன் என்னும் வாலிபன் பெரியசாமிக் கவுண்டர் பெண் சின்னம்மாளைக் கண்டு காதல் கொள்கிறான். சின்னம்மாளும் அவன் மீது காதல் கொண்டாள். இருவரும் மணஞ் செய்து கொள்வதாக உறுதி செய்து கொள்ளுகிறார்கள். ஆனால் பெரியசாமிக் கவுண்டருக்கு இது சம்மதமில்லை. எனவே, தனது சொல்லைக் கேட்காத தனது மகள் சின்னம்மாளை வெளியே துரத்திவிடுகிறார். அவள் முருகனிடம் போய் சேருகிறாள். நான்கு நாட்களுக்குப் பின் அவர்கள் இருவரும் ஓர் வண்டியில் வெளியூருக்குப் போய்கொண்டிருந்தனர். அப்பொழுது முருகனை கொன்று தனது பெண்ணை தன்னிடம் கொண்டு வந்து சேர்க்கும்படி கையுறை கொடுத்து பெரியசாமி கவுண்டரால் தூண்டப்பட்ட கள்வர் தலைவன் கருப்பன் வேறு நான்கு சகாக்களுடன் அங்கு தோன்றி முருகனை விரட்டி விட்டு சின்னம்மாளைக் கொண்டுபோகிறான். பின்னர் முருகன் பெரியசாமி கவுண்டரிடம் போய் அவருடைய மகள் வந்தாளா என்று விசாரிக்கிறான். அப்பொழுது பெரியசாமி கவுண்டர் அவருடைய மகள் நான்கு நாட்களாக திருடர்கள் கையில் அகப்பட்டுக் கிடக்கிறாள் என்பதை முருகனிடமிருந்து தெரிந்துகொண்டு, தான் செய்த சதியை முருகனிடம் கூறுகிறார். பின்னர் இருவரும் சின்னம்மாளை மீட்கப் புறப்பட்டுச் செல்லுகின்றனர்.

நிற்க, சின்னம்மாளை கொண்டுசென்ற கள்வர் சின்னம்மாளை தான் தான் மனைவியாக அடையவேண்டும் என்று சச்சரவிட்டுக் கொண்டிருக்கின்றனர். அப்பொழுது கள்வர் தலைவன் கருப்பன் அங்கு வந்து தானே அவளை அடையவேண்டும் என்ற கருத்துடன் மற்றைய நான்கு சகாக்களைப் பார்த்து தான் அவர்களை கட்டிப் போட்டு விடுவதாகவும், அவர்களில் யார் கத்தியின் உதவியில்லாது முதலில் அவிழ்த்துக்கொண்டு வருகின்றானோ அவனுக்குச் சின்னம்

மாலைக் கொடுத்துவிடுவதாகவும் கூறுகிறான். அவர்களும் சம்மதிக்கிறார்கள். பின்னர் கள்வர் தலைவன் அவர்களைக் கட்டிப்போட்டு கொன்றுவிடுகிறான். அச்சமயத்தில் முருகன் அங்கு தோன்றுகிறான். கள்வர் தலைவன் அவன்மீது கத்தியை வீசினான். அவன் சற்று விலகவே, அவனுக்குப் பின்னால் வந்த கவுண்டர் மார்பில் அக் கத்தி பாய்ந்தது.

உடனே முருகன் ஆவேசத்துடன் கள்வர் தலைவன் மீது பாய்ந்து அவனைக் கொல்லுகிறான். பின்னர் முருகம்மாளை கண்டு பிடித்துக்கொண்டு குற்றுயிராய்க் கிடந்த கவுண்டரிடம் வருகிறான். அப்பொழுது கவுண்டர் தான் அவனுக்குச் செய்த துரோகத்தைக் கூறுகிறார். முருகன் அவரின் தமையன் மகன் என்றும், அவர் அவனுடைய சிறு வயதிலேயே இறந்துவிட்டார் என்றும், அவனுடைய சொத்தை அபகரிக்கும் நோக்கத்துடன் தான் இந்த ஊருக்கு வந்து ஒரு குடியானவனிடம் அவனை கொடுத்துவிட்டு அவனுடைய மகளான சின்னம்மாளைப் பெற்றுக்கொண்டதாகவும், அவர்கள் இருவரும் பிரியாமல் வாழ்வார்கள் என்று நம்புவதாகவும் கூறிவிட்டு உயிர் விடுகிறார். பின்னர் இருவரும் மணஞ் செய்து கொண்டனர். அவர்கட்கு ஓர் ஆண்மகவும் பிறந்துள்ளது.]

### மாயமாய் மறைந்தாள்.

முருகனும், சின்னம்மாவும் சந்தை வியாபாரம் செய்து வந்தார்கள். கொஞ்சம் வெல்லம் வாங்குவான். கொஞ்சம் பருப்பு வாங்குவான். அவைகளை சந்தைக்குக் கொண்டுபோவான். கொஞ்சம் லாபம் வைத்து விற்பான். இப்படியாக வியாபாரம் நடந்து வந்தது.

கொஞ்சம் கொஞ்சமாக லாபம் பெருகிற்று. கைமுதலும் பெருகிற்று. ஓர் வண்டிமாடு வாங்கினான் சாமான்களை சந்தைக்குக் கொண்டுபோக. நாட்களும் சந்தோஷமாகக் கழிந்து வந்தன. சின்னம்மா பக்கத்தில் இருக்கும் வரையில் முருகனுக்குக் கஷ்டம் என்பதே தெரிவதில்லை. ராஜாதான்.

ராஜாமுதல் பிச்சைக்காரன்வரை—யாராவது பிறந்தது முதல் இறக்கும்வரை, சந்தோஷமாகவே காலம் கழிக்கிறார்களா? ஒரே நாளிலேயே துக்கமும், சந்தோஷமும் ஒருவனிடம் கலந்துதான் காணப்படுகின்றது. துக்கமோ, சந்தோஷமோ ஒருவனிடம் நிலை பெற்று இருக்கிறதா? பணத்தைப் போலத்தான்.

மனிதன்முதல் எல்லா ஜீவராசிகளும் இக்கொள்கையில் கட்டுண்டிருக்கும்பொழுது முருகனும், சின்னம்மாவும் மாத்திரம் விதிவிலக்கா என்ன? இல்லை. அவர்கள் வாழ்க்கையிலும் துக்கமான சம்பவங்கள் நிகழத் தொடங்கின.

முதல்முதலாக அவர்கள் 3 வயதுச் செல்வக் குமாரனை அந்த எமன் காய்ச்சல் ரூபமெடுத்துவந்து கொள்ளை கொண்டான். இத் துக்கம் அவர்களை விட்டகல சுமார் 6 மாதங்கள் பிடித்தது.

* * *

அன்றையதினம் இரவு பக்கத்து ஊரில் நடக்கும் சுவாமி ஊர் வலக் காட்சியைப் பார்க்க ஊரார் கும்பல் கும்பலாய்ச் சென்று கொண்டிருந்தனர். முருகனும், சின்னம்மாவும் சும்மாயிருப்பார்களா?

அன்றைய மாலை 4 மணிக்குப் புறப்பட்டார்கள். கை ஜோடித்துக்கொண்டும், உல்லாசமாகப் பேசிக்கொண்டும், சிரித்துக்கொண்டும் முருகன் சின்னம்மாவைப் பார்த்து கண்ணடிப்பதும், அப்பொழுது சின்னம்மாவின் தேஜஸ்பொருந்திய முகத்தில் புன்சிரிப்பு தவழுவது மாக இவ்வைபவங்களுடன் 5 மைல் தூரத்தை கஷ்டமின்றி கடந்து விட்டார்கள்.

சுமார் 9 மணிக்கு சுவாமி கோயிலினின்றும் புறப்பட்டது. ஒரே கூட்டம்.

சின்னம்மா எங்கேயாவது பிரிந்துவிடுவாள் என்று முருகன் சின்னம்மாவின் கையை அழுத்திப் பிடித்தவண்ணம் ஒவ்வொரு காக்ஷியாகப் பார்த்தவண்ண மிருந்தனர்.

சுவாமியை நன்றாக தரிசிப்பதற்காக கூட்டத்தில் நுழையவேண்டியதாயிற்று. அப்பொழுதுகூட கைஜோடிப்புடன் செல்ல முடியுமா?

முருகன் கையை விட்டுவிட்டு வழி செய்துகொண்டு உள் நுழைந்தான். சின்னம்மாவும் கஷ்டப்பட்டுக்கொண்டு பின் தொடர்ந்தாள்.

'சின்னம்மா! அலங்காரத்தைப் பார். எவ்வளவு புஷ்பங்கள்! அப்பா! சுவாமியின்பேரில் எவ்வளவு ஆபரணங்கள்!' என சுவாமியைப் பார்த்தவண்ணம் சின்னம்மாவுக்கு விவரித்துக் கொண்டிருந்தான்.

திரும்பினான். என்ன ஆச்சரியம்! சின்னம்மாளைக் காணவில்லை.

முருகன் பிரமித்துவிட்டான். மலைத்து நின்றுவிட்டான். செய்வது இன்னதென்று தெரியவில்லை. அடுத்தநிமிடம் கூட்டத்தை நெட்டித் தள்ளிக்கொண்டு வெளியே வந்தான். சுற்றிலும் நோக்கினான். காணவில்லை. கூட்டத்தை ஆராய்ந்தான். மல்லிகையும் மருக்கொழுந்தும் சூடிய தலையைத் தேடிக்கொண்டிருந்தான். காணவில்லை. பித்தம் பிடித்தவன் போலானான். கால்கள் ஓரிடத்தில் நிற்கவில்லை. அந்த மூலைக்கு ஓடுகிறான். மற்றொரு பக்கம் ஓடுகிறான். கூட்டத்தில் நெட்டித் தள்ளிக்கொண்டு உள் நுழைந்து நோக்கினான். காணவில்லை! காணவில்லை!!

அவனுடைய கண்களினின்றும் இரண்டு முத்துப்போன்ற நீர் துளிகள் வழிகின்றன.

## பேய் பிடித்த வீடு.

இரவு மணி 11. ஒரே அந்தகாரம். முருகன் வீட்டினுள் ஒரு அறையில் படுத்துக்கொண்டிருந்தான். அவனுக்கு நித்திரை வரவில்லை. சிறு குழந்தையாவது பரவாயில்லை என்று சொல்லலாம். அப்படி புரண்டுகொண்டிருந்தான். அவன் மனக்கண்ணினின்று சின்னம்மா மறைந்தாலல்லவா அவனுக்கு நித்திரை வரும். கண்களை மூடினாலும் மனக்கண்முன் அவளே! கண்களைத் திறந்தாலும் அகக்கண்முன் அவளே! என்ன செய்வான்?

'எங்கு அவதிப்படுகிறாயோ? யார் கையில் சிக்கினாயோ? எப்படி உன்னைப் படுத்துகிறார்களோ? அன்றி எங்கு பிச்சை எடுக்கிறாயோ?' என்பதுதான் அவனுடைய சதா கால ஜபம்.

மணி 1-ம் அடித்தது. அப்பொழுதும் அவனுக்குத் தூக்கம் வரவில்லை.

திடீரென வீட்டின்பேரில் யாரோ நடப்பது போல் அவன் பாம்புக் காதுகளுக்குக் கேட்டது. திடுக்கிட்டான். மேற்புறத்தை கூர்ந்து நோக்கினான். காதுகள் நடமாடும் சப்தத்தை வெகு தீக்ஷண்யமாகக் கேட்டன, உடனே எழுந்தான். அறையின் கதவை மெதுவாகத் திறந்து சிறிது வெளியே வந்து மேல் நோக்கினான். வீட்டின்மேல் இருவர் நின்றுகொண்டிருத்தலையும், இறங்க முயற்சித்துக் கொண்டிருத்தலையும் கண்டான்.



தாழ்ந்திருந்த விட்டத்தினின்று தாழ்வாரத்துக்கு இறங்குவது கஷ்டமல்ல.

முருகன் ஓர்விநாடி அப்படியே நின்றான். அச் சமயத்தில் அவர்கள் இருவருடனும் நேருக்கு நேர் நின்று சண்டை செய்வது அவனுக்கு உசிதமாகத் தோன்றவில்லை. ஆகாயவெளியில் மின்னல்

தோன்றி மறைதல்போல் அவனுடைய மூளையில் ஓர் மின்னல் 'பளிச்'செனத் தோன்றியது. அது ஓர் யுக்தி.

உடனே ஓர் வேஷ்டியை எடுத்தான். அதன் இரண்டு நுனிகளையும் அறையின் சுவரிலிருந்த இரண்டு ஆணிகளில் முடித்து நீளப்போக்காகத் தொங்கவிட்டான். அதன் அடிப்பாகம் தரையில் தாராளமாய் படிந்திருந்தது. மாடுகட்ட உபயோகிக்கும் ஓர் கயிற்றை எடுத்துக்கொண்டான். மங்கலாக எரிந்து கொண்டிருந்த விளக்கை ஊதினான். சுவரில் கட்டின வேஷ்டிக்குள் புகுந்தான். வேஷ்டியில் இருபக்கத்தில் இரண்டு துவாரங்கள் செய்தான். அதன் மூலமாக வெளியே நடப்பதைப் பார்க்கலாம். கயிற்றின் இரண்டு நுனிகளையும் இரண்டு கைகளிலும் பிடித்துக் கொண்டான். ஒவ்வொரு கையும் வேஷ்டியின் ஒவ்வொரு பக்கத்திலுள்ளன.

இப்பொழுதுதான் ஆசாமிகள் தாழ்வாரத்தில் இறங்கும் சப்தம் கேட்டது.

முருகன் வாசற்பக்கமாக கயிற்றை வட்டமாகப் போட்டுவிட்டு இரண்டு கைகளிலும் இரண்டு நுனிகளைப் பிடித்துக்கொண்டான். வேஷ்டியிலுள்ள துவாரத்தின் வழியாய் திருடர்கள் வரவை எதிர் பார்த்தவண்ணம் இங்கிலையில் நின்றான்.

திருடர் வீட்டை யெல்லாம் தேடினார்கள். அவர்களுக்கு வேண்டிய பொருள் கிடைக்கவில்லைபோ லிருக்கிறது. ஒருவன் மெதுவாக அறையின் வாசற்படிப் பக்கம் வந்தான. வெளியே நின்றவண்ணம் கொஞ்சமாகத் திறந்திருந்த கதவை இன்னும் கொஞ்சம் திறந்தான். உள்ளே உற்று நோக்கினான். அந்த அந்தகாரத்தில்கூட படுக்கையைக் கண்டு பிடித்துவிட்டான்.

'பயல் உள்ளேதான் படுத்திருக்கிறான்போ லிருக்கிறது' என மற்றவனுடைய காதில் மெதுவாக ஓதினான்.

'சரி, நடத்து காரியத்தை' என மற்றவனும் சொல்லிவிட்டான்.

உடனே அப்பயல் வெகு மெதுவாக இடது காலை மாத்திரம் தூக்கி உள்ளே வைத்தான். கால் வட்டமான கயிற்றின் நடுவில் இருந்தது.

சமயத்தை எதிர்பார்த்துக் கொண்டிருந்த முருகன் கயிற்றை கொஞ்சம் தூக்கியபடி காலைச் சேர்த்து இழுத்தான். திருடன் அப்படியே வாசற்படிக்கு அப்புறம் விழுந்தான். முதுகு வலிக்கிறது தான். ஏன் வாயைத் திறக்கிறான்! தேள் கொட்டிய திருடன் போலத்தான்.

மற்றவனோ தப்பித்துக்கொள்ள வழி தேடத் தொடங்குகின்றான்.

'டேய்! பிசாசு' என்றான் மெதுவாகக் கீழே விழுந்தவன்.

ஓடப்போனவன் உடனே நின்றுவிட்டான். அவன் பிசாசு என்றால் நம்புவதில்லை.

'பிசாசுதானே? பரவாயில்லை. நான் போய் பார்க்கிறேன்' என வீராப்புப் பேசிக்கொண்டே புறப்பட்டான்.

இவர்கள் பேசும் ஒவ்வொரு வார்த்தையும் முருகன் கேட்டுக்கொண்டே தானிருந்தான். தன் சூழ்ச்சிக் கயிற்றை தயார்படுத்தி விட்டான்.

கீழே விழுந்த பேர்வழி வீதிக்கதவை மெதுவாகத் திறந்து வைத்துக்கொண்டு தயாராய் நின்றான்.

வீராப்புப் பேசியபயல் உள்ளே நுழைந்து நின்றுகொண்டு படுக்கையைக் கொஞ்சம் பார்த்தான். வேண்டியது முருகன். உள்ளது கூர்மைக் கத்தி. நடத்த வேண்டியது கொலை. அவனது இரண்டு கால்களும் கயிற்றின் நடுவில் விழுந்தன.

முருகன் கொஞ்சம் பலத்தை உபயோகித்து கயிற்றை இழுத்தான்.

திருட்டுப் பயல் அப்படியே வேரற்ற மரம்போல் கீழே சாய்ந்தான். 'டே! காட்டேரிடா' என வலியைக் கூடக் கவனிக்காமல் எழுந்துவிட்டான். இருவரும் பந்தயம் போட்டுக்கொண்டு ஓட ஆரம்பித்தார்கள்.

முருகனுக்குத் தன் மனைவி ஞாபகம் கூடப் போய்விட்டது. அவனுடைய முகத்தில் களைபொருந்திய சிரிப்புத் தவழ்ந்தது.

## ஏமாந்தார்கள்

ஒருநாள் இரவு சுமார் 8½-மணி இருக்கும். சந்திரனும் கொஞ்சநேரம் உலகத்தோருக்கு காட்சியளிப்பதும், கொஞ்சநேரம் கருமேகத்தில் மறைந்திருப்பதுமாக ஆகாச பவனி வந்துகொண்டிருந்தான்.

முருகன் பக்கத்து ஊரில் மறுநாள் நடக்கும் சந்தைக்குப்போக வண்டியை தயார்செய்து கொண்டிருந்தான். மாட்டிற்கு தீனி போட்டுக்கொண்டிருந்தான். அப்பொழுது இருவர் இவனையும், வீட்டையும் உற்று நோக்கியவண்ணம் சென்றனர். முருகனும் கவனித்தான். ஆனால் அப்பொழுது அதை பொருட்படுத்தவில்லை. மறுபடி அதே இருவர். முருகனும் கண்டான். கொஞ்சம் சந்தேகம். 10 நிமிடங்கள் கழிந்தன. அதே இருவர். முருகனையும், வீட்டையும் பார்த்தவண்ணம் கொஞ்சத்தூரம் மெதுவாகப்போய் பின் கொஞ்சம் வேகமாக நடந்தனர். முருகன் கொஞ்சம் கவனித்தான், நினைத்தான்.

அப்படியே வண்டியைவிட்டு, வீட்டை மூடிக்கொண்டு அவ்விருவரையும் பின் தொடர்ந்தான்.

சுமார் 2 பர்லாங் சென்றிருப்பார்கள். அங்கு ஓர் தோட்டம். நடுவில் ஓர் கூரைவீடு. இருவரும் அதை நோக்கி நடந்தனர். முருகன் விட்டவனல்ல.

இருவரும் வீட்டினுள் நுழைந்து கதவை மூடினார்கள். அதே நிமிடம் முருகன் 'விரு, .விரு' வென வீட்டின்பக்கம்போய்ச் சேர்ந்தான்.

கதவில் ஓர் துவாரமிருந்தது. அதன் மூலமாய் தன் பார்வையை உள்ளே செலுத்தினான், பார்த்தவன் திகைத்துவிட்டான்.



பிரமித்து சிலைபோல் நின்றுவிட்டான். அவன் கண்ட காட்சிதா னென்ன?

தன் சொந்த மனைவியை உள்ளே கண்டான். சின்னம்மா ஓர் தூணில் கட்டப்பட்டிருந்தாள். வேறொரு பெண் துன்புறுத்திக்கொண்டிருந்தாள்.

அவன் கண்டது இதுதான். அவனுடம்பு பதறியது. அவனை மீறி வெளிவாவிருந்த கூச்சலை கையினால் வாயை மூடி அடக்கினான்.

'என்னடி சொல்றே?' என்று அந்தப்பெண் சின்னம்மாவைக் கேட்டாள்.

'முடியவே முடியாது' என்பது சின்னம்மாவின் பதில்.

'என்ன முடியாது?' என்று ஓர் கிள்ளு.

'ஐயோ! அப்பா!' கொலைசெய்து விடுங்களேன்' என மளமளவென கண்களினின்றும் கண்ணீர் உதிர்த்துக் கலங்கினாள்.

முருகன் கன்னங்கள் கண்ணீரால் நனைந்தன.

'உன்னை கொலைசெய்வதா? எங்களுக்கு இணங்காவிடில் விட்டுவிடுவோம் என்று நினைத்தாயாக்கும்' என்றான் நால்வரில் ஒருவன்.

'ஏண்டி இணங்கப்படாது? உன்னுடைய அழகைவிட அவர்கள் அழகு குறைந்தா போய்விட்டது?' என்று மற்றோர் அடி.

'நான் சுத்த மூதேவிதான். என்னை விட்டுவிடுங்களேன். வேறு அழகான பெண்களைக் கலியாணம் செய்துகொண்டு சுகமாய் வாழுங்களேன்.'

'என்னமோ ஆசைப்பட்டார்கள். நீ முடியாது என்று எப்படிச் சொல்லலாம்?' என்று நறுக்கென தலையில் ஓர் குட்டு.

'இப்பொழுது இணங்கமாட்டாய். இன்றைக்கே, இந்த இரவே 2 மணிக்கு கெஞ்சிக்கொண்டு வரப்போகிறாய் பாரு. உன் புருஷன் சந்தைக்குப் போகப்போகிறான். அவனை மடக்கி கொண்டுவந்து விடுகிறோம். அவன் வாழவேண்டுமானால் நீ எங்களுக்கு இணங்க வேண்டும். மறுத்தாயோ அவன் தீர்ந்தான். நீயோ சித்திரவதையில் உழன்று பரலோக யாத்திரை செய்யப்போவதுதான் லாபம். ஆனால் அவ்வளவு தூரம் வைத்துக்கொள்ள மாட்டாயே. நீயே யோசி' என்றான் ஓர் சோதாப்பயல்.

முருகனுக்கு சமாச்சாரம் விளங்கிவிட்டது. அவர்கள் சூழ்ச்சியை நன்றாக அறிந்து கொண்டான். உடனே புறப்பட்டான்.

சுமார் 10 நிமிடம் சென்றது. ஒருவன் சின்னம்மாவுக்குக் காவலாக வீட்டிலேயே தங்கினான். மற்ற மூவரும் முருகனைப் பிடித்துவரப் புறப்பட்டார்கள். மூவரும் முருகன் வீட்டிற்கு எதிரில் ஓரிடத்தில் மறைந்து கொண்டனர்.

இப்பொழுதுதான் முருகன் வீட்டினுள் நுழைந்தான். 10 நிமிடம் கழிந்தது ஓர் போர்வையால் போர்த்திக்கொண்டு வீட்டிலிருந்து ஒருவன் வந்து வண்டியிலேறினான். வண்டியை ஓட்டத்தொங்கினான்.

'அப்பாடி வந்தானா?'

'இனி நம் கையில் இருக்கிறமாதிரி.'

'சரி நடவுங்கள்'

வண்டி சென்றுகொண்டிருக்கிறது. மூவரும் 30 அடிக்குப் பின்னால் நடந்தார்கள்.

வண்டி ஊரைத் தாண்டிவிட்டது. பாதையின் இரு பக்கங்களிலும் அடர்ந்த மரங்கள். ஒரே அந்தகாரம்; வண்டியின் அடியில் தொங்கவிடப்பட்டிருந்த சிறிய விளக்கின் கொஞ்ச வெளிச்சம்தான் வழியைக் காண்பித்துக்கொண்டிருந்தது.

'யார்ரா அவன்? நிறுத்து வண்டியை' என்றான் மூவரில் ஒருவன்.

உடனே மூவரும் வண்டியின் பக்கம் வந்தார்கள். வண்டியும் நின்றது.

'இறங்கு கீழே'

ஒருவர் முகத்தை ஒருவர் பார்க்கக்கூட முடியாத அவ்வளவு இருட்டு.

'எதற்காக?'

'எதற்காகவா? இறங்கு சொல்லுகிறேன்' என்றான். உடனே வண்டியின் அடியில் கட்டப் பட்டிருந்த விளக்கை எடுத்து பிரகாசத்தை வண்டியில் செலுத்தினான்.



மூவரும் பிரமித்து விட்டார்கள். மூவர் முகங்களிலும் அசடு வழிகிறது. ஒருவரை யொருவர் பார்த்துக் கொண்டு ஒரு நிமிடம் நின்றார்கள்.

வண்டியில் முருகன் காணவில்லை வேறொருவன் ஓர் போர்வையை நன்றாகப் போர்த்திக்கொண்டு உட்கார்ந்துகொண்டிருந்தான். பாவம்! ஏமார்ந்தார்கள். சின்னம்மாவின் கற்பை அழிக்கப்போகிறோம் என எவ்வளவு சந்தோஷத்துடனிருந்தார்கள்! அவ்வளவும் மண்.

திடீரென வண்டியினுள்ளே நோக்கினார்கள். சாமானிருந்தால் அதையாவது கொள்ளையடிக்கலாமென்றுதான். ஆனால் வெறும் வண்டி.

'சோதாப்பயலே. நீயேன்டா வந்தே' என கோபத்துடன் வண்டியிலிருந்தவனுக்கு ஒருவன் ஒரு அடி கொடுத்தான்.

திடீரென மூவரும் ஏதோ நினைத்துக்கொண்டார்கள். வண்டியை அப்படியே விட்டுவிட்டு வீட்டைநோக்கி ஓட்டம்பிடித்தார்கள்.

## ஒன்று சேர்ந்தார்கள்

வண்டியில் தந்திரமாக தன் நண்பனை அனுப்பிவிட்டதும், முருகன் திருடர் வசிக்கும் வீட்டைநோக்கி வெகு வேகமாகச் சென்றான். வீட்டின் முன் சென்றதும் முகம் தெரியாதவாறு ஓர் வேஷ்டியை முகத்தின் முன்னால் தொங்கப் போட்டுக்கொண்டான். குனிந்து நின்றான். கதவைத் தட்டினான்.

'யாரது?' என உள்ளிருந்தவன் கேட்ட வண்ணம் கதவைத் திறந்தான்.

'கொஞ்சம் சாதமிருந்தால் போடுங்......' என தள்ளாடிய வண்ணம் கேட்டான்.

'சோறும் கிடையாது. சாறுங்கிடையாது' போடாவென சொல்லிய வண்ணம் கதவை மூடப்போனான்.

ஆனால் ஓர் கையில் கதவைப் பிடித்துக்கொண்டு மற்றொரு கையில் தன் முகத்தை மூடியிருந்த துணியை விலக்கிவிட்டு அவன் முகவாய்க் கட்டையில் ஓங்கி ஒரு குத்துவிட்டான்.

முருகனைக் கண்டதும் திக்பிரமையடைந்து, அடிவாங்கிக் கொண்டு 'தடால்' எனக் கீழே வீழ்ந்தான்.

முருகனைக் கண்ட சின்னம்மா 'ஆ' வென சந்தோஷ மிகுதியால் தன்னையு மறியாமல் கூச்சலிட்டு விட்டாள். அவள் இன்னும் தூணில் கட்டப்பட்டுத்தானிருந்தாள்.

படுத்துக்கொண்டிருந்த அந்த தாசிப்பெண் எழுந்துவிட்டாள். நிலைமையை அறிந்ததும் முருகன் பக்கம் வந்தாள். அப்பா! அவளுக்கு என்ன தைரியம்! ஆண்பிள்ளை! முருகனை அடிக்கவந்தாள்.

இதற்குள்ளாக அடிபட்டவன் தட்டுத் தடுமாறிக்கொண்டு கோபத்துடன் எழுந்தான்.

முருகன் அவன் காலின்பேரில் ஓர் உதைகொடுத்தான், அப்படியே வீழ்ந்தான். சரியான அடி மூர்ச்சையானான்.

சின்னம்மாவை அத்தாசிப்பெண் எத்தனைதரம் அடித்தாள், கிள்ளினாள்! அதை மறந்தாவிடுவான்? ஓங்கி ஒரு உதை.

தாசி அப்படியே கீழே வீழ்ந்தாள், இன்னொரு அடி மூர்ச்சையானாள்.

'பர், பர்' வென சின்னம்மாளைக் கட்டியிருந்த கட்டுகளை அவிழ்த்தான். ஒரு நிமிடமும் பிரியாதிருந்த காதலர் மறுபடியும் சுமார் 10 நாட்கள் கழித்து ஒன்றுசேர்ந்தார்கள். அந்த இடத்திலேயே ஓர் ஆலிங்கனம். கணக்கற்ற முத்தங்கள்.

முருகனுடைய சந்தோஷம் சொல்லமுடியாது. அப்படியே காதலியை இரண்டு கைகளாலும் வாறி எடுத்துக்கொண்டு வீட்டினின்றும் வெளியே வந்தான். கீழே விட்டான், கை ஜோடித்துக் கொண்டார்கள். வெகுவேகமாக வீட்டை நோக்கிச் சென்றார்கள்.

வீட்டின் உள்ளே சென்றதும் கதவை மூடினன். இருவரும் உட்கார்ந்தார்கள்.

'ஆமா அன்று எப்படி தவறிவிட்டாய்? எப்படி இவர்களிடம் சிக்கினய்?

'அந்தப் பெரிய கூட்டத்தில் உங்கள் பின்னல்தான் நின்று கொண்டிருந்தேன். பின்னல் இருந்தவர்கள் நெட்டித் தள்ளத் தள்ள வேறுபக்கம் தவறிப்போய்விட்டேன். எங்கெங்கேயோ அலேந்தேன். அச்சமயத்தில் இந்த நால்வரும் வந்து, என்னேத்தான் அவர்கள் தேடுவதாகவும், அவர்கள் உங்களுடைய சிநேகிதர்கள் என்றும், நீங்கள் ஓரிடத்திலிருப்பதாகவும் கூப்பிட்டார்கள். உங்கள் பேரைக் கேட்டதும் சந்தோஷப்பட்டேன். நான் அப்பொழுது ஒன்றும் நினேக்கவில்லே. கொஞ்சத்தூரம் சென்றதும், என்னே வண்டியில் ஏறச்சொல்லி, நீங்கள் ஓரிடத்தில் துக்கத்துடனிருப்பதாகவும் அங்கு அழைத்துச் செல்வதாகவும் சொன்னர்கள். நானும் ஏறிக் கொண்டேன். வண்டி கொஞ்ச தூரம் சென்றது. பக்கங்களில் அங்கு ஆட்களே யாரும் இல்லே அச்சமயத்தில் திடீரென அந்நால்வரும் என்னே அழுத்திப் பிடித்துக்கொண்டு தயாராய் வைத்திருந்த துணிப்பந்தை என் வாயில் அடைத்துவிட்டார்கள். நான் இப்பொழுது அடைபட்டிருந்த அதே இடத்திற்குத்தான் என்னேக் கொண்டுபோனர்கள். பின் அந்த முண்டை என்னேப் படாதபாடு படுத்தினள்.'

'நீங்கள் எப்படி என்னேக் கண்டு பிடித்தீர்கள்' என சிரித்த வண்ணம் காதலனேக் கேட்டாள்.

தான் கண்டுபிடித்த விதத்தைச் காங்கோ பாங்கமாகச் சொல்லி முடித்தான்.

மேலும் சொன்னன். 'என்னேச் சந்தைக்குப் போகும்வழியில் சதிசெய்ய நினேத்தார்களல்லவா? நான் அவர்கள் பேசினதை வெளியிலிருந்து கேட்டேன். உடனே என் நண்பன் வீட்டிற்குச் சென்றேன். சமாச்சாரத்தையெல்லாம் அவனிடம் சொன்னேன். அவனே வீட்டின் பின்புறவழியாக வரச்சொல்லிவிட்டு நான் வீட்டிற்குச் சென்றேன். நண்பனும் வந்தான்; என்னே அப்பயல்கள் ஒளிந்தவண்ணம் எதிர்பார்த்திருக்கிறர்கள். என் நண்பனே ஓர் கரும்போர்வையால் போர்த்தி வண்டியில் ஏறிப்போகும்படி சொல்லி விட்டு நான் வீட்டிலேயே தங்கிவிட்டேன். நண்பனும் வண்டியை ஓட்டிச் சென்றுன். அத்திருட்டுப் பயல்களும் நான்தானென பின்

தொடர்ந்தார்கள். இச்சமயத்தில் நான் உன்னை வந்து காப்பாற்றினேன்.

10 நாட்களாக ஏமார்ந்துபோயிருந்த முத்தங்கள் கணக்கின்றிச் செலவாயின. இருவருடைய அதரங்களும் ஒன்று சேர்ந்தன.

திடீரென யாரோ கதவைத் தட்டினார்கள்.

'நான்தான் கதவைத் திறடா'

அப்பாடி! போன உயிர் இருவருக்கும் திரும்பிவந்தது. கதவைத்தட்டியது முருகனுடைய நண்பன். கதவும் திறக்கப்பட்டது.

'எப்படி நம் தந்திரம்? ஜெயந்தானே?' எனக் கேட்டான் முருகன்.

'சந்தேகமில்லாமல்! பாதி வழியில் வண்டியை நிறுத்தினார்கள். என்னைக்கண்டு விழித்தார்கள். எனக்கு ஒரு அடிகூடக் கொடுத்தார்கள். உடனே ஏதோ நினைத்துக்கொண்டு ஓட்டமெடுத்தார்கள். உன் காரியம் ஜெயந்தானே?'

'ஜெயந்தான். சந்தேகப்படாதே. இதோ பார் சின்னம்மா.'

அன்றிரவு நண்பனும் அங்கேயே படுத்துக்கொண்டான். அத்திருட்டுப் பயல்கள் திரும்பியும் வந்தாலும் வருவார்களல்லவா? உதவிக்காக அங்கு படுத்துக்கொண்டான்.

(தொடரும்)



# குவெட்டா பூகம்பத்தில் ஜானகிராமன்

[ப. நீலகண்டன்]

(சென்றமாதத் தொடர்ச்சி)



ராவ்பகதூர் சோமசுந்தரம் மிகுந்த செல்வாக்குடைய மனிதர். அவருக்கு நெருங்கிய நண்பர்களில் டாக்டர் கண்ணப்பர் ஒருவர். டாக்டர் கண்ணப்பரும் ராமனும் கலாசாலையில் ஒன்றாக படித்தவர்கள். ஒரு தினம் கண்ணப்பரும் ராமனும் சேர்ந்து சோமசுந்தரம் வீட்டுக்கு சென்றார்கள். அப்பொழுது டாக்டர் சோமசுந்தரத்திற்கு ராமனை அறிமுகப் படுத்திவைத்தார். அன்றையதினத்திலிருந்து ராமன் சோமசுந்திரத்திற்கு நண்பனாகிவிட்டான். தினமும் ராமன் சோமசுந்தரம் வீட்டிற்கு செல்லத் தவறுவதில்லை. ஜானகியையும் தினம் பார்த்தான் என்பது சொல்லாமலே விளங்கக்கூடியது. இவ்வாறு சுமார் $1\frac{1}{2}$ மாதகாலம் நடந்தது. ஒருநாள மாலை ஜானகியும் ராமனும் பேசிக்கொண்டிருக்கும் பொழுது, 'தங்களைப்பற்றிய பூரா விபரங்களையும் தெரிந்துகொள்ள வேண்டுமென்றாள்' ஜானகி. 'ஆ! அப்படியே தெரிவிக்கிறேன்' என்று அவள் என்ன என்ன தெரிந்துகொள்ளப் பிரியப்படுகிறாளோ அவைகளையெல்லாம் ராமனும் தெரிவித்தான். சுமார் மூன்று மாதங்கள் கடந்தது. சிறந்த அறிவும், போதிய கல்வியும், நல்ல அழகுமுடைய வாலிபனாகிய ராமனும் அதேமாதிரி கட்டழகு வாய்ந்த காரிகை ஜானகியும் தினமும் சந்தித்து ஒருவரோடொருவர் பேசிவந்தமையாலும் அவர்களுக்குள் காதல் வித்தானது முளைக்க வாரம்பித்தது. இளம் வாலிபர்கள் ஒருவர்பால் இன்னொருவர்கொண்ட அன்பின் தன்மையை வெளிப்படுத்திக்கொள்ளவேண்டிய தவசியம். அவர்களுடைய காதலானது பூரணவளர்ச்சி யடைந்தது. காதலர்கள் தங்களுடைய மனதிலுள்ளதை வெளியிட்டுக்கொண்டனர். அவர்கள் ஒருவரை யொருவர் விவாகம் செய்துகொள்வதென ஒப்பந்தம் செய்துகொண்டனர்.

* * *

ஒரு நாள் காலை 8 மணி இருக்கலாம். சோமசுந்தரம் கான் வாசில் சாய்ந்தவண்ண மிருந்தார். ஜானகி ஒரு நாற்காலியில் அமர்ந்

திருந்தாள். சோமசுந்தரம் ஜானகியைப் பார்த்து, 'அம்மா இங்கே வா. இந்த புகைப்படத்தை பார்' என்று ஒரு புகைப்படத்தைக் காண்பித்தார். ஜானகி அப்படத்தை வாங்கிப் பார்த்துவிட்டு, 'அப்பா இது யார்' என்றாள்.

சோம:—அவர் 'குவெட்டா'வில் ஒரு பெரிய உத்தியோகம் வகிப்பவர். பெரிய பணக்காரர். அவரைத்தான் உனக்கு மணாளனாக சேர்க்கெடுக்கிறேன்' என்றார்.

'எனக்கா?' என்றாள். மறுபடி பேசாமல்போய் நாற்காலியில் உட்கார்ந்தாள்.

'அப்பா! எனக்கு இப்பொழுது கலியாணம் தேவையில்லை.'

'என்?'

'ஏனென்றால்! அதென்ன கேள்வி?'

'இது என் இஷ்டமே தவிர, உன் அபிப்பிராயத்தை பொறுத்ததல்ல.'

'என்னுடைய வாழ்க்கையில் நடக்கவேண்டிய சம்பவத்தில் உங்களுக்கு பொறுப்பிருந்தாலும் என்னுடைய சௌகரியத்தையும் உத்தேசித்ததாகத்தான் இருக்கவேண்டும். முக்கியமாக இந்த மாப்பிள்ளை தேவையில்லை.'

'என்ன அப்படிச் சொல்கிறாய்? இவன் எந்தவிஷயத்தில் குறைந்தவன்.'

'உங்களுக்கு அவர் சிரேஷ்டமாகத் தோன்றலாம். நானல்லவோ அவருடன் இருந்து வாழவேண்டியவள். சிலமாதகாலமாக தங்களிடம் வந்து போய்கொண்டிருக்கிறாரே ராமன்......'

'ஓ! ராமனா! அவனை எனக்குத் தெரியும். ஒரு பைசாவுக்கும் பிரயோஜனப் படாதவன்.'

'என் அவருக்கு படிப்பில்லையா, அழகில்லையா?'

'படிப்பும் அழகும் இருந்தால் போதுமா? படிப்பும் அழகும் வயிற்றுப்பாட்டிற்கு என்ன செய்யும். பாவம் பைசாகூட அவனிடமில்லை.

'ஏன் இனிமேல் அவர் சம்பாதிக்கமாட்டாரா? அவரை கலியாணம் செய்துகொள்வதில் என்ன தடையிருக்கிறது? அவரை நான் கலியாணம் செய்துகொண்டால் நம்மிடம் ஆஸ்தியிருக்கிறது.'

'இதோ குவெட்டாவில் இருப்பவருக்கு ஆஸ்தியுமிருக்கிறது, படிப்புமிருக்கிறது, அழகுமிருக்கிறது.

'இருந்தாலென்ன? அவருடைய குணாதிசயங்களைப்பற்றி எனக்கு ஒன்றுமே தெரியாது. என்னுடைய குணம் அவருக்கு பிடிக்குமோ பிடிக்காதோ. அல்லது அவருடைய குணம்தான் எனக்கு பிடிக்குமென்பது என்ன நிச்சயம்'

'நான் ராமனை திடீரென கலியாணம் செய்துகொள்ள உத்தேசித்து விடவில்லை. இவ்வளவு காலமாக அவருடன் பழகி அவருடைய யோக்யதாம்சங்களைத் தெரிந்துகொண்ட பின்னரே என் முடிவைத் தெரிவித்துள்ளேன்.'

சோம:—நான் உன்னிடம் பேசிக்கொண்டிருப்பதே தப்பு. உனக்கு கணவனை தேர்ந்தெடுப்பதும் கலியாணம் செய்துவைப்பதும் என்னுடைய இஷ்டத்தைப் பொறுத்தது. உன்னுடைய கணவன் வீட்டில் உனக்கு வேண்டிய சுதந்திரங்களை காட்டிக்கொள்ளலாம். உன்னுடன் தர்க்க வாதம் செய்துகொண்டிருக்க நான் தயாராயில்லை. நாளைய இரவு குவெட்டாவிற்கு செல்லவேண்டுமென்பதை ஞாபகபடுத்திக்கொள்.' என்று வெளியில் எழுந்துசென்றார்.

ஜானகி மெள்ள எழுந்தாள். அவளால் எழுந்திருக்கக்கூட சக்தியில்லைபோலிருக்கிறது. கண்களிருந்து நீர் தாரை தாரையாக வடிந்தது. மெல்ல தட்டுத்தடுமாறி கட்டிலில் சாய்ந்தாள். தலையணை கண்ணீரால் நனையும்போல் இருந்தது.

மறுநாள் மாலை சோம்சுந்தரம்பிள்ளை பிரயாணத்திற்கு வேண்டிய சாமான்களை தயார் செய்தார். அவருக்கு ஜானகியைப்பற்றி கவலையே இல்லை. வாசலில் கார்வந்து நின்றது. 'ஜானகி எழுந்து வா' என்று அதட்டிய குரலில் கூப்பிட்டார் தந்தை. ஏதோ சக்தியால் கட்டுண்டவள்போல் பேசாமல் எழுந்து சென்றாள். காரில் ஏறி உட்கார்ந்ததும் 'விர்'ரெனப் புறப்பட்டது கார்.

* * *

'காங்கிரசுக்கு அங்கத்தினர்கள் சேர்க்கும் வேலையில் இருந்துவிட்டதால் இரண்டு நாளாய் ஜானகியைப் பார்க்க முடியவில்லை. இன்று போகவேண்டு'மென தீர்மானித்தவனாய் புறப்பட்டு வந்தான் ராமன். பங்களாவின் வெளிப்புறத்தில் காவற்காரன் உட்கார்ந்திருந்தான். ராமனைக் கண்டதும், 'வாங்கய்யா, ஐயா இல்லீங்களே' என்றான். ஐயா இருந்தால் என்ன, இல்லாவிட்டால் என்ன, அதைப்பற்றி ராமனுக்கு கவலையில்லை. 'இல்லையா சரி, ஜானகி' என்றான்.

வேலைக்காரன்:—யாரும் இல்லீங்களே. அவங்களுக்கு கலியாணமாச்சே.

ராமன்:—என்ன? கலியாணமா எப்போ. என்று படபட வெனக் கேட்டான்.

வே:—ஐயாவுக்கு தெரியாதுபோல இருக்கு. இந்தாங்க என்று ஒரு காகிதத்தை கொடுத்தான். அது திருமண அழைப்புப் பத்திரம். அதிலிருந்து ஜானகிக்கும் குவெட்டாவிலிருக்கும் மற்றொரு வாலிப னுக்கும் குவெட்டாவிலேயே திருமணம் என்று தெரிந்தது. 'நான் வருகிறேனப்பா' என்று திரும்பி நடந்தான் ராமன். இச்சம்பவம் எதிர்பாராவகையில் நடந்துவிட்டதானது அவனுக்கு பெருத்த ஆச் சரியத்தையும் ஏமாற்றத்தையும் விளைவித்தது. 'இரண்டு மூன்று தினங்கள் நாம் வாரதிருந்தது என்னென்ன மாறுதலுக்கிடமாயிருக் கிறது'

'ஜானகி நம்மை ஏமாற்றியிருப்பாளா? கலியாணத்திற்கு இன் னும் 6 தினங்கள்தானே இருக்கின்றன. இவ்வளவு சீக்கிரமாக அவளுடைய கலியாணத்தைப்பற்றி முடிவு செய்வானேன். ஒரு வேளை நம்மை ஏமாற்ற வெண்ணியே இவ்விஷயத்தை நம்மிடம் தெரிவிக்காமலிருந்தாளா ? சே ! அப்படியிராது. அவளுடைய தந்தையின் ஆக்ஞை எவ்வாரோ? நாம் இங்கிருந்தபடியே எதையும் தீர்மானித்து விடுவது கூடாது. ஜானகி நம்மைக் காதலித்ததாக தெரிவித்தது உண்மைதானு? அல்லது வெறும் பகட்டா. ஆ! நான் ஏன் சந்தேகப்படவேண்டும். என் ஜானகியா என்னை மோசம் செய்வாள். உண்மையில் அவள் மனமார வேறொருவனை மணக்க ஒப்பவேமாட்டாள். அவள் திருமணத்தைகூட பார்க்க முடியாது போலிருக்கிறதே? ஏன் நானும் குவெட்டாசென்ருல் என்ன?' என்று வாயில்வந்தபடி பேசிக்கொண்டே நடந்தான். இந்நிலையில் அவன் மனதை சுலபத்தில் அறிந்துகொள்ளலாம். ஒரு சமயம் கோபமும், மறு சமயம் பரிதாபமும், ஆத்திரமும் விசனமும் தோன்றலாயிற்று. ஏதோ தன் உணர்ச்சியின்றி நடப்பவனைப்போல் நடந்துசென்ருன்.

* * *

ஜானகியும் அவளுடைய தந்தையும் குவெட்டா வந்து சேர்ந் தனர். அன்று எல்லோரும் ஆனந்த சாகரத்திலேயே மூழ்கிக் கிடந்தனரென்றே கூறவேண்டும். ஆனல் ஜானகியின் மனது மட் டும் சொல்லமுடியாத வேதனையில் ஆழ்ந்த வண்ணமே யிருந் தது. இன்னும் இரண்டு தினங்களில் கலியாணம். தன்னை தூக்கு மேடைக்கு கொண்டுபோவதற்காக குறிக்கப்பட்ட நேரமானது நெருங்க நெருங்க கைதியின் மனோநிலை எவ்வாறிருக்குமோ அதை விடப் பன்மடங்காக கழிந்துகொண்டு போகும் ஒவ்வொரு மணியி லும் ஜானகியின் மனது அவஸ்தை யடைந்தது. மனப்பெண்

மாப்பிள்ளையின் வீட்டில் இறங்கக் கூடாதாம். அதனால் ஒரு தனி வீட்டில் தந்தையும் மகளும் இறங்கினர்.

அன்று இரவு எல்லோரும் படுத்துக்கொண்டார்கள். ஊரே அடங்கிவிட்டது. நிசப்தம்; கணவன் மனைவியரும்; தாயும் சேயும், மாடும் கன்னும், குருவியும் குஞ்சுகளும் அதனதனிடத்தில் இரவைக் கழிக்கலாயின. ஜானகியின் மனது கடிகாரத்தைவிட பன்மடங்கு பட, படவென அடித்துக்கொண்டது. விழித்த வண்ணம் படுத்திருந்தாள். மணி 11 இருக்கலாம். திடீரெனப் பெருங்காற்று. மரங்களெல்லாம் காற்றில் வேகமாக ஆடும் ஓசை மிகவும் பீதியை யுண்டாக்கிவிட்டது. கட்டிடங்களெல்லாம் இடிந்து விழுந்து விடுமோ என பயப்படத்தக்க பீதி. ஆனால் மறுநிமிடம் ஓர் பெரும் அதிர்ச்சி. பூமி ஆடுவதுபோல் தோன்றிற்று.

கட்டிடங்கள் அப்படியே சாய்வதுபோல் தோன்றிற்று. மறுபடியும் ஊஞ்சல் ஆடுவதுபோன்ற ஆட்டம். ஒரு குலுக்கல். மடார் மடார் என்று கட்டிடம் இடிந்துவிழுதல். ஜானகி வாயிற்படிக்கருகில் படுத்திருந்தாள். வாயிற்படியின் பின் கட்டிடம் தாறுமாறாக இடிந்து விழுந்து தரைமட்டமாயின. ஜானகியின் தலைமேல் இருக்கும் கட்டிடம் அடுத்தநிமிடம் என்று எதிர்பார்க்கும் நிலையிலிருந்தது. உடனே ஜானகி ஏதோ ஆவேசம் வந்தவள்போல் எழுந்தாள். பிடித்தாள் ஓட்டம் தெருவழியே. நாம் எங்கே ஓடுகிறோம் என்பதையறியாமல் பைத்தியக்காரியைப் போல் ஓடினாள். ஊரைத் தாண்டிவிட்டாள். சமவெளி சுமார் இரண்டு மைல் தூரம் ஓடி வந்திருப்பாள். தட்டுத் தடுமாறினாள். படேர் என்று கீழே விழுந்துவிட்டாள் அலங்கோலமாய். குளிர்காற்று ஜில்லென்று வீசிக்கொண்டிருந்தது. ஜானகியின் உடம்பில் இரத்த ஓட்டமில்லை. உறைந்து விட்டது.

* * *

காலை மணி 6. கீழ்த்திசையில் சூரியன் உதயமானான். ஆ! கொடுமை! கொடுமை!! குவெட்டா நகரம் இடிந்து தரைமட்டமாய் விட்டது. பூகம்பத்திற்கிரையாகாமற் தப்பி பிழைத்த சிலர் தங்கள் குழந்தைகளுடனும், கணவன்மார்களுடனும் ஓடலாரம்பித்தனர். சர்க்கார் காரியாலயங்களில் தப்பி பிழைத்துக்கொண்ட உத்தியோகஸ்தர்கள் குவெட்டாவிற்குள் புகுந்தனர். மறுபடியும் பூகம்பம் உண்டாகுமென்ற அறிகுறிகள் காணப்பட்டன. உத்தியோகஸ்தர்கள் 'கார்'களை வரவழைத்து தப்பிப் பிழைத்தவர்களை ஏற்றி குவெட்டா ரயில்வேஸ்டேஷனுக்கு அனுப்பிக் கொண்டிருந்தனர்.

அன்று காலை மணி 10. குற்றுயிராய்க் கிடப்பவர்களையும் பூமியில் புதைந்து போய் கூச்சல் போடுபவர்களையும் வெளியில் இழுத்து காரில் ஏற்றி ஸ்டேஷனுக்கு அனுப்பிக்கொண்டிருந்தனர். இங்கு

இவ்வாறிருக்க, ஜானகியைக் கவனிப்போம். குளிரினுல் அடிபட்டு கீழே கிடந்தாளாதலால் சூரிய உஷ்ணம் தாக்கவே ரத்த ஓட்டம் சிறிது சிறிதாக வேலை செய்ய வாரம்பித்தது. அவளுக்கு சரியான



முறையில் ரத்த ஓட்டம் உண்டாகும்படி சூடுண்டாக்க யாருமில்லை. அப்படியு மிப்படியுமாகப் புரண்டுகொண்டே படுத்திருந்தாள்.

அந்த வழியாக ஒரு மனிதன் போய்க்கொண்டிருந்தான். அவன் உடைகளெல்லாம் கிழிந்து தாறுமாருய் கிடந்தது. குடிகாரனைப் போல் முன்னும்பின்னுமாக நடந்துகொண்டே ஜானகியிருந்த இடத்திற்கருகாமையில் வந்தான்.

ஜானகி யிருந்தயிடத்திற்கருகாமையில் வந்ததும் உற்று நோக்கினுன். ஹா! என்று ஆச்சரியத்தால் தன்னை யறியாமல் கூச்சலிட்டான். 'ஜானகி' என்று அவளுக்கருகில் ஓடினுன் ராமன். அவள் உடம்பு ஜில்லென்றிருப்பதை தெரிந்துகொண்டான். உடனே நன்ருக சூடுண்டாகும்படி தேய்க்கவாரம்பித்தான். ரத்தம் நன்ருக ஓடஆரம்பிக்கவே ஜானகி திடீரென விழித்துக்கொண்டாள். 'நான் ஏன் இங்கிருக்கிறேன். தாங்கள் ராமன்தானே?' தாங்கள் எப்படி வந்தீர்கள்? ஹா! இது என்ன? என்று பயந்து தட்டுத்தடுமாறி பேசினுள்.

ராமன்:—ஜானகி! நன்ருக யோசித்துப் பாரு. நீ இங்கே வந்தது எப்படி என்று உனக்குத் தோன்றவில்லையா? நான் இப்பொழுதுதான் இங்கு வந்து பார்த்தேன்.

ஜா:—நான் அங்கே படுத்திருந்தேனே. ஆம், ராத்திரி பூகம்பம். அப்பா—ஐயோ! என்று நடுங்கினுள். 'அப்பொழுது ஓடி வந்தேனே அதுவரையில் இங்கேயா கிடந்தேன். பூகம்பத்தால் என் தந்தை......அப்பா எப்படியானர்? தாங்கள் எப்படி இங்கே வந்தீர்கள். அப்பாவைப் பார்ப்போம் வாருங்கள்' என்ருள்.

ராமன் எழுந்து நின்றுகொண்டு ஜானகியைத் தூக்கி நிறுத்தினுன். இருவரும் நடந்தனர் பாழடைந்த குவெட்டாவை நோக்கி.

'ஜானகி:—நீங்கள் எப்படி வந்தீர்கள்?

ரா:—நான் உனது கலியாணத்தைப் பார்க்க வந்தேன். இரவு ஒரு ஹோட்டலில் தங்கியிருக்கையில் பூகம்பம் உண்டாகவே தப்பித் துக்கொண்டு ஓடி வந்துவிட்டேன்.

ஜா:—நீங்கள் தப்பித்துக்கொண்டது தெய்வ சங்கல்பம்தான்' என்ருள். பின் இருவரும் நகருக்குள் புகுந்து ஜானகி தங்கியிருந்த வீட்டை சிரமப்பட்டு கண்டு பிடித்தார்கள். அப்பொழுது அந்தத் தெருவில் சோல்ஜர்கள் ஜனங்களை காரில் ஏற்றி அனுப்பிக்கொண் டிருந்தனர். அவர்களிடம் ராமன் சென்று ஜானகியிருந்த வீட்டை காட்டி, ஐயா! இந்த வீட்டிலிருந்த ஒரு மனிதரை ஏற்றிக்கொண்டு போனீர்களா? என்று சோமசுந்தரத்தின் அடையாளங்களைக் கூறி ஞன். சோல்ஜர்கள் ராமன் சொன்ன அடையாளமுள்ள மனிதரை ஏற்றியனுப்பியதாக தெரிவித்ததுமன்றி இவர்களையும் காரில் ஏறும் படி கூறிஞர்கள். ராமனும் ஜானகியும் காரில் ஏறியதும் கார் புறப் பட்டு ஸ்டேஷனையடைந்தது. குவெட்டாவிலிருந்து லாகூருக்கு ஒருமணிக்கொருதரம் ஒருவண்டி விடப்பட்டது. முதல் வண்டி போய்விட்டது. இரண்டாவது வண்டிக்கு ராமனும் ஜானகியும் வந்து சேர்ந்தனர். ஸ்டேஷனில் சோமசுந்தரத்தைக் காணவில்லை. அவர் முதல் வண்டியில் லாகூருக்குப் போய் இருக்கவேண்டுமென்று தீர்மானித்துக்கொண்டு ராமனும் ஜானகியும் மறுவண்டியில் ஏறினர். வண்டி புறப்பட்டது.

வண்டியானது லாகூரையடைந்ததும், குவெட்டாவிலிருந்து கொண்டுவந்த ஜனங்களையெல்லாம் ஆஸ்பத்திரிக்கு கொண்டு சென் றிருப்பதாக கேள்விப்பட்டார்கள். ராமனும் ஜானகியும் ஆஸ்பத் திரிக்கு சென்ருர்கள். அங்கே கைகளிலும் இடுப்பிலும் கட்டுகள் கட்டப்பட்டு படுத்திருந்தார் சோமசுந்தரம். அவர் ராமனையும் ஜானகியையும் கண்டதும் 'வந்துவிட்டீர்களா!' என்று கூச்சலிட் டார். தன் மகளைப்பற்றி நினைத்துக்கொண்டே கிடந்தவருக்கு திடீரென தன் மகள் தோன்றிவிடில் எவ்வளவு சந்தோஷம். அவர் கண்களிலிருந்து நீர் பெருகிற்று. ஜானகியின் மனது அவரைப் பார்த்தபின்தான் நிம்மதியாயிற்று. ஜானகி தந்தையின் உடம்புக் காயங்களுக்காக வருத்தப்பட்டாளெனினும், உயிர் பிழைத்துக் கொண்டதுபற்றி மிகவும் சந்தோஷப்பட்டாள். அவருக்கு உடம்பில் படுகாயமின்மையால் பத்து தினங்களில் பூர்ண சுகமடைந்துவிட் டார். அதன்பின் சோமசுந்தரம், ஜானகி, ராமன் மூவரும் புறப் பட்டு சென்னை வந்தனர்.

* * *

கதையை வளர்த்துவானேன்! ஓர் சுபமுகூர்த்தத்தில் ஸ்ரீமான் ராமனுக்கும், ஸ்ரீமதி ஜானகிக்கும் திருமணம் சிறப்பாக நடந்தது. கொழுத்த பணக்காரரான சோமசுந்தரத்தின் வீட்டில் கலியாண

மென்றால் அதைப்பற்றி வர்ணிப்பது அனாவசியமேயாகும். கலியாணம் கதர் கலியாணமென்பதை ஞாபகமூட்டுகிறோம்.

* * *

அன்பர்களே! குவெட்டாவின் அதோ கதியை நேரே கண்ட கதாநாயகர்கள் 'குவெட்டா பூகம்ப நிவாரணம்' செய்ய அதன் நிதிக்காக எல்லோரையும் பார்க்கிறார்கள். உங்களைப் பார்ப்பார்களேயானால் ஏதோ உங்களாலியன்ற பொருளை குவெட்டா வாசிகளாகிய நமது சகோதரர்களுக்கு அளிப்பீர்களென்று எதிர்பார்க்கின்றேன்.

ஜானகிராமன் நீடூழி வாழ்க!


டாக்டர் மே. மாசிலாமணி முதலியார் அவர்களால்
தயார் செய்யப்பட்ட மருந்துகள் யாவும்
கீழ்க்கண்ட விலாசங்களில் பெற்றுக் கொள்ளலாம்.

செ. சு. குமாரசாமி முதலியார்,
80, பெரிய மணியக்கார தெருவு, செங்கல்பட்டு.

---

லெக்ஷ்மணாஞ்சனம் டிப்போ,
புதுவயல், (இராமநாதபுரம் ஜில்லா)

---

லங்கா குரோஸரி ஸ்டோர்,
செட்டித் தெரு, கொழும்பு.

---

தி. ஞானப்பிரகாசம்,
122, மோகல்வீதி, ரங்கோன்.

---

வி. சா. காசி செட்டியார்,
47, மார்க்கட் வீதி, சிங்கப்பூர்.

---

எம். வி. ராமச்சந்திரன்,
162, அம்மாபேட்டை மெயின் ரோட், சேலம்.

---

A. V. R. A. ADYCAPPA CHETTYAR
Lalji Mansing Building, 1st Floor,
Lohar Chawl,
Near Crawford Market, Bombay. 2.



# ‘வெங்காய வெடி’

[ஆர். என். சிவாயம் திருச்சி]

கடந்த ஆண்டு, தீபாவளித் தினம் விடியற்காலம். செக்கச் செவேலென்றிருந்த செந்நிறமேனியில் பச்சைப் பசேலென்று ஒரு பட்டாடை உடுத்தி கருமை பொருந்திய தன் கூந்தலை கையினால் கோதிக்கொண்டிருந்தாள் ‘ராதை’. அப்பொழுதே அப்பிங்கன ஸ்நானம் செய்த ‘கிருஷ்ணன்’ அவசரமாய் ராதையிடம் ஓடிவந்து ரகசியமாய் ஏதோ கூறிவிட்டு துவிச்சக்கர வண்டியை எடுத்துக்கொண்டு துரிதமாய் வெளியே கிளம்பிச் சென்றான்.

அவன் அப்படிச் சென்றதில் அதிருப்திகொண்ட ராதை மளமளவென்று மாடிக்குச்சென்று மாடத்திலிருந்த ஒரு பொருளை மடியில் எடுத்து வைத்துக்கொண்டு மணவாளன் வரவை எதிர்

பார்த்தவண்ண மிருந்தாள். (வளர்சோலை கிராம பட்டாமணியம் மகாதேவ முதலியாருக்கு செல்வப் புத்திரி ராதை)

திருப்பூர் கதரை திருத்தமாய் உடுத்திக்கொண்டு திடுதிடுவென்று மாடிக்குச் சென்றான் கிருஷ்ணன். கணவன் வருவதை அறிந்த ராதை மடியிலிருந்த பொருளை கையில் எடுத்து வைத்துக் கொண்டு மறைவிலிருந்தாள். மாடியை யடைந்த கிருஷ்ணன் மனைவியைக் காணாது மயங்கி நின்றான். அடுத்த நிமிஷம் 'டப்' என்று ஒரு சப்தம். வெங்காய வெடி ஒன்று வெடித்தது கிருஷ்ணன்மேல். மறைவிலிருந்து வெளிப்பட்டாள் ராதை. கணவனின் அங்க வஸ்திரத்தில் கொஞ்சம் கருகி யிருப்பதைக் கண்டு கண் கலங்கினாள். அவளுடைய அழகிய வதனம் சற்று மாறுதலடைந்தது.

மாடியிலிருந்து வந்த சப்தத்தைக் கேட்டு மகாதேவ முதலியாரும், பார்வதியம்மாளும் மதிமயங்கி சென்று பார்த்தனர். கண் கலங்கி நிற்கும் மகளையும், கருகிய பாகத்தை துடைத்துக் கொண்டிருக்கும் மருகனையும் கண்டு வியந்து 'என்ன இது! நாங்கள் நாற்பது ரூபாய் கொடுத்து நல்ல பட்டுகள் வாங்கி யிருக்க அவைகளை விடுத்து தாங்கள் எப்பொழுது சென்று இந்தக் கதரை வாங்கிக்கொண்டு வந்தீர்கள்?' என்று வியப்புடன் கேட்டார் முதலியார்.



'மாமா! தாங்கள் கோபங்கொள்ள வேண்டாம். சற்று முன் பாகத்தான் நீங்கள் எனக்கு எடுத்திருக்கும் ஜவுளிகளை ராதா என்னிடம் காண்பித்தான். அவைகள் யாவும் அயல்நாட்டு துணிகளா யிருந்தன. நான் எப்பொழுதும் நம் நாட்டுக் கதரையே உடுத்துகிறவனென்பது உங்களுககுத் தெரிந்த விஷயந்தானே? ஆகையால் சற்று முன்புதான் ராதையிடம் கூறிவிட்டு கடைக்குச் சென்று இத்துணிகளை வாங்கிக்கொண்டு வந்தேன். மேலும் ராதை விளையாடின இந்த விளையாட்டிற்கு நீங்கள் எடுத்திருக்கும் பட்டை நான் உடுத்தியிருந்தால் அவை ஒரு பைசாவுக்குக்கூட பிரயோஜனமில்லாமல் போயிருக்கும். அதனால் தங்களுக்கு மனவருத்தமும்

உண்டாகியிருக்கும். இவை யாவும் நேரிடாவண்ணம் நான் என்றும் உடுத்தும் கதரையே உடுத்தினதால் நலமாயிற்று' என்று மாம ருக்கு சமாதானம் கூறினான் கிருஷ்ணன்.

மஹாதேவ முதலியார் சமாதான மடைந்தார். 'என்ன போங்கள். முன்னமே சொல்லியிருந்தால் இந்தக் கதரை நாங்கள் எடுத்திருக்க மாட்டோமா? அல்லது இந்த சோமனில்தான் கொஞ்சம் மஞ்சள தடவி கட்டியிருக்கக் கூடாதா? அதனால்தான் இத்தனை அபசகுனம் நேரிட்டதுபோலிருக்கிறது. போனது போகட்டும் இருவரும் காபி சாப்பிட வாருங்கள்'—என்று கூறிக்கொண்டே முதலியாரும், பார்வதியம்மாளும் கீழே யிறங்கிச் சென்றனர்.

தலைகுனிந்தவண்ணம் நிற்கும் ராதையிடம் மெல்ல நெருங் கினான் கிருஷ்ணன். அழகிய கூந்தலை தடவிக் கொடுத்துக்கொண்டே 'கண்மணி ராதா! என்ன யோசித்துக் கொண்டிருக்கிறாய். என்னிடம் கூறக் கூடாதா?' என்று அன்பு ததும்ப கேட்டான்.

ராதா தன் காதலன் முகத்தை நோக்கினாள். 'நாதா! இந்த வருஷம் போனது போகட்டும். இனி நான் அந்நிய நாட்டுப் பொருள்களை கையாலும் தொடமாட்டேன். நீங்கள் உடுத்தும் கதரையே நானும் வாங்கிக் கொள்ளுகிறேன். நீங்கள் மாத்திரம் இந்த 'வெங்காயப் பட்டாசு' விளையாட்டு ஞாபகத்தை மறந்து விடுங்கள்'—என்று கொஞ்சியவண்ணம் கூறினாள்.

கிருஷ்ணன் புன்சிரிப்புக் கொண்டான். தன் காதலியின் முகத்தை உற்று நோக்கினான். அவனுடைய இருகரங்களும் ராதாவின் இருதோள்களையும் பற்றின. பெண்மணியின் முகம் மலர்ந்தது. அப்புறம் என்ன? ராதையின் அழகிய உதடுகளின்மேல் தன் உதடுகளை வைத்து இன்பரசத்தை கொஞ்சம் கொஞ்சமாய் பருகினான் கிருஷ்ணன்.

இந்த வருடமும் கடிதம் வந்திருக்கிறது. மனைவியுடன் ஆனந்த மாய் செல்லப்போகிறான் கிருஷ்ணன் மாமனார் வீட்டிற்கு. 'ஆகை யால் இந்த வருஷ தீபாவளியிலிருந்து நாம் எல்லோரும் கதரையே உடுத்தி இன்புற்று வாழ்வோமாக'



# புருஷர்களை சீர்திருத்தும் விதம்

[கே. எம். எஸ்]

மத்தியானம் மணி இரண்டடித்தது. குண்டோதரப் பங்காரம்மாள் தன் வீட்டுத் தோசைக் கல்லை எடுத்து ஓர் குச்சியால் டாம், டாம்' என்று அடித்தாள். ஏன் தெரியுமா? பெண்கள் மகாசபை கூடிவிட்டது என்பதற்கு அறிகுறியாக....



..........அங்கு கூடத்தில் ஓர் உரல்மீது பலகை ஒன்று போடப்பட்டிருந்தது. குண்டோதர பங்காரம்மாள் உரலின்மீது அமர்ந்து பின் வருமாறு அதிகப் பிரசங்கம் செய்ய ஆரம்பித்தாள்:—சகோதரிகளே, சுதந்திர தாகம் கொண்டவர்களே, நேற்றுத் தான் சுதந்திரம் அடையும் வழியைப்பற்றிப் பேசினோம். இன்று கணவர்களிடம் உண்டாகும் குற்றங்களைப்பற்றிப் பேசுவோம்.................

முதலாவது, நம் நாதர்களிடம், பொடி போடுதல் என்ற கெட்ட குணம் இருக்கிறது. இரவில், அந்த நாற்றம் பொறுக்க முடியவில்லை. அதற்காக நாம் அவர்கள் வைத்திருக்கும் பொடி டப்பிகளில் நல்ல காரமான மிளகுப் பொடியைக் கலந்துவிட்டால் புருஷர்கள் அதை உபயோகப்படுத்தும்பொழுது எரிச்சல் உண்டாகும். அப்படி செய்தால் அவர்கள் நாலைந்து நாளைக்காவது பொடி போடமாட்டார்கள். அப்படியே படிப்படியாக அந்த வழக்கத்தையும் போக்கடித்து விடலாம்.

இரண்டாவது, நம் புருஷர்களில் சிலர் உச்சிக் குடுமி, கட்டுக் குடுமி என்று அநாகரீகமாக குடுமிகளை வைத்துக்கொண்டு, நம் கழுத்தை அறுக்கிறார்கள். அதற்குப் பரிகாரம் என்றைக்காவது அவர்கள் தூங்கும்போது அந்தக் குடுமியை அரைகுறையாக கத்தரி

யுங்கள். பிறகு மொட்டையாக விருப்பமின்றி, கிராப் வைத்துக் கொள்வார்கள். இது நமக்கு இன்பம் தரும்.

மூன்றாவது, இரவில் அடிக்கடி புருஷர்கள் சீட்டாடப்போய் பதினொரு மணி வரையிலும் ஆடிவிட்டு, நம்மைத் துன்புறுத்து கிறார்கள். அதற்கு நாம், அவர்கள் இரவு சீட்டாடி முடிந்ததும் கதவை வந்து தட்டும்போது கதவை திறக்காமல் வைத்திருந்து மழையிலும், குளிரிலும் அவர்களை வாட போட வேண்டும். ஏன் அப்படிச் செய்தாய் என்று கேட்டால் 'நான் கொல்லை வழியாக பக்கத்து வீட்டுக்கு தாயக்கட்டம் ஆடப்போய் வர ஒரு மணி ஆகிவிட்டது' என்று சொல்ல வேண்டும்.

நான்காவது, இந்த சீட்டாட்டத்திற்கு புருஷர்கள் போகாத வாறு பண்ண ஓர் வழி. நம்முடைய நகைகளில் ஒன்றை ஒளித்து வைத்துவிட்டு அது காணமல் போய்விட்டது என்று அவர்கள் சீட்டாடப்போகும் சமயத்தில் சொன்னல் அவர்கள் உடனே தேட ஆரம்பித்து விடுவார்கள். பிறகு பத்துமணிக்கு 'இங்கே இருக்கிறது' என்று கொண்டுவந்து கொடுத்தால், அவர்கள் அன்றைக்கு சீட்டாடப் போகமாட்டார்கள்.

ஐந்தாவது:—அடிக்கடி புருஷர்கள் ஏதாவது சொன்னல் சன் னியாசம் வாங்கிக்கொள்வேன் என்று பயமுறுத்துகிறார்கள். ஆகை யால் நாமும் சன்னியாசம் வாங்கிக்கொள்ளலாம் என்று முடிவு செய்துகொள்ள வேண்டும். அப்பொழுது நாமும் புருஷர்களைப் பயமுறுத்தலாம்.

ஆறுவது:—இவ்வளவுக்கும் கேட்காமல்போனல் தண்டம் என்னும் கடைசிவித தந்திரத்தை ஆரம்பிக்க வேண்டியதுதான். உடனே 'உள்ளே என்ன சப்தம்' என்று குண்டோதரப் பங்காம் மாளின் புருஷர் கோட்டீஸ்வரன் வெளியில் சப்தம் செய்தார். எல்லோரும் சமையலறையிலும் வேறு அறைகளிலும் போய் ஒளிந்து கொண்டனர்.



# பள்ளிக் காதல்

[டி. என். முத்து]

இரவு 10 மணி இருக்கும். எங்கும் நிசப்தம், நடேச ஐயரும் அவரது மனைவி அலமேலு அம்மாளும் படுக்கையில் படுத்துக்கொண்டே, 'என்ன நம்ப ருக்மணிக்கு இன்னும் 1 வருடம் இருக்கிறது. அதுவும் அவள் இவ்வருடம் பாஸ் ஆய்விடுவாள். ஆதலால் நாம் அவளை மேலும் படிக்க, மதராசுக்கு அனுப்பவேண்டும்.'

'ஊம், ருக்மணி S. S. L. C. பாஸ் செய்தால் பார்க்கலாம். மேலும் அவள் பாஸ் செய்கிறாளோ, இல்லையோ பார்ப்போம்.

இப்படியாக சிலமாதங்கள் கழிந்தன. அன்று பள்ளிக்கு கெஜட் புஸ்தகம் வந்தது. ருக்மணியின் பெயர் எலிஜிபில் லிஸ்டில் காணப்பட்டது ருக்மணிக்கு ஆனந்தம் சொல்லமுடியவில்லை. அவ்வளவுதான் தாமதம். ஓடோடி வீட்டிற்கு வந்து அலமேலுவிடம் இந் நற்செய்தியைச் சொன்னாள். அலமேலுவுக்கோ ஆனந்தம் கண்கூடத்தெரியவில்லை. அன்று இரவு நடேச ஐயரிடம், 'என்ன நம் ருக்மணியைக் கேவலம் என்று நினைத்துக்கொண்டீர்களோ, S. S. L. C. மிகவும் சுலபமாய் பாஸ்செய்து விட்டாளே! நாளையே காலேஜ்க்கு அப்ளிகேசன் பாரத்திற்கு எழுதவேண்டியதுதான்'

என்ன படிப்பு பெண்பிள்ளைக்கு வேண்டியிருக்கு, இப்போது வயதோ 18 ஆகிறது. போதும் படிப்பு. இத்துடன் பேசாமல் கலியாணத்தை முடித்துவிடலாம். மேலும் நாம் அவ்விடம் (மதராசில்) இருந்தாலாவது படிக்கவைக்கலாம். ஆதலால் வேண்டாம்.'

'ஏன் அவ்விடம் அவள் மாமாவின்வீடு இருக்கிறது. ஏன் அனுப்பக்கூடாது? ஆதலால் நம் கட்டாயம்................'

என்னமோ அனுப்பலாம். F. A. 2 வருடம் முடிந்ததும் கலியாணம் செய்துவிடலாம்.

2 வாரங்கள் சென்றன. ருக்மணி தன்னுடைய எல்லா சாமான்களையும் எடுத்துக்கொண்டு மதராசுக்குப் புறப்பட்டாள். மதராசை அடைந்த நான்கு நாட்களுக்குப் பின் தன் தந்தைக்குப் பின்வருமாறு ஒரு கடிதம் எழுதினாள்.

மிஸ். என். ருக்மணி, மதராஸ்
Inter mediate 2—8—35.
மனுப்போலி காலேஜ் சென்னை.

தேவரீர் தகப்பனர் அவர்களுக்கு. இப்பவும் நான் 30-7-35ந் தேதி இவ்விடம் வந்துசேர்ந்தேன். இந்த 2 நாட்களாய் நான் காலேஜிக்குப் போய்வருகிறேன். காலேஜ் நமது மாமாவீட்டி லிருந்து 3 மைல் தூரத்திலிருப்பினும் டிராம் வண்டிகள் இருப்பதால் போக்குவரத்து மிக்க சௌகரியமாய் இருக்கிறது. என்னுடன் இன் னும் 42 பெண்மணிகள் பயின்று வருகின்றார்கள். நீங்கள் தாயாரு ட்ன் வருவதாய் இருந்தால் புறப்படுமுன் தகவல் கொடுக்கவும்.

அன்புள்ள ருக்மணி.

தபாலைப்பார்த்த நடேச ஐயர் மிகவும் மகிழ்வுற்று தனது மனை வியிடம் எல்லாவற்றையும் எடுத்து உரைத்து இருவரும் இன்புற்று இருந்தார்கள்.

* * *

ருக்மணி ஒரு நாள் வழக்கம்போல் கடற்கரைக்கு உலாவும் பொருட்டு வெளியே புறப்பட்டாள். கடற்கரையின் சமீபம் பாதை யைக் கடந்துகொண் டிருக்கும் போது ஒரு கார் வேகமாக வந்து இவள் சமீபம் வந்ததும் பிரேக் போட்டும், பய னில்லாமல் இவளைக் கீழே தள்ளிற்று. காரும் நின்றது; இவள் மூர்ச் சையாய்க் கீழே விழுந் தாள்.



இதைக் கண்ணுற்ற வாலிபன் ஒருவன் ஓடோடிவந்து இவளை அதே காரில் தூக்கிக்கொண்டு ராயபுரத்தில் 85 நெம்பர் வீட்டிற்குக் கொண்டுபோய் டாக்டரைக் கூப்பிட்டு சிகிச்சை செய்தான்.

கொஞ்ச நேரம் சென்றபின் ருக்மணிக்கு மூர்ச்சை தெளிந்தது. எதிரில் தன்னுடன் தன் வகுப்பில் வாசிக்கும் 'வேணு' நிற்கக் கண் ணுற்று, மிகவும் சந்தோஷத்தோடு, 'என்ன மிஸ்டர் வேணு, தாங் கள் செய்த இப்பேருதவிக்கு நான் என்ன கைமாறு செய்யப் போகிறேன்.'

'என்ன பிரமாதம், தங்களுக்கு எந்த ஊர், தகப்பனர் யார், தங்களுக்குக் கலியாணம் ஆய்விட்டதோ?'

'என் தகப்பனர் ஒரு பெரிய மிராசுதார். எனக்கு இன்னும் கலியாணம் ஆகவில்லே. தங்களுக்கு கலியாணம் ஆய்விட்டதோ?

'எனக்கும் அப்படித்தான், இன்னும் கலியாணம் ஆகவில்லே'

'நான் உங்களே வகுப்பில் பார்த்துவிட்டு, வீடுவந்ததும் உங்கள் ஞாபகமாகவே யிருக்கிறேன்'

'நானும் சதா உன்னேயே சிந்தித்தவண்ணமாய் இருக்கிறேன்.'

'கண்ணே ருக்மணி, பின் என்ன நாம் இருவரும் ஒன்றுபட்டு வாழ ஏதாவது தடை உண்டோ?'

'தடை ஒன்றும் கிடையாது. எனினும் என் தகப்பனர் என்ன சொல்வாரோ?'

'ஆ! தாய் தகப்பனர்கள்தான் நாளேக்கு குடும்பத்தை நடத்துகிருர்களோ' என்ருன்.

ருக்மணி சிறிது நேரம் யோசித்து பின்பு சொல்லுவதாயும், தனக்கு நேரம் ஆகிறது என்றும் சொல்லி விடைபெற்றுக் கொண்டாள்.

நாட்கள் செல்லச் செல்ல இவ்விருவர்களது காதல் வளர்ந்து கொண்டே வந்தது. முடிவில் இருவரும் கலியாணம் செய்துகொள்வதாயும் முடிவு செய்துகொண்டார்கள்.

வருடம் நான்கு இனிது கழிந்தது. ருக்மணி பி. ஏ. தேறி விட்டாள். அவள் தனது சொந்த ஊருக்குப் புறப்படத் தயாராளுள். புறப்படும் முன் தன்னுடைய சிநேகிதர்களிடம் இச் செய்தியைச் சொல்லிவிட்டுக் கடைசியாய் வேணுவின் வீட்டிற்கு வந்தாள். அப்போது வீடுதாளிடப்பட்டிருந்தது. ருக்மணி கதவை மெதுவாகத் தட்டினுள்.

வேணுவோ, தனக்குகந்த 'தமிழரசு'வைப் படித்தவண்ணமாய் இருந்தான். ஆதலால் இவள் தட்டிய மெல்லிய சப்தம் கேட்கவில்லே. பின் ருக்மணி அவ்விடம் கதவிலுள்ள பித்தானே அழுத்த உள்ளே அலாரம் அடித்தது. அப்போதுதான் வேணுவுக்கு, யாரோ கதவைத் தட்டுவதாய்த் தெரிந்தது. உடனே எழுந்து கையில் புஸ்தகத்தை எடுத்துக்கொண்டே ஓடிவந்து கதவைத்திறக்க, ருக்மணியைக் கண்டான். உடனே உபசாரத்துடன் அவளே வரவேற்ருன்.

'என்ன நாம் இவ்வளவு காலமாய் ஒன்றுபட இருந்தோம். இன்னும் இரண்டு நாட்களில் நான் என் சொந்த ஊர் செல்லுகின்றேன். நீங்கள் அடிக்கடி தபால் எழுத வேண்டுகிறேன். கடைசியாய் நாம் பேசிய பேச்சுக்களை மறந்துவிடாதேயுங்கள்'

'என்ன வாழ்வு வேண்டியிருக்கு, இந்த நான்கு வருடமாய் நாம் இருவரும் எவ்வளவோ சுகமாய்க் கழித்தோம். இனி நான் எப்படிக் காலத்தைக் கழிப்பேனோ தெரியவில்லை. மேலும் நம் உறுதிமொழியைக் கட்டாயம் நிறைவேற்றவேண்டும். அதுதான் கட்டாயம் செய்துகொள்ளவேண்டும்.

'சரி நேரம் ஆகிறது. நான் போய்வருகிறேன்' என்றாள் ருக்மணி.

'ஆ! நான் இனி என்று உன்னைக் காணப்போகிறேன்' என்றான் வேணு.

இரண்டு நாட்களுக்குப் பின் ருக்மணி தன் சொந்த ஊர்போய் சேர்ந்தாள். தாயார் தகப்பனார் ருக்மணியை வரவேற்று உபசரித்தார்கள்.

சில நாட்கள் சென்றன. ருக்மணியின் தகப்பனார் முன்னமேயே முடிவுசெய்துள்ள மாப்பிள்ளையின் விபரத்தை ருக்மணியிடம் உரைக்கும்படி அலமேலுவிடம் சொன்னார்.

அலமேலு, ருக்மணியிடம் 'உன் அப்பா உனக்கு பங்களூரிலுள்ள பெரிய மிராசுதாரின் புத்திரனை 'சேது' எனபவரை நிச்சயம் செய்திருக்கிறார். அவரும் பி. ஏ. படித்திருக்கிறார். இதோ அவருடைய உருவப்படம் என்று காட்டினாள்.

பார்த்தாள் ருக்மணி, 'அம்மா எனக்கு அவர் வேண்டாம். எனக்கு கலியாணம வேண்டாம்.'

'இல்லை அவரை நீ கட்டாயம் கலியாணம் செய்துகொள்ள வேண்டும். மேலும் இது நீ செய்த பாக்கியமே. ஆதலால் நீ மறுக்காதே'

ருக்மணி தனது தகப்பனாரிடம் போய் 'அப்பா, எனக்கு கலியாணம் வேண்டாம்' என்றாள்.

'ஏன்? என்ன இப்போது வயது 22 க்கு மேல் ஆகிறது. மேலும் நான் உறுதிபேசிவிட்டேன். பின்பு வேண்டாமென்றால் நன்றாக இருக்குமா' என்றார்.

'அதற்காக இல்லை அப்பா, வேண்டாம்.'

'அடி அலமேலு, நாம் அவளைக் கேட்டால் வேண்டாம் என்று தான் சொல்லுவாள். நாம் மற்றபடி கலியாணத்திற்கு வேண்டிய ஏற்பாடுகளை தயார் செய்யலாம்' என்றார்.

பார்த்தாள் ருக்மணி. சரி, இனி ஒளிப்பதில் பயன் இல்லையென்று, 'வேறு ஒன்றும் இல்லை. மதராசிலுள்ள மிராசுதாரர் ஒருவரின் மகனை நான் கலியாணம் செய்துகொள்ளுவதாய் நினைத்திருக்கிறேன்.'

'என்ன, என் பெயரைக் கெடுக்கவா எத்தனித்தாய். போ, முடியாது' என்று மேலும் கலியாணத்திற்கு வேண்டிய ஆர்ப்பாட்டங்களைக் கவனித்தார்.

ருக்மணி விசனத்துடன் மறுநாளே வேணுவுக்கு கீழ்காணுமாறு ஒரு லிகிதம் வரைந்து அனுப்பினள்.

என் பிரிய வேணு! ஈரோடு.

என் பிதா எனக்கு பங்களூரில் மணவாளன் தேடியிருப்பதால், வீட்டில் கலியாண ஆடம்பரம் மிகவும் துரிதமாய் நடந்துகொண்டிருக்கிறது. நான் எவ்வளவோ சொல்லியும் பயன்படவில்லை. ஆதலால் நாளை இரவு நான் மெயிலில் ஆண் உடை தரித்துக்கொண்டு என்னுடைய ஆடையாபரணங்களையும் மறைவாக எடுத்துக்கொண்டு அவ்விடம் வருகிறேன். நீங்களும் உங்கள் பெற்றோர்கள் அறியவோ அறியாவண்ணமோ வேண்டிய பொருள்களை எடுத்துக்கொண்டு வேறு உடையுடன் தயாராய் இருக்கவேண்டியது. நான் அவ்விடம் வந்ததும், இருவருமாக வேறு இடம் செல்லலாம். இப்படிக்கு

ருக்மணி.

இரவு 7 மணி யிருக்கும். ருக்மணி யாரும் அறியாவண்ணம் ஆண் உடை தரித்துக்கொண்டு ஆபரணங்களையும் மறைத்துக்கொண்டு சில பொருளுடன் புறப்பட்டு மெயிலில் மதராசுக்குப் புறப்பட்டாள்.

மணி 10 ஆனது. நடேச ஐயர் தனது மகளைக் காணேமென்று அலமேலுவிடம் சொல்ல இருவருமாக ஒவ்வொரு இடமாகத் தேடினர்கள். கடைசியாய் ருக்மணியின் அறையில் வந்து பார்க்க அதிலும் காணேம். ஆனல் பெட்டியின்மீது ஒரு காகிதம் இருக்கக்கண்டு அதை அவசரத்துடன் பிரித்துப்பார்த்தார். அதில் ருக்மணி, தான் எவ்வளவோ தனது தாய் தகப்பன்மார்களிடம் தனது உள்ளக்கருத்தை எடுத்துரைத்தும் கேட்காமல் முன்பு உறுதி செய்த மாப்பிள்ளைக்கே கலியாணம் செய்ய ஆரம்பித்ததாலும், தான் எவ்வளவோ சொல்லியும் அதைப் பொருட்படுத்தாமையினுலும், அவர்களை விட்டுத் தான் தனியே வாழலாமென்றும், பிற்காலத்

தில் ருக்மணி நல்ல நிலைமையில் இருப்பாளாகில் மறுபடியும் தாயார், தகப்பனரைச் சந்திப்பாளென்றும் எழுதியிருந்தது. இதைக் கண்ணுற்ற நடேச ஐயரும், அலமேலு அம்மாளும் மிக்க விசனத்தோடு தங்களைத் தாங்களே நொந்துகொண்டார்கள்.

* * *

ருக்மணியும் மதராஸ் அடைந்தாள். வேணுவும் தயாராய் இருந்தான். பின்பு இருவருமாய் மாறுவேடத்துடன் அன்று கொழும்புபோகும் கப்பலில் ஏறினர்கள்.

கொழும்பில் இவர்கள் இருவரும் ஒரு ஹோட்டலில் தங்கியிருந்தார்கள். அன்று இரவு அவ்வோட்டலில் ஒரு திருடன் ஹோட்டலின் சொந்தக்காரர் பண பெட்டியைத் திறந்து கொண்டிருந்தான். அப்போது இவர்கள் இருவரும் விழித்துக்கொண்டு அத்திருடனைக் கைப்பற்றி அவனை அவ்வோட்டலின் சொந்தக்காரரிடம் ஒப்புவித்தார்கள். இப்பேருதவியைக் கண்ட ஹோட்டல்காரன், மிகவும் சந்தோஷப்பட்டு மெச்சினன்.



மறுநாட்காலை இவ் ஓட்டலுக்கு வந்த தனவான் ஒருவரிடம் இவர்களின் உதவியை எடுத்துரைத்தான். அத்தனவான் இவர்களைப் பார்த்து 'அப்பா, நீங்கள் யார், எந்த ஊர்' என்றுகேட்க, அவர்கள் இருவருக்கும் வேறுதேசமென்றும் சகோதரர்கள் என்றும் இருவரும் பி. ஏ. வரை கல்விகற்றவர்கள் என்றும் சொன்னர்கள்.

'ஆனல் என்னிடம் நீங்கள் வேலைக்கு வருவீர்களா' வென்று கேட்க அவர்களும் சம்மதித்தார்கள். ஆதலால் அத்தனவான் அவர்களை வேலைக்கு அமர்த்திக்கொண்டார்.

இவர்கள் இருவரும் மர்மமாகவே வெகுநாட்களாய் அம்மகானிடம் வேலை பார்த்து வந்தார்கள். இவர்களுடைய வேலைத்திறனை உணர்ந்த அவர் மிக்க பக்ஷமாய் நடத்தி வந்தார்.

ஒருநாள் (விடுமுறை நாள்) இவ்விருவரும் உல்லாசமாய் ஓர் அறையில் பேசிக்கொண்டிருந்தார்கள். இருவரும் தனிமையே அறையில் இருந்தமையால் ருக்மணி ஆண் உடையைக் கழற்றிவிட்டு சுயரூபத்துடன் வார்த்தையாடிக் கொண்டிருந்தாள். அத்தருணம்

அத்தனவான் அகஸ்மாத்தாய் அவ்வழியே செல்ல நேர்ந்தது. இவர்களில் ஒருவர் பெண்ணுடன் வார்த்தை ஆடிக்கொண்டிருப்பதைக் கண்டார் அத்தனவான். கண்டவர் மிக்க வியப்புடன் இன்னும் பார்ப்போம் என்று மறைவாக நின்றுகொண்டு கேழ்காணுமாறு கேட்கலுற்றார்.

ஆண் உருவம்:—'என்ன, நாம் எப்படியும் நமது உறுதி மொழியை நிலைநிறுத்தி விட்டோமல்லவா.'

பெண் உருவம்:–ஆம். தடையென்னே, காதலின் வீரமே வீரம்.

ஆ-உ:—அஃது இருக்கட்டும். இம்மகானின் அரிய குணத்தைப் பார்த்தாயா?

பெ-உ:—'ஆம்! நாம் செய்த பாக்கியமே பாக்கியம்.'

திடீரென அத்தனவான் அவ்வறையினுட் புகுந்து இருவரையும் நோக்கி 'என்ன நீங்கள் யார் என்று' கேட்டார். அவர்கள் தங்கள் கதையை முதலிலிருந்து ஒன்றும் ஒழியாமல் உரைத்தனர். இதைக்கேள்வியுற்ற அம்மகான் இவர்களின் வீரத்தை மெச்சி, தனது மனைவியிடம் 'பார்த்தாயா, நம்மிடம் வந்து சேர்ந்துள்ள புது மனிதர்களில் ஒருவன் பெண், இவர்கள் இருவரும் பி. ஏ. வரை கல்வி கற்றவர்கள், மிக்க சாமர்த்தியசாலிகள். மேலும் நமக்கோ புத்திர சந்தானமும் இல்லை. நாம் இவ்வாலிபனை சுவீகாரப் புத்திரனாய் எடுத்துக்கொண்டால், இவனுடன் கூடி உள்ள இம்மங்கை நமது மருமகளாவாள். 'உன் இஷ்டம் எப்படி. 'ஆம், அப்படித்தான் செய்ய வேண்டும், எங்கே இருவரும்' என்று அத்தனவானின் மனைவி அவர்களை அணுகி வார்த்தையாடினாள்.

பின்பு சுபமுகூர்த்த நாள் ஒன்றில் அம்மகான் அவ்வாலிபனைத் தனது சுவீகாரப் புத்திரனாய் ஏற்றுக்கொண்டார். அந்நாளிலேயே அம்மாதுக்கும் அவ்வாலிபனுக்கு விவாகத்தை இனிது நடத்தி வைத்தார்.



# சுந்தர ரமணி அல்லது
# காதலின் பயன்

[டி. நல்லதம்பி பிள்ளை]

நவீன நகரில், நாகரிகவனம் என்னும் தோட்டம ஒன்று உண்டு. இது பூஞ்செடிகளாலும், தென்னை, மா, பலா, முதலிய மரங்களாலும் சூழப்பட்டது. மத்தியில் ஓர் மடம் உண்டு. ஓர்தினம் கதிரவன் தன் முகத்தை சாம்பல் மயமான மலைக்குப் பின்னால் மறைத்துக்கொண் டிருக்கும்போது நாகரிக வனத்திலுள்ள மரங்கள் எல்லாம் பூக்களையும், காய்களையும், கனிகளையும் தாங்கமாட்டாமல் தரையை நோக்கிக்கொண்டு வருவதும், மேலே எழும்புவதுமாக யிருந்தன. இப்படி மரத்தின் கொம்புகள் அசைவதானது அம்மடத்தில் வசிக்கும் நாகரிகப் பரதேசியின் வரவை அன்புடன் எதிர்கொண்டழைக்கும் பாவனையா யிருந்தது.

சற்றுநேரத்தில், மாசுபடிந்த அங்கியை அணிந்தவரும் நல்ல கம்பீரமான தோற்றமும் கண்ணியமான பார்வையும் உடைய ஒரு பரதேசி நேராக அம்மடத்திற்கு வந்து, 'சங்கரா! மகாதேவா! இன்னும் எத்தனை காலம் இப்படி ஜீவிப்பது? நான் செய்த சூட்சிகளெல்லாம் சரியாய் நிறைவேறும்படி செய்தாய். என் பாலனையும் அனாதைப் பையனென்று சகலரும் கருதும்படி என் மனதைத் தூண்டி வேடிக்கைப் பார்க்கிறாய்! எல்லாம் உன்சித்தம்' என்று புலம்பிக்கொண்டே உட்கார்ந்தார். இப்பரதேசி எங்குள்ளவரென்றும், அவரின் நாமம் இன்னதென்றும் ஒருவரும் அறியார். ஆனால் நாகரிகப் பரதேசிஎன அழைப்பதுண்டு. யாசகம் எடுப்பதுமில்லை.

நிற்க, அவ்வழியாய் வந்த குதிரைவண்டியானது, குதிரைமிரண்டதின் பயனாய் மடத்தின் அருகிலுள்ள அழகான ஓடையின் சமீபத்தில் சென்றது. அப்போது தன் உயிரையும் மதியாது 23 வயதுடைய சுந்தரன் என்னும் நாமமுடைய வாலிபன் அக்குதிரையின் கடிவாளத்தைப் பிடித்து நிறுத்தினான். ஒருநிமிஷம் பிந்தினால் அவ்வண்டியும், வண்டியிலிருந்த 20 வயதுடைய ரமணி என்னும் பெண்ணும் மண்ணுலகை வெறுத்திருப்பார்கள். நினையாவண்ணம்

உதவிபுரிந்த சுந்தரனுக்கு ரமணி சற்றுநாணத்துடன் வந்தனமளித்து தன்னிருப்பிடத்தையும் தெரிவித்து, மறுநாள அங்கு வரும்படி கேட்டுக்கொண்டு தன்னிருப்பிடம் சென்ருள். அச்சம்பவத்தையும் அச்சுந்தரனின் வீரத்தையும், பரோபகாரத்தையும் கண்ட பரதேசி ஆனந்தமடைந்தார்.

நவீனநகருக்கு சுமார் ஒரு மைலுக்கப்பாலுள்ள கந்தர்வபுரத்தின் ஜமீன்தாரான ஜெயசிங் தன் மனைவி இறந்ததும், துக்கத்தை மாற்ற தனியாய் காட்டிற்கு வேட்டையாடச் சென்றபோது மிருகத்திற்கு இரையானர் என்றும், அரண்மனையிலுள்ள அவரது ஒரே ஆண் குழந்தையையும் காணேம் என்றும், ஜமீனுக்கு வேறுசரியான பாத்தியதையாளர் இல்லையென்றும் ஒரே வதந்தி. இச்சம்பவம் இக்கதை நிகழ்ந்த காலத்திற்கு 15 வருஷத்திற்குமுன் நடந்தது. இப்போது மிஸ்டர் உல்துரை அச் ஜமீனைப் பரிபாலிக்கிருர் என்றும், சரியான வாரிஸ்தார் வந்தவுடன் ஒப்படைக்கப்படுமென்றும் சர்க்காரால் விளம்பரப்படுத்தப்பட்டது. 15 வருஷமாகியும் ஜமீன்தார் ஜெயசிங்கின் உருவமும், பரோபகாரமான எண்ணமும், நடவடிக்கையும் குடிகளின் மனதைவிட்டு அகல முடியவில்லை.

நவீன நகரிலுள்ள விசித்திர விலாஸ் மாளிகையில் சுமார் மாலை மூன்று மணிக்கு ஓர் வாலிபன் ஒய்யாரமாய் நடந்து சென்ருன். அப்பொழுது அவனை அம்மாளிகையின் சொந்தக்காரரான ராம்சிங்கும், ரமணியின் தாயாரும் உபசரித்தனர். அவ்வாலிபனே ரமணியைக் காப்பாற்றிய சுந்தரம். தான் அவ்வூரிலுள்ள பரகதி காலேஜில் B. A. க்கு படிக்கிறதாகவும், பெற்ருேர் உறவினர்கள் இல்லையென்றும், பிரின்ஸிபாலின் உதவியால் கல்வி பயின்று, அவ்விடமே சாப்பிடுவதாகவும் கூறினன். அநாதை என்பதைக் கேட்டவுடன் ரமணியின் தகப்பனரான ராம்சிங் கேவலமாக எண்ணினர். ஆனல் தாயோ பிரியமாய் அவனையே பார்த்தவண்ணமிருந்தாள். ஏனெனில் சுந்தரத்தின் முகம் தன் அண்ணனுகிய கந்தர்வபுரத்தின் ஜமீன்தாரான ஜெயசிங்கின் முகத்தை ஒத்திருந்தது. அன்றுமுதல் ரமணியைப் பார்க்க வருவது சுந்தரத்தின் படிப்பில் ஒரு பாகமாகிற்று. சுந்தரனும், ரமணியும் ஒருவரையொருவர் காதலித்தார்கள். சுந்தரம் தன் பாடத்தை மறந்தாலும், ரோஸ்மயமான ரமணியை மறவான்.

ராம்சிங், தன் மகளை வேருெருவனுக்கு கலியாணம் செய்து கொடுக்க நிச்சயித்துவிட்டதாகவும், அதனல் சுந்தரம் அவ்விடம் வரக்கூடாதென்றும், வந்தால் மற்றவர்கள் சந்தேகப்படுவார்கள் என்றும் சுந்தரத்தினிடம் சொல்லி அவனைத் தடுத்தார்.

தன் ஆருயிர் காதலியை பார்க்க முடியவில்லையே என்னும் துக்கத்துடன் இருப்பிடம் சென்ருன். சுந்தரம் வருவதும் போவதும் நம் நாகரிகப் பரதேசியின் டைரியில் குறிப்பிடப்பட்டிருக்கும்.

இரவு மணி 12 இருக்கும். பௌர்ணமி தினம். விசித்திர மாளிகைக்குள் ஓர் உருவம் சென்றது. அவ்வுருவத்தை யறியா வண்ணம் மற்றொரு உருவம் பின்தொடர்ந்தது. ரமணி படுத்துறங்கும் அறையண்டை சென்றது. மின்சார விளக்கின் உதவியால் ரமணி இல்லை என அறிந்தது. அம்மாளிகையோ மின்சார விளக்குகளாலும், பந்தல்களாலும், தோரணங்களாலும் ஜோடிக்கப்பட்டு இந்திரலோகம்போ லிருந்தது. அவ்வுருவமே நம் சுந்தரன். இவனைத் தொடர்ந்து வந்த உருவமும் இவனைக் கவனித்துக்கொண்டே யிருந்தது.

அங்குள்ள தோட்டத்தின் கிணற்றில் பொத்தென்று சப்தம் கேட்டது. சுந்தரம் கிணற்றண்டை ஓடி, நிலாவின் உதவியால் தான் கடைசி முறையாகக் காணவந்த காதலி என அறிந்து, 'காதலி! இதோ நானும் உன்னைப் பின் தொடர்கின்றேன்' என்று சொல்லி கிணற்றில் விழுந்தான்.

இக்கோரச் செயலைக் கண்ட மற்றொரு உருவம் தாமதமின்றி, கிணற்றில் தண்ணீர் இறைக்க கட்டியிருக்கும் கயிற்றை அவிழ்த்து, ஒரு பாகத்தை மாத்தில் கட்டி, அக்கயிற்றின் உதவியால் கிணற்றில் இறங்கி, காதலர்களை அக்கயிற்றில் சேர்த்துக்கட்டி, தான் மட்டும் மேலே வந்து அக்கயிற்றின் உதவியால் காதலர்களைக் காப்பாற்றிற்று. காதலர்கள் மூர்ச்சையா யிருந்தார்கள். அத்தோட்டத்திலுள்ள காற்றின் உதவியால் மூர்ச்சை தெளிந்தார்கள். இதற்குள்ளாக பெண்ணைக் காணவில்லை என்று கூக்குரல் அதிகப்பட்டது. பெண்ணின் தகப்பனாரான ராம்சிங் கிணற்றுக்கருகில் வரும்போது, மும் மூர்த்திகள்போல் ரமணியும், சுந்தரனும், நாகரிகபரதேசியு மிருந்தார்கள். பரதேசியின் மூலம் விஷயத்தை யறிந்த கல்மனதுடைய ராம்சிங்கும், மனமுருகி நிச்சயப்படுத்தப்பட்டிருந்த மாப்பிள்ளை வீட்டாருக்கு 50000 ரூபாய் செலவு தொகை கொடுத்துவிட்டு சுந்தரத்திற்கு ரமணியைக் கொடுக்க பரதேசியின் முயற்சியால் சம்மதித்து நாள் குறிப்பிட்டு, கலியாணப் பத்திரிகைகள் பிரசுரிக்கப் பட்டது.

விசித்திர விலாச மாளிகை விசித்திரமாகவே விளங்கியது. அவ்வூரிலுள்ள அனைவரும் தம்பதி சமேதராய் வந்தனர். கூட்டம் பந்தலைநிரப்பி விட்டது. கந்தர்வபுரம் ஜமீன்தாரான (சர்க்காரால் நியமிக்கப்பட்ட) உல்துரையும் வந்தார். இவரைக் கண்ட அனைவருக்கும் திகிலும் சந்தோஷமும் உண்டாயிற்று. ஏனெனில் கலியாணதினம் இவருக்கு எப்படி தெரியுமென்றும், வந்த நோக்கமென்னவென்றும் அறியார்கள். மணமகனும், மணமகளும் ரதியும் மன்மதனும்போலும் வீற்றிருந்தார்கள். அச்சமயம் பிளசர் காரிலிருந்து சுமார் 46

வயதுடைய ஒருவர் பந்தலுக்குள் வந்தார். உல் துரையும் கூடியிருந்த அனைவரும், தூண்போல் பார்த்தபடியே யிருந்தார்கள்.

ஏனெனில் மிருகத்திற்கு இரையானார் என்று எல்லாராலும் கருதப்பட்ட கந்தர்வபுர ஜமீன்தாரான ஜெயசிங்கே அங்கு வந்தவர். இவரைக் கண்ட ரமணியின் தாய் ஓடி, வந்தவரின் கழுத்தைக் கட்டிக்கொண்டாள். பின்பு ஜெயசிங், தான் தன் 5 வயதுப் பையனை கூட்டிக்கொண்டு போய் பாகதி காலேஜ் பிரின்ஸிபாலிடம் விட்டு, வேண்டிய ரூபாய்களையும் கொடுத்து, பாதுகாக்கச் சொல்லி, விட்டு மனைவியின் விசனம் தாங்கள்மேல் சாமியார் வேடம் பூண்டு வீண் வதந்தி உண்டுபண்ணி விட்டு பல இடங்கள் சென்று, கடையில் தன் மகனிருக்கும் ஊராகிய நவீன நகரிலுள்ள நாகரிக வனத்தில்வசித்த நாகரிகப் பரதேசி யென்றும், கவர்னருக்கும், உல்துரைக்கும் தந்தியடித்ததும் தான்தான் என்றும், தன் மகனே மணாளனாகிய சுந்தரன் என்றும் கூறினர். அங்குள்ளோரின் மனது எங்கிலையிலிருக்கும் என்று வாசகர்களே யூகித்துக்கொள்ள வேண்டியது.

கலியாணம் வெகு ரம்மியமாக நடைபெற்றது. அன்றே எல்லோருக்கும் முன்னால் மிஸ்டர் உல்துரை ஜாமீனை ஜெயசிங்கிடம் ஒப்படைத்து விட்டார். ஜெயசிங் தன் மகனான சுந்தரசிங் வசம் ஒப்படைத்து விட்டார். வருடம் 5 சென்றது. கந்தர்வபுரத்திலுள்ள தோட்டத்தில் இருகுழந்தைகள் விளையாடிக் கொண்டிருந்தார்கள். தூரத்திலிருந்த சுந்தரமும் ரமணியும், அக்குழந்தைகளின் விளையாட்டைக் கண்டு, காதலின் பலனைக் கண்டோம்' என்றார்கள்.



# இது என்ன அதிசயம்?

—:o:—

[T. J. R. N.]

கமலபுரம் என்று ஓர் நகரம் உண்டு. அவ்வூரில் குபேரகுப்தன் என்ற ஓர் பணக்காரன் இருந்தான். அவனுக்கு பல ஏக்கர் நிலங்களும் விசேஷ ரொக்க லேவாதேவியும் உண்டு. அவனுக்கு வெகுநாட்களாக குழந்தைகள் இல்லாமையால் பல கோவில்களுக்குச் சென்று புண்ணிய தீர்த்தங்களாடிக் கவலையுற்றிருந்தான். கடைசியாக அவனுக்கு ஓர் குழந்தை பிறந்தது. ஆனால் அது பிறவிக் குருடு. இருந்தபோதிலும் குழந்தை ஒன்று பிறந்ததே என்று சந்தோஷத்துடன் அதற்கு அழகானந்தன் என்று பெயரிட்டான்.

அழகானந்தனுக்கு இருபது வயதாயிற்று. குருடாக இருந்தபோதிலும் பணக்காரன் மகனல்லவா? ஆகவே அவனுக்கு மணம் செய்விக்க வேண்டுமென்று தகப்பனுக்கு அவா ஏற்பட்டது. அதன் பொருட்டு எங்கு பெண் விசாரித்தபோதிலும் பணக்காரன் மகனானாலும் குருடனாகையால் பெண் கொடுக்க ஒருவரும் இஷ்டப்படவில்லை.

குபேரகுப்தன் கடைசியாக தன் வீட்டுப் புரோகிதரிடம் இதைக் குறித்து யோசனை கேட்டான். அந்த தீக்ஷிதர் கூன்முதுகுடையவர்.

'இது வெகு கஷ்டமான காரியமாயிற்றே! வெகு தூரத்திற் கப்பால் சென்று பையனின் விஷயம் தெரியாத இடத்திலல்லவோ இதைக் குறித்து ஏற்பாடு செய்யவேண்டும். ஆகவே, இதை முடித்து வைத்தால் எனக்கு என்ன இனாம் கொடுப்பீர்?' என்று கேட்டார் தீக்ஷிதர்.

'உமக்கு வேண்டியதைக் கேளும்' என்று குபேரகுப்தன் பதிலளித்தான்.

தீக்ஷிதர்:—பிள்ளைக்குக் கிடைக்கும் சீரில் எனக்குப் பாதி கொடுப்பீரா?

குரேகுப்தன்:—இவ்வளவு கேட்கலாமா? ஆயினும் எப்படியாவது நீர் காரியத்தை முடித்துவைத்தால் உமது இஷ்டப்படியே செய்கிறேன்' என்றான்.

இந்த ஏற்பாடு முடிந்ததும் தீக்ஷதர் அட்வான்ஸாக ஐந்நூறு ரூபாய் வாங்கிக்கொண்டு வெகு தூரத்திலுள்ள ஒரு ஊருக்குச் சென்றார். அங்கு அழகானந்தன் குருடு என்று யாருக்கும் தெரியாது. தீக்ஷதர் அந்த ஊரில் குபேரகுப்தன் பெரிய தனிகன் என்றும், அவன் அந்தஸ்திற்குச் சமானமானவர்கள், அவன் மகனுக்குப் பெண் கொடுக்க, அங்கு இல்லாததினுல்தான் இவ்வளவு தூரம் பெண் தேடி வந்ததாகவும் சொல்லி, அந்த ஊரில் ஓர் பெரிய தனிகனுடைய அழகு வாய்ந்த பெண்ணை நிச்சயம் செய்தார். சீருக்கும் விசேஷமாக ஏற்பாடு செய்துகொண்டார். பிறகு குபேரகுப்தன் வீட்டிற்குத் திரும்பி அழகானந்தனுள்பட யாவரையும அழைத்துக் கொண்டு விவாகத்திற்குப் புறப்பட்டார். பெரிய பணக்காரர் வீட்டுக் கல்யாணமல்லவா? வழிநெடுக ஜனங்கள் திரளாகக் கூடி வேடிக்கை பார்த்தார்கள்.



புறப்படும் முன்னமே தீக்ஷதர் அழகானந்தனின் கண்களை நன்றாக மூடித் துணியினுல் கட்டி விட்டார். மணமகன் வீட்டார் பெண்ணின் ஊர் அருகே சேர்ந்ததும் சம்பந்திகள் எதிர்கொண்டழைத்துக் கௌரவமாக வரவேற்ருர்கள். மாப்பிள்ளையைக் கண்டதும் கண்கள் என் சட்டப்பட்டிருக்கின்றன வென்று கேட்டார்கள். உடனே தீக்ஷதர் 'மாப்பிள்ளைக்குக் கண்ணில் ஓர் வலி ஏற்பட்டது. அதற்காக முகூர்த்தத்தை என் நிறுத்தி வைக்க வேண்டுமென்று அழைத்துவந்துவிட்டேன். இரண்டுநாள் கழிந்த

னும் கட்டை அவிழ்த்துவிடலாம். அதுவரை மாப்பிள்ளையை ஸ்திரீகள் யாரும் கைதவறி தொட்டுவிடக் கூடாது. அப்படித் தொட்டுவிட்டால் கண்ணுக்கு அனர்த்தம் வந்துவிடுமென்று வைத்தியர் சொல்லியிருக்கிறார். ஆகையால் ஜாக்கிரதையாய் இருங்கள்' என்று சொன்னார். அப்படியே பெண்ணின் தகப்பனரும் உத்திரவு போட்டுவிட்டார். மறுதினம் கல்யாணம் விசேஷவைபவங்களுடன் நடைபெற்றது. சீர்களையெல்லாம் ஒன்று குறையாமல் தீக்ஷதர் கணக்கிட்டு வாங்கிக்கொண்டார். இரண்டு தினங்களும் கழிந்தன.

சம்பந்திகள் யாவரும் மாப்பிள்ளையின் கண்ணை அவிழ்த்துவிடும்படி வேண்டினர். தீக்ஷதர் கட்டை அவிழ்த்துவிட்டு வாயிலும் வயிற்றிலும் அடித்துக்கொண்டார். 'ஐயோ! இதென்ன அநியாயம்! யாரோ அழகானந்தனைத் தொட்டு விட்டார்கள். அவன் கண்கள் குருடாய் போய் விட்டனவே! மன்மதன் போலிருந்த என் அழகானந்தனுக்கு இம்மாதிரி கதியா வரவேண்டும்!' என்று பிரலாபித்தார். உடனே பெண்ணின் தகப்பனிடம் சென்று முறையிட்டுக் கொண்டார். அவரும் தீக்ஷதரை நம்பி தன் வீட்டுப் பெண்பிள்ளைகள் தொட்டு விட்டதைப்பற்றிக் கடிந்துகொண்டார். பெண் பிள்ளைகளும் தங்களை அறியாமல் தொட்டு விட்டோமோ என்று பிரமித்து விட்டார்கள். 'சரி, இது நமது பெண்ணின் தலைவிதி' என்று பெண்ணின் தகப்பனும் சம்பந்திகளும் கருதினார்கள். உங்களா லல்லவோ மாப்பிள்ளைக்குக் கண்கள் போய்விட்டன' என்று பயமுறுத்தி தீக்ஷதர் பின்னும் கொஞ்சம் சீர்பெற்றுக் கொண்டார்.

இந்தச் சீர்களை யெல்லாம் திரட்டிக்கொண்டு தீக்ஷதர், அழகானந்தன மணப்பெண் முதலிய யாவரையும் அழைத்துக்கொண்டு குபேரகுப்தன் வீட்டிற்குத் திரும்பினர். நடுவழியில், தான் அக்கூட்டத்துடன் ஊருக்குத் திரும்பினல், தான் செய்த சூது வெளிப்பட்டுத் தனக்குத் தொந்திரவு ஏற்படும் என்னும் எண்ணம் அவருக்குத் தோன்றிற்று. ஆகையால் அங்கேயே தனது பாதிப் பங்கை வாங்கிக் கொண்டு வேறு தேசம் போய்விட வேண்டுமென்று நினைத்தார். பேராசையினால் அழகானந்தனிடமே சீர்ப்பணத்தைப் பிரித்துக் கொள்ள வேண்டுமென்று ஏற்பாடு செய்தார். அதன்படி தீக்ஷதர் அழகானந்தனைத் தனியாகக் கூப்பிட்டு 'அப்பா, உன் காரியத்தை முடித்து விட்டேன். என் பாகத்தைக் கொடுத்துவிடு நான் வேறு ஊர் போகப் போகிறேன்' என்று சொல்லி மேடு பள்ளமான இடத்திற்கு அவனை அழைத்துச் சென்றார். அங்கு பள்ளமான இடத்தில் ரூபாயை நிரப்பி அதன் மட்டத்திற்குச் சரியாக மேட்டில் ரூபாயை வைத்து, 'அழகானந்தா, இதோ சமமாக ரூபாய்களை வைத்திருக்கிறேன். உன் கையினல் தடவிப்பார்த்து நீ வேண்டும் பாகத்தை எடுத்

துக்கொள்' என்று சொன்னார். அழகானந்தன் பள்ளத்திலுள்ள பகுதியே தனக்கு வேண்டுமென்று தொட்டுக் காட்டினான். உடனே



தீக்ஷதர் 'அடடா! மேடு பள்ளமான இடத்திலல்லவோ பகிர்ந்துவிட்டேன். சமமான இடத்திற்கு போகலாம் வா' என்று சொல்லி மறுபடி மற்றோர் மேடு பள்ளமான இடத்திற்குச் சென்று முன் மாதிரியே பகிர்ந்து வைத்து இஷ்டமானதை எடுத்துக்கொள்ளச் சொன்னார். அப்பொழுதும் அழகானந்தன் பள்ளத்தில் உள்ளதையே விரும்பினான். தீக்ஷதருக்கு அடங்காக் கோபம் மூண்டது. 'முரட்டுப் பயலே! இவ்வளவு சிரமப்பட்டு உனக்கு நான் விவாகம் செய்து வைத்திருக்க இந்தக் குறும்புத்தனமா உனக்கு' என்று சொல்லித் தன் கையினால் ஓங்கி அழகானந்தன் நெற்றியில் ஓர் குத்து விட்டார். அழகானந்தனுக்கு பளிச்சென்று கண்கள் பார்வையடைந்தன! தீக்ஷதர் திடுக்கிட்டு ஓட ஆரம்பித்தார். அழகானந்தன் பின் தொடர்ந்து ஓடி தீக்ஷதர் குடுமியை எட்டிப் பிடித்து 'இவ்வளவு கோபமும் பேராசையுமா உமக்கு?' என்று அவர் முதுகில் ஓர் உதை கொடுத்தான்.

தீக்ஷதருக்கு கூன் நிமிர்ந்து விட்டது! உடனே இருவரும் பரமானந்தங்கொண்டு மற்றவர்களுடன் தங்கள் ஊர் திரும்பி சகல சம்பத்துடன் சௌக்கியமாக வாழ்ந்து வந்தார்கள்.

மணப்பெண்ணின் அதிர்ஷ்டமே! அதிர்ஷ்டம்!!

# ‘சர்க்கரைப் பொங்கல்--சாப்பிடாதே?’

[கா. தி. ஸ்ரீ.]



அட எழவே. சர்க்கரைப் பொங்கல் என்றாலே நாக்கிலே ஜலம் ஊறுகிறதே. என்னையா, இப்படிச் சொல்லுகிறீர்; காப்பியில் காபின் என்ற விஷம் இருப்பதுபோல் சர்க்கரையிலும் ஏதோ இருக்கிறதென்று ஆராய்ச்சி செய்து விட்டீரா' என்று கேள்வி கேட்டுவிடாதீர்கள்! நான் ஒருமையில்தான் சொல்லியிருக்கிறேன். மேலும் பின்னாலிருக்கும் தொரட்டியைக் கவனித்துக்கொள்ளுங்கள். சர்க்கரைப் பொங்கல் என்றால் பச்சரிசி, பாசிப்பயறு, சர்க்கரை, முந்திரிக்கொட்டை, ஏலம், தேங்காய், பால், நெய் என்றெல்லாம் நீங்கள் எஸ்டிமேட் தயாரித்து விடுவீர்கள் அல்லவா? இப்பஞ்ச காலத்தில் சிக்கனம் வேண்டாமா? அதற்காகத் தான் அப்படிப் போட்டேன்.

‘பெருமாள் பிரசாதம் வெகு திவ்யமாயிருக்கு. கட்டேலே போவான் கூடகொஞ்சம் சாதிச்சானா. கையிலே கிள்ரான். நம்ம ஆத்திலே வேணுமட்டும் தளியைபண்ணி சாப்பிடணும்’ என்று சன்னதியிலிருந்து முணுமுணுத்துக்கொண்டே வந்தாள் எச்சுப் பாட்டி.

பாட்டி, என்று சொன்ன மாத்திரத்தில் பூர்வசுமங்கிலி என்று நினைந்துவிடாதீர்கள், பாட்டிக்கு கன்னம் சுருங்கி கண்கள் குழிந்து கூன்முதுகாய் இருந்தபோதிலும் மஞ்சள் குங்குமம் சேர்த்துக்கொள்ளும் பாக்கியசாலிதான் அவள்.

‘ஏங்காணும், இந்தாரும் உம்மைத்தானே. ஒரு தினத்துக்கு சர்க்கரைப் பொங்கல் ஆத்திலே போட்டு பெருமாளுக்கு அம்ஸே பண்ணினா தேவலைன்னு தோன்றது. எத்தனைநா இந்தப் பச்சரிசிக் களி கிண்டி வைக்கிறது. தோஷமின்னோ’ என்றாள்.

‘பொங்கலுமாச்சு, கிங்கலுமாச்சு. காத்துட்டு குதிரைக் கொம்பாயிருக்கு. சம்பாத்யமா என்ன? அபிஸ்ரவணத்துக்கூட என்னைக் கூப்பிடமாட்டேன்றா. வயசாச்சாம். கணீரென்று சொல்லலையாம். நீ பொங்கல்போடு, புளியோதரை போடுன்னு செல்லம் கொஞ்சறே’

என்று அடுக்கினர் அப்தபூர்த்தி ரெங்கய்யங்கார் தாத்தா. (பெரியவாளை தலையிலடிச்சாப்லே மரியாதைக் குறைவாய் சொல்லக் கூடாதுன்னு)

பாவம்! பெரியவர் கொஞ்சம் மானஸ்தர். உஞ்சவிர்த்திக்குக் கூட போகமாட்டார். பாலியத்தில் வைதீகத்தில் சம்பாத்தியம் கொஞ்சம் செய்தார். அதைக்கொண்டு திருக்கோவிலூரில் ஒரு ஏக்கர் நிலம் வாங்கியிருந்தார். அது விளைந்தால் சுமார் 7, 8, கலம் நெல் வரும். தீர்வை, தசைகூலி, மேற்செலவு இவைகளுக்கெல்லாம் என்ன செய்வார்? பிள்ளைகுட்டி ஒன்றும் கிடையாது. காலக்ஷேபம் மிகவும் கஷ்டமாகவே இருந்தது.

என்ன கஷ்டமாய் இருந்தால்தான் என்ன? பாட்டிக்கு சர்க்கரைப் பொங்கல் பிசாசு பலமாய் பிடித்திருந்தது. 'ஆத்துப் பெருமாளை நம்பினால் வயித்துப் பெருமாள் பட்டினிதான். இந்தக் கிழடோ ஒன்னும் செய்ய ஒட்டேன் இன்றது. சுமங்கலிப் பிரார்த்தனைமாதிரி, சரிதான், அப்படித்தான் செய்யனும்' என்று மனதில் சொல்லி உறுமிக் கொண்டாள்.

5, 6, நாட்கள் கழிந்தன. வெள்ளிக்கிழமை, விளக்கேற்றும் நேரம். பாட்டிக்கு தலைசுற்ற ஆரம்பித்தது. ஆட்டம் வலுத்தது. தரையில் ஓங்கி ஓங்கி அறைந்தாள். ஆ......ஊ......ஆ......ஊ. ... என்று கத்திக்கொண்டு முத்தத்துக்கும் வாசலுக்கும் ஓடினாள். வாசல் திண்ணையில் ஜெபம் செய்துகொண் டிருந்தார் தாத்தா. கையைப் டிடித்து காகாவென்று இழுத்துக்கொண்டு உள்ளே ஓடினாள்.

பாட்டிபோட்ட கூச்சலாலும், கையை விடாமல் பிடித்து ஆட்டின ஆட்டத்தாலும், அலண்டு விலவிலத்துப் போய் தாத்தாவுக்கும் கைகால் ஆட்டம் எடுத்து விட்டது.

'நான் இன்னாருன்னு தெரியல்லே—அலமேலுமங்கைத் தாயார். ஹூம்......நான் இங்கேதான் இருக்கேன். ஹூம்......வெள்ளிக்கு வெள்ளி சர்க்கரைப் பொங்கல் செய்து—ஆராதனை எனக்குச் சேவையா—என்ன? ஆத்திலே நான் பிரத்யக்ஷம்.......ஹூம்......' (ஆட்டம் மும்மரம்)

தாத்தா கீழே விழுந்து சாஷ்டாங்கமாய் தண்டம் சமர்ப்பித்து, 'அபசாரம் மன்னிக்கனும், செய்ரேன் செய்ரேன்' என்று எழுந்து அஞ்சலி செய்து நிற்கவே, நீ நன்னாருப்பே' என்று வாழ்த்தியபின் பாட்டியின் அருளும் நின்றது.

பெரியவர் என்ன செய்வார்? அக்கம்பக்கத்து வீட்டார்களிடத்தில் சொல்லி கெஞ்சிக் கூத்தாடி காற்படி அரிசி வீட்டிற்கு ஒருவராய்

கட்டளை செய்யும்படி செய்தார். தாத்தா தளிகை தயாரிப்பதும், பாட்டி ஆடி ஆடி அவ்வளவையும் காலி செய்வதுமா யிருந்தது. கட்டளைக்காருக்கும் மடப்பள்ளிகாருக்கும் பிடி சாதம்கூட கிடையாது.

தாத்தா ஆறுவதுவீட்டு திருமலாச்சாரியாரிடம் அடுத்த வாரத்துக்காக பீடிகை போட்டதில், அவர்சாமான்களை அன்றே கொண்டு வந்து நேரில் தளிகை போடுவதாக சொல்லி அனுப்பிவிட்டார். ஆராதனை தினத்தன்று மணி 7 ஆகியும் திருமலாச்சார் வரவில்லை. தளிகையும் போடவில்லை. அம்மாளுக்கு ஆவேசம் ஆரம்பித்தது. 'எங்கே பிராம்மணு—தளிகை தயாராகல்லே' என்று அதட்டினள். தாத்தா பிரமித்து வாசலுக்கு ஓடிவந்தார். திடுக்கிட்டார். வெளியிலும் ஒருவர் ஆட்டம்.

'எங்கே—அலமேலுமங்கை—என்னைவிட்டுட்டு—நான் திருப்பதிப் பெருமாள்ன்னு தெரியல்லே'—என்று ரெங்கய்யங்கார் கையைப் பிடித்து ஆட்டிக்கொண்டே உள்ளே சென்றார் திருமலாச்சாரியார்.

இருதலைக்கொள்ளி எறும்புபோல் ஆனர் கிழவர். 'சாமியாட்டங்கள் எல்லாம் எளியவர்களிடந்தானு' என்று பிரமித்து நின்றார்.

உடனே ஆச்சாரியார் பாட்டிமேல் பாய்ந்து, தலை மயிரைப் பிடித்து ஆடிக்கொண்டே, 'என்னைவிட்டு இங்கே எப்படித் தனியாய் வந்தாய்'—ஹூம்........ஹூம்........என்று ஆட்டு ஆட்டென்று ஆட்டினர்.

பாவம்! எச்சுப் பாட்டி பொங்கல் கிடைக்குமென்று அன்று பூராவும் பட்டினி. (நிறைய சாப்பிடலாமென்று) திருப்பதி பெருமாள் சும்மாவிட்டாரா. தாத்தா தடியைத் தூக்கி மங்கைக்கு இரண்டு மூன்று அடியும் ஆராதனை செய்துவிட்டு 'சாப்பிடாதே—இனிமேல் இங்கே—இருக்காதே—'பிரமாணமாய்ச் சொல்லு' என்று கேட்ட வண்ணமாய் தெருவிலே காலாபக்கமும் காகாவென்று இழுத்தடித்தார். இரவு மணி எட்டேதான். தெருவில் கூட்டம் கூடிவிட்டது. பாட்டிக்கு பட்டபாடு போதும் போதும் என்றாய் விட்டது. 'கேக்கல்லே, ஐயோ! விட்டுடும்! சாப்பிடல்லே, ஐயோ இல்லை. சத்யமாய்—நான் போறேன் போறேன்' என்று கூச்சலிட்டாள்.

இருவர் அருளும் நின்றது. பொங்கல் கட்டளையும் முடிந்தது. பாட்டி எப்பொழுதாவது பித்தத்தினல் தலை சுற்றினலும் திருப்பதி பெருமாளைக் கூப்பிட்டா என்பார் தாத்தா. உடனே பித்தமும் அருளும் பஞ்சாய் பறந்துவிடும் எச்சுப் பாட்டிக்கு.

# டாக்டர் சாரதை

[ஆர். சந்திரன்]

கருப்பன் சாம்பான், கருப்பண்ண கவுண்டனிடம் தினம் மூன்றுபடி தானியத்திற்காக உழைக்கும் பண்ணையாள். இரவு பகலாய் சிரமம் பாராது உழைத்து வருவான். பண்ணையாண்டைக் கவுண்டனின் மகள் சாரதா எனும் பெயரைக் கொண்டவள். அந்தப் பெயரையே கருப்பனும் தன் ஒரே மகளுக்கு சூட்டி அழைத்து வந்தான். அவன் மனைவியின் பெயர் கருப்பாயி. இரண்டு வருஷங்களாக நோய்வாய்ப்பட்டு வேலை செய்யச் சக்தியற்றவளா யிருந்தாள். கஞ்சி காய்ச்சுவதற்கே அவள் மிகக் கஷ்டப்படவேண்டி யிருந்தாள். சாரதா ஏழுவயதுக் குழந்தை. கருப்பன் சம்பாத்தியம் மூவருணவிற்கு போதாமல் வருந்தினர்.

ஐப்பசிமாதம், அபரிமிதமான மழைபெய்து பறச்சேரி ஒரே சேறாயிருந்தது. மாட்டிறைச்சியின் அழுகிய நாற்றம் தூரத்தே வருபவர்க்குக்கூட பறைச்சேரி என்று அறிவித்தது. சில குடிசைகளிலிருந்து அழுகைக்குரல் கிளம்பிக்கொண்டிருந்தன. பல குடில்களிலிருந்து ஒய்! ஒய்! என்னும் வாந்திசெய்யும் சப்தம் வெளிவந்தது. சாரதாவின் தாயும் இந்த கொடிய வாந்திபேதியால் பீடிக்கப்பட்டு குற்றுயிராய் படுத்திருந்தாள்.

இரவு மணி ஒன்பது இருக்கலாம். வயலில் அதிக வேலையிருந்ததால் இன்னம் கருப்பன் வந்து வீடுசேர முடியவில்லை. மேகக்கூட்டங்கள் கிளம்பி நக்ஷத்திரங்களையும் மறைத்ததால் இருள் அதிகமாயிற்று. பளீர் பளீர் என மின்னலும் சேர்ந்து கண்ணைக் கூசவைத்ததால் இருளில் ஏதும் தெரியாமல் பயங்கரத்தை பெருக்கிற்று. குமுறுகின்ற இடிமுழக்கமும் இதனோடு சேர்ந்து கல்நெஞ்சனையும் கலக்கத்தக்க கோர நிலையிலிருந்தது. குளிர்மேலீட்டால் கருப்பன் நடுங்கிய வண்ணம் மாட்டுக்கொட்டிலில் உட்கார்ந்து தன் கஷ்ட நிலையையும், மனைவியையும் எண்ணினான். சகிக்கத்தரமற்ற வருத்தமும், அதனோடு ஒரு புத்துணர்ச்சியும், அவன் மனதில் எழுந்தது. வயலிலிருந்து பறச்சேரிக்கு கல்லும் முள்ளும் நிறைந்த ஓர் சிறியபாதையில்

அரைமைல் தூரம் செல்லவேண்டும். இருள் சூழ்ந்த அந்தகாரம். சோ என்றடைத்துப் பெய்யும் மழை. இவைகட்கு அஞ்சி கொட்டி லில் குறுகியிருந்த கருப்பன் தன் மனைவியின் கஷ்டநிலைமை யுன்னி யதும் தன்னையும் அறியாது மிக ஆத்திரத்துடன் நடந்து செல்ல லானன். முதலில் ஒரு முள் நறுக்கென்று தைக்கும். இரண்டாவது அடி ஒரு கல்லின்மேல் வைப்பான். முள் இன்னம் அதிக ஆழத்தில் சென்று மிகுந்த வலியை யுண்டுபண்ணும். தன் மனைவியின் கவலை யால் இவையெவைகளையும் மதியாது நடந்து சென்றான்.

குடிசையை அடைந்ததும், கதவைத் திறந்து உள் சென்றான். இருள் கவிந்திருந்தது. தட்டித் தடவிக்கொண்டே தீப்பெட்டியிருக் கும் இடத்தை கண்டுபிடித்தெடுத்தான். விளக்கை ஏற்றிப்பார்த் தான். ஏழைச் சிறுமி சாரதா ஏதும் உணராவண்ணம் உறங்கு கிருள். மனைவியை உற்று நோக்கினன். அசைவில்லை. நெஞ்சைத் தொட்டுப் பார்த்தான். இறக்க வில்லை என்று தெரிந்தது. அன்பும் துக்கமும் மேலிடவே அவள் கன்னங்களில் இரண்டு கையை வைத்துக்கொண்டு கண்ணீர் செரிந்தான். கருப்பாயி மெல்லக் கண் திறந்தாள். தண்ணீர் வேண்டு



மென்று சைகை செய்தாள். பாவம் பேசமுடியவில்லை. புருஷன் வாயில் தண்ணீரைவிடவே அதை விழுங்கிவிட்டு மெள்ள கருப்ப னின் கையைப்பிடித்தாள். எழுந்தாள். ஈனஸ்வரத்தில்...சா...ர....தா என்றாள். அவ்வளவுதான் முடிந்தது, மண்ணுலகை நீத்தாள். மறு நாள் காலையில் பிணத்தை புதைத்விட்டு வீடுவந்துசேர்ந்தான்.

பிறகு பண்ணை ஆண்டையின் வீட்டிற்கு சாரதாவையும்கூட அழைத்துக்கொண்டு போனன். கொஞ்சம் சோறு கொடுத்தார் கள். சாப்பிட உட்கார்ந்தான். மனைவியின் ஞாபகம் வந்தது. கண் ணில் நீர் பெருகிற்று, துக்கம் தொண்டையை அடைத்தது. சாதத்தை விழுங்க முடியவில்லை. அவன் மனம் எண்ணாததெல்லாம் எண்ணிற்று. சாரதாவை வளர்ப்பதற்காக உயிரோடிருக்கலாம் என்ற

எண்ணம் மறைந்தது. ‘செடிவைத்தவன் தண்ணீர் ஊற்றுவான். சாரதாவை படைத்தவன் அவளைக்காக்கட்டும். நான் என் மனைவியைப்போய் காணவேண்டும்’ என்று தீர்மானித்தான். அன்றைய இரவு பக்கத்துவீட்டு மாரியாயி கொஞ்சம் கஞ்சி காய்ச்சி கொடுத்தாள். அதைக் குடித்துவிட்டு படுத்தான். தூக்கம் பிடிக்கவில்லை. எழுந்து விளக்கை யேற்றினான். சாரதாவைப் பார்த்து ஒரு முத்தம் ஈந்தான். கண்ணில் நீர் தாரைதாரையாய் வடிய, ‘ஆண்டவா! எம்மகளை பாத்துக்கோ’ என்று சொல்லிவிட்டு வீட்டைவிட்டு வெளியேறினான். தூரத்திலுள்ள சுடுகாட்டிற்கேகி மடியில் இருந்த கத்தியை எடுத்து மார்பில் செலுத்தினான்.

அநாதையாயினள் சாரதா. அதே காரைப்பட்டியில் வசித்த முத்துரங்கநாயுடு ஏராளமான பூஸ்தியுடைய பணக்காரர். அவர் மனைவி ரங்கநாயகி பர்த்தாவின் விருப்பப்படி நடக்கும் குணவதி.

பாலாயன், நாயுடுவின் ஒரே செல்வப் புத்திரன். நாயுடு ஒரு தினம் தன் வயல்களுக்கு போய்விட்டு சாலைவழியாய் வந்துகொண்டிருந்தார். சாரதா பசிக்காற்றாது அழுதுகொண்டிருப்பதைப் பார்த்தார். அவளை அருகில் அழைத்து, ‘பெண்ணே நீ ஏன் அழுகிறாய். நீ யார்?’ என்று அன்புடன் கேட்டார். ‘சாமீ என் அம்மா, அப்பன் இரண்டுபேரும் செத்துப்போனாக. எனக்கு பசிக்குது. ஊர்லே ஒருத்தரும் சோறு கொடுக்கிறதில்லை அன்னுட்டாக. வவுறு பசிக்குது; அதான் அழுதேன்’ என்று சிறுமி பதிலளித்தாள்.



‘ஊரிலுள்ளோரும் உறவினரும் தூஷிக்கத்தான் செய்வார்கள். அவர்களுக்கு அஞ்சி இவளை காக்காவிடில் என்னை தெய்வம் தண்டிக்கும். அவர்கள் தூஷிப்புக்கு பாத்திரனாகி தெய்வ அன்பைப் பெறுதல் நலம்’ என்று எண்ணி அவளை வீட்டிற்கு அழைத்துக்கொண்டேகினார் நாயுடு. சாரதாவை அறிமுகம் செய்து அவளுக்கு கொஞ்சம் அன்னமிடச்சொல்லி தன் மனைவியிடம் கூறினார். சாரதாவின் திக்கற்ற நிலையையுணர்ந்த அவள் நெஞ்சில், பறைச்சி என்னும் வேற்றுமை யுண்டாகவில்லை. சுத்தமான நாகரிக உடை சாரதாவுக்களித்து பள்ளிக்கு அனுப்பி அவளை செல்வமாக வளர்த்தார்கள்.

பாலாயனும் சாரதையும் ஒரே பள்ளியில் ஒழுங்காக வாசித்தனர். சென்னை சர்வகலாசாலையில் பட்டம் பெற்றனர். கல்வியும் வயதும் பெருகப்பெருக அவர்களிடையே இருந்த அன்பு காதலாக மாறி பெருகி வந்தது. தாய்தந்தையரும் காதலரின் அன்பைப் பார்த்து பெரு மகிழ்வுகொண்டனர்.

நிகழும் வருடம் நிகழும்......மாதம்......தேதி, கே. எம். பாலாயனுக்கும், டாக்டர் கே. சாரதாவுக்கும் இனிதாக காதல் கலப்பு திருமணம் நடப்பதாக தீர்மானிக்காய்விட்டது. சந்தோஷத்துடன் மணமக்களை ஆசீர்வதித்து இனிமேலும் இத்தகைய சீர்திருத்த மணங்கள் ஏற்படும்படி தெய்வத்தை அருள்புரிய வணங்குங்கள்.

---

சந்தைக்குச் சென்ற ஓர் உலோபி ஆங்கொரு கடைக்காரனைப் பார்த்து, இந்த சந்தையில் காசு கொடாமல் ஏதாவது வாங்கலாமா வோய்?

*கடைக்காரன்:*—ஓ! பேஷா வாங்கலாம்.

*உலோபி:*—(ஆவலுடன்) அது என்னவோய்!

*கடைக்காரன்:*—அதுதான் ஓய்! 'சந்தை இறைச்சல்'

—நா. திருநாவுக்கரசு

*அக்காள்:*—ஏண்டா ராமு! நீ ரயில்லே வேலையா இருக்கேன்னு பேருதான் என்னெ எங்கியாவது ஒரு எடத்துக் கொண்டுபோய்க் காண்பிச்சிருக்கையா?

*ராமு:*—இல்லே அக்கா, உன்னை எல்லாரும் போகின்ற வண்டியில் அழைத்துப் போகிறதா. இல்லாதபோனல் ஸ்பெஷலாக 'கூட்ஸ்' வண்டியில்கொண்டு போகிறதா என்று யோஜிக்கிறேன்.

—எம். சுப்பிரமணியம்



தம்பீ! அந்தமாட்டைப் பிடியேன்'

'முட்டினல்!'

'முட்டுமின்னுதான் ஒன்னெ பிடிக்கச்சொல்றேன்.'

—திருவை கே. வைத்தியநாதன்

# அத்தான் நானுனக்குச் சொந்தம்!

[வித்வான் ஆ. பசுபதியப்பன்]



தோட்டத்தில் கமலை நீர் இறைத்துக்கொண்டிருந்த முத்தனுக்குப் பசி சகிக்கமுடியவில்லை. காலை மணி ஒன்பதரையாயிற்று. எஜமான் வீட்டிலிருந்து இன்னும் பழைய சாதம் வரவில்லை. சாதாரணமாய் எட்டுமணிக்கு முன்னதாகவே எஜமாட்டி சாதத்துடன் வந்துவிடுவாள். இன்று வெகு நேரமாகியுங் காணோம். முத்தனுடைய கண்களெல்லாம் எஜமாட்டி வரவை எதிர்நோக்கிக் கொண்டிருந்தன.

எஜமாட்டியின் பெண் ரங்கம் தோட்டத்தின் வேலியோரத்தில் கையில் ஒரு பாத்திரத்தைப் பிடித்துக்கொண்டு வருவதைக்கண்டான். 'இந்தச் சனியன்பிடித்த பெண் வரும்போதெல்லாம் இப்படித்தான். களைத்துக் கைகாலெல்லாம் சோர்ந்தபிறகுதான் வந்துசேருகிறாள். தின்றுவிட்டு வீட்டில் கிடக்காமல் இது என் துள்ளிக்கொண்டு வருகிறது?' என்று சலிப்புடன் சொல்லிக்கொண்டு பக்கத்தில் வந்துவிட்ட ரங்கத்தைக் கோபத்துடன் பார்த்தான்.

'என் முத்தா! கமலையை நிறுத்திவிட்டு பல் துலக்குவதுதானே! என், இன்னும் பசிக்கவில்லையோ!' என்று புன்னகையோடு கேட்டாள் அம்மங்கை. முத்தன் பதிலொன்றும் சொல்லாது கமலையை நிறுத்திவிட்டு, சிறிது மண்ணை அள்ளி வாயில்போட்டுக்கொண்டு மடவாயண்டை ஓடினான். அம்மண்ணால் பல்லைத் துலக்கி வாய்கொப்பளித்துவிட்டு மிளகாய்ச்செடியண்டை ஓடினான்.

---

'மிளகாய் வேண்டாம்' வேறு பதார்த்தம் கொண்டுவந்திருக்கிறேன் வா!' என்று ரங்கம் கூப்பிட்டாள். பேசாது ரங்கத்தண்டை திரும்பி ஓடிவந்து இருகைகளையும் நீட்டி 'சாதத்தை ஊற்று' என்றான். ரங்கனுடைய சுறுசுறுப்பையும் கபடமற்ற தன்மையையும் கண்டு களித்த மங்கை, 'கையில் ஏதுக்கு? இந்தா, இப்பாத்திரத்தோடே சாப்பிடு' என்றாள். 'வேண்டாம், வேண்டாம், கையில் வாங்கித்தான் பழையசாதம் சாப்பிடுவது என் வழக்கம்' என்றான்.

ரங்கம் சிரித்துக்கொண்டு 'உன் இஷ்டம்போல் சாப்பிடு' என்று சொல்லிக் கீழே உட்கார்ந்துகொண்டு முத்தன் கைகளில் சாதத்தை ஊற்றினாள். இரண்டு மூன்று கை வாங்கிச்சாப்பிட்ட பிறகு, 'மிளகாய் இல்லாது சாதம் ருசிக்கவில்லை' என்றான்.

'இதோ ஊறுகாய் கொண்டுவந்திருக்கிறேன்' என்று மடியில் வைத்திருந்த சிறு பொட்டணத்தை யவிழ்த்து ஒரு துண்டுவைத்தாள். அதைத்

தின்று திருப்திகொண்ட முகத்தைக்கண்ட ரங்கம் மகிழ்ச்சியடைந்தாள். ஒவ்வொரு கையாக அவள் ஊற்றவும் அதை அவன் வாங்கி உண்ணுவதையும் ஆவலோடுபார்த்து சந்தோஷப்பட்டுக்கொண்டாள். 'வயிறு நிறம்பிற்று, முத்தா?' என்று புன்னகையோடு கேட்டாள். முத்தனும் தலை நிமிர்ந்து களிப்புடன் 'ஆம்' என்று சொல்லியவண்ணம் அவள் முகத்தை நோக்கினன். அப்பார்வையில் யாதொரு விசேடமும் இல்லாவிடினும், ரங்கம் சிறிது நாண மடைந்தவள்போல் தலை குனிந்து 'நான் வரும்போது நீ கோபத்துடன் இருந்ததுபோல் தோன்றிற்றே, அதென்ன?' என்றாள்.

'எனக்கென்ன கோபம்? வேறொன்றுமில்லை. அம்மா அவர்கள் வந்திருந்தால் நேரத்தில் சாதம் கொண்டுவந்திருப்பார்களே, எதக்காக நீ வர வேண்டும், நான் பசியால் வாடவேண்டும்' என்பதுதான்' என்று தன் மனதில் உள்ளதை ஒளியாமல் சொல்லி, 'இனிமேல் நீ சாதம் கொண்டுவராதே!' என்றான்.

ரங்கத்திற்கு பகீரென்றாயிற்று. முகம் வாடிற்று. அதைக்கண்ட முத்தன் 'வேறொன்றுமில்லை; கொஞ்ச நேரத்திலேயே வந்துவிட்டால் சரிதான்' என்று சொல்லிக்கொண்டே கமலையண்டை ஓடினன்.

'ஏன் அவ்வளவு அவசரமாய் ஓடுகிறாய்? தண்ணீர் கட்டும் சக்கிலியன் இன்னும் அதோ சாப்பிட்டுக்கொண்டிருக்கிறான். சிறிது உட்காரு; இந்தா வெற்றிலை போட்டுக்கொள்' என்று ஆவலுடன் சொன்னாள்.

முத்தன் திரும்பி நின்று, 'வேண்டாம், வேண்டாம், நான் வெற்றிலை போடும் வழக்கமில்லை' என்று தன் வெள்ளிய பற்கள் தோன்றும்படி நகைத்துத் தான் சொல்வது உண்மை என்பதைக் காண்பித்தான்.

'வழக்க மில்லாவிட்டால் போகட்டும். இன்று போட்டுக் கொள்வேன்!'

'சரி, சரி, நீ போட்டுக்கொள்' என்று சிரித்துக்கொண்டு ஓடிவிட்டான்.

மறுபடியும் அவனைக் கூப்பிட ரங்கத்திற்கு தைரியமில்லை. 'பாவம்! ஓய்வில்லாத வேலை. ஆனால் அவனுக்குச்சலிப்பில்லை. மனம் நிம்மதியுடனிருக்கிறானே!' என்று சொல்லி, அவன் விஷயத்தில் தான்கொண்ட கவலையை ஆற்றிக்கொண்டாள்.

'வீட்டுக்குக் கொஞ்சம் பச்சை மிளகாய் வேண்டும், பிடுங்கிக்கொடு முத்தா!' என்று முத்தனிடம் போய் சொன்னாள். அதற்கு முத்தன் 'எனக்கு நேரமாயிற்று. இன்னும் ஓரணப்பு பாயவேண்டும். நீயே பிடுங்கிக் கொண்டு போ' என்றான்.

இதைக்கேட்ட ரங்கத்திற்கு மிகுதியும் வருத்தம் ஏற்பட்டது. தன்னை அவ்வளவு அலட்சியம் செய்வதை அவள் கிஞ்சிற்றும் எதிர்பார்க்கவில்லை. எஜமாட்டி பெண்ணென்றாவது அவன் கவனித்திருக்கவேண்டாமா?

பலவித எண்ணத்துடன் மிளகாய் பாத்திக்குள் சென்ற ரங்கம் 'முத்தா! முத்தா! ஓடிவா, சீக்கிரம்!' என்றாள். கமலையை விட்டுவிட்டு ஓரே பாய்ச்சலாய் ரங்கத்தினிடம் ஓடி, 'என்ன சமாச்சாரம்?' என்றான்.

ரங்கம் சிரித்தாள்.

'அட பைத்தியமே! அவ்வளவு அவசரமாய்க் கூப்பிட்டுவிட்டு சிரிக்கிறாயே!' என்று முகத்தைச் சுளித்துக்கொண்டான் முத்தன்.

'ஏன், நான் சிரிப்பது உனக்குப் பிடிக்கவில்லையோ?'

'ஏதோ பாம்பாக்கும் என்றல்லவோ நினைத்து ஓடிவந்தேன். ஏன் கூப்பிட்டாய் சொல்' என்று அதட்டினான் முத்தன். குழந்தைப் பருவமுதற் கொண்டு கூடவே பழகினவனானபடியால் முத்தன் எஜமாட்டியின் பெண்ணிடம் காட்டவேண்டிய மரியாதையைக் காட்டவேண்டுவதவசியமென நினைக்கவில்லை.

ரங்கம் இன்னது சொல்வதென்று தெரியாது சற்று யோசித்து 'பாம்புதான் ஒன்று ஓடிற்று; கூப்பிட்டேன்' என்றாள். முத்தன் அங்குமிங்கும் தேடினான். பாம்பு தென்படவில்லை. 'அது. எங்கோ ஒளித்திருக்கும்; காணோம்' என்று சொல்லி ஓட ஆரம்பித்தான்.

'முத்தா! எனக்குப் பயமாயிருக்கிறது. நீதான் மிளகாய் பறித்துத்தரவேண்டும்' என்று சொல்லி அவனைத் தடுத்தாள்.

'இதென்னடா இளவு! வேலைகெடுதே! மத்தியானத்திற்குள் இந்த ஓரணப்பும் பாயவேண்டுமே!' என்று முணுமுணுத்துக்கொண்டு, அவசரமாய் மிளகாய் பறிக்கலானான்.

'ஐயோ காலில் முள் தைத்துவிட்டது. இதைக் கொஞ்சம் பிடுங்கப்பா!' என்று காலை நொண்டினாள் ரங்கம். முத்தன் பக்கத்தில் வரவே, வலது கையால் அவன் இடதுதோளைப் பிடித்துக்கொண்டு தன் இடது காலைப் பின்னால் வளைத்து மற்றக் கையால் தூக்கினாள். கை நடுங்கிற்று. மனம் பதைத்தது. முத்தன் முகத்தை உற்று நோக்கினாள். கால் தடுமாறி விழப்போய் முத்தன் கழுத்தை இருகரங்களாலும் பிடித்துக்கொண்டாள். அப்படியே ஒரு நிமிஷம் நின்றான். அவளுடைய உஷ்ணமான மூச்சு முத்தன் மார்பில் வேகமாக அடித்தது.



'சரி முள் வந்துவிட்டது. கையை எடு' என்றான் முத்தன். பெருமூச்சு விட்டுக்கொண்டு கைகளை எடுத்துவிட்டு அவனுடைய முகத்தைப் பார்க்கத் தலை நிமிர்ந்தாள். ஒரே ஓட்டத்தில் கமலையண்டை போய் விட்டான் முத்தன்.

முத்தன் மிளகாயைப் பாத்திரத்தில் நிரப்பிவைத்திருந்தான், அதை எடுத்துக்கொண்டு மனம் ஊசலாட, கால்கள் தள்ளாட, முத்தனைப் பார்த்துக் கொண்டே நடந்தாள்.

'இனிமேல் நீ தோட்டத்திற்கு வந்து என் வேலையைக் கெடுக்காதே,' என்று சொல்லிச் சிரித்தான் முத்தன்.

அந்தச் சிரிப்பு ரங்கத்திற்கு யாதொரு தேர்தலும் அளிக்கவில்லை. மௌனமாக தலையைக் குனிந்துகொண்டு நடந்தாள். கைதவறிப் பாத்திரம் கீழே விழுந்தது. மிளகாயெல்லாம் சிதறிப் பலவாக்கில் ஓடின. முத்தனைப் பார்த்தாள். 'ஏன் பார்க்கிறாய்? பொறுக்கி போட்டுக்கொண்டு போ!' என்று கமலையை ஒட்டிக்கொண்டே சொன்னான். ரங்கம் ஒன்றும் பேசாது கீழே உட்கார்ந்து மிளகாய்களையெல்லாம் பொறுக்கிப் போட்டுக்கொண்டு மனம் ஒருபக்கம் இழுக்க, கால்களை ஒரு பக்கமாக இழுத்துக்கொண்டு வீடு நோக்கிச் சென்றாள்.

* * *

ரங்கத்திற்கு வயது பதினேழு முடிந்து பதினெட்டு நடக்கிறது. தந்தை இறந்து ஐந்து வருடங்கள் கழிந்தன. தாயும் தானுமட்டுந்தான் வீட்டிலுள்ளவர்கள். இவர்களுக்கு ஐந்து ஏக்கர் தோட்டமுண்டு. புகையிலை, சோளம், ராகி முதலியவற்றால் வருஷத்திற்கு எண்ணூறு ரூபாய் வரும்படிகிடைக்கும். தோட்டச் செலவிற்கும் சிக்கனமான குடும்பச் செலவிற்குமாக வருடத்தில் பாதி கழிந்துவிடும்.

புருஷன் இறந்த ஐந்து வருடத்தில் இரண்டாயிரம் ரூபாய் மீதம் செய்திருக்கிறாள் தங்கம்மாள்.

தங்கம்மாளுக்கு நெருங்கின பந்துக்கள் ஒருவரும் கிடையாது. தமையன் ஒருவன் உண்டு. அவனுக்குச் சொந்த நிலம், வீடுகள் கிடையாது. இவ்விடம் பிழைப்பதற்கு வழி ஒன்றும் அறியாமல் சிலோனுக்குக் கூலிவேலை செய்வதற்காகத் தன் மனைவியுடனும், இரண்டு ஆண் குழந்தைகளுடனும் சென்று இருபது வருடங்களாயின. நாளதுவரை அவனைப்பற்றிய தகவலொன்றுங் கிடையாது.

தங்கம்மாளுடைய புருஷன் இறப்பதற்குச் சுமார் பத்தாண்டுகளுக்கு முன், ஒரு வேளாளன் தன் பெண்சாதியுடனும் ஐந்து அல்லது ஆறுவயதுள்ள ஒரு ஆண் குழந்தையுடனும் அவ்வூருக்குப் பிழைப்பதற்கு வந்து, இவர்கள் தோட்டத்தில் சேர்ந்துகொண்டான். அந்தக் குழந்தைக்கு பத்து வயதானபோது காலராவில் தாயும் தகப்பனும் திடீரென இறந்துவிட்டார்கள். தங்கம்மாள் திக்கற்ற பையன்மீது அன்புகொண்டு தன் வீட்டிலேயே வைத்துக்கொண்டாள். தோட்டத்தில் அவனாலான வேலையைச் செய்து வரும்படி சொன்னாள். தங்கம்மாளும் அவள் புருஷனும் மிகுதியும் அன்புடையவர்கள். அவர்கள் அன்பால் முத்தன் தன் பெற்றோர்களது ஞாபகத்தை நாளடைவில் மறக்கலானான்.

நாளுக்கு நாள் தோட்டவேலையில் அவனுக்கு உற்சாகம் தோன்றிற்று. மிகுந்த உழைப்பாளியாயினன். சோம்பல் என்பது சிறிதும் கிடையாது. கபடமற்றுக் கருத்துடன் பாடுபட்டான். இவனது நடத்தையைக் கண்ட தங்கம்மாளுக்கு இவன்மீது ரொம்பவும் நம்பிக்கை ஏற்பட்டது. தனது புருஷன் இறந்தபிறகு தோட்டத்திற்குச் சர்வாதிகாரி இவனே! ஆயினும் இவன் ஓர் வேலைக்காரன் என்பதும் தான் எஜமாட்டி என்பதுமட்டும் தங்கம்மாள் மனத்தைவிட்டு அகலவில்லை.

இப்பொழுது முத்தனுக்கு வயது இருபத்தொன்று. நன்ருய் கட்டப் பட்டு வேலை செய்வதால் அவ்யவங்களெல்லாம் திரண்டு பருத்து அழகாய் விளங்கின. மனத்தூய்மைக்குத் தக்கபடி முகமும் ஒளியுடனும் உற்சாகத் துடனும் பிரகாசித்தது. எட்டாவது வயதுவரை பள்ளிக்குச் சென் றிருந்தானுதலால் சுமாராய் எழுதப்படிக்கத் தெரிந்திருந்தான். தினந் தோறும் ராத்திரிச் சாப்பாட்டிற்குமட்டும் முத்தன் வீட்டிற்கு வருவான். படுக்கை தோட்டத்துச் சாலையில்தான்.

காலையிலும் மத்தியானத்திலும் தங்கம்மாள் இவனுக்குச் சாப்பாடு தோட் டத்திற்கே கொண்டுபோய்க் கொடுத்துவிட்டு, அப்படியே தோட்டத்தையும் சுற்றிப்பார்த்துவிட்டு முத்தனுடைய வேலையில் திருப்திகொண்டவளாய் வீடுவந்து சேர்வது வழக்கம். நமக்கொரு பிள்ளை இம்மாதிரி இல்லாமற் போயிற்றே என்ற எண்ணங்கூட சில சந்தர்ப்பங்களில் அவளுக்குத் தோன் றினதுண்டு. முத்தனுடைய வேலை ஒழுங்கைப்பற்றி ரங்கததினிடம் ஒவ் வொருவேளை சொல்வதுமுண்டு.

இவனுடைய நடை ஒழுக்கங்களிலும், வடிவழகிலும், ரங்கம் கொஞ்ச காளாக ஈடுபட்டிருந்தாள். நாளுக்கு நாள் அவளுடைய எண்ணம் வளர்ந் தது. ஆனல் முத்தன் இதை ஒன்றும் அறியவில்லை. அவன் அறிந்துகொள் ளும்படி சந்தர்ப்பம் வாய்த்த காலத்திலும் அதை அவன் பொருட்படுத்த வில்லை. தன் எஜமாட்டியின் மகளென்ற முறையில் அவள்மீது அவனுக்கு நிறைந்த அன்பு உண்டு. ஒத்தபருவம், ஒத்த உருவம், ஒத்தகுணம், போதாத தற்கு ஒத்த குலம்! இவற்றை நினைக்கும்போது ரங்கத்திற்கு முத்தன்மீது விசேஷ அன்பு ஏற்பட்டது அதிசயமன்று.

தனது எண்ணத்தைக் குறிப்பால் அவனுக்கு அறிவிக்க முயற்சிக்கிருள். அவன் அதை அறிந்துகொள்வதாகக் காணவில்லை. அதற்குமேல் அவனிடம் நடந்துகொள்ளப் பயப்படுகிருள். தன்னைக் கேவலமாய் நினைத்துவிடுவான் என்ற எண்ணம் வாதிக்கிறது. தாயிடம் சொல்லி மணம் செய்துகொள் ளவேண்டுமென்றுங்கூட நினைத்தாள். ஒரு ஆள்காரனுக்குத் தன் பெண்ணை கொடுக்கச் சம்மதியாள் என்று பயந்தாள். இன்னது செய்வதென்றறியாது கொஞ்ச நாட்களாய் திகைத்துக்கொண்டிருக்கிருள்.

ஒரு நாள் தங்கம்மாள் பக்கத்துக்கிராமத்திலுள்ள மாரியம்மன் கோவி லுக்குப் போய்வருவதாகச் சொல்லி, காலை நேரத்தில் புறப்பட்டுப் போய் விட்டாள். ஆகையால் அன்று முத்தனுக்குப் பழையசாதம் கொண்டுபோகும் பாக்கியம் ரங்கத்திற்கு வாய்ந்தது. எப்படியாவது நமது எண்ணத்தை இன்று முத்தனுக்குப் பகிரங்கமாய் புலப்படும்படி செய்வேண்டுமென்ற உறு தியுடன் தோட்டத்தைச் சேர்ந்தாள்.

'முத்தா! இன்று நேரத்திலேயே உனக்குச் சாதம் கொண்டுவந்துவிட் டேன். என்மீது கோபம் வைத்துக்கொள்ளாதே!' என்று புன்னகையுடன் கூறினள்.

'உன்மீது எனக்குக் கோபம் வரக்கூடுமா? நீ எஜமாட்டி, நான் ஆள் காரன். உங்கள் இஷ்டப்படிதான் நான் நடந்து தீரவேண்டும்.'

'இருந்தாலும் நீ ஓர் ஆண். நான் ஒரு பெண். ஆண் ஆளக்கூடியவனல்லவா? உன் கோபத்திற்கு நான் பயந்துதான் தீரவேண்டும்.'

'ஓ! நான் ஆளவும் வேண்டாம். ஒருவர் அடங்கவும் வேண்டாம். நீ பயப்படவும் வேண்டாம்.'

'அந்தக் குருவிகளைப் பார் முத்தா! ஒன்று இடம் மாறி மாறி உட்கார மற்றொன்று விடாமல் அதைத் தொடர்ந்து தொடர்ந்து பக்கத்திலேயே உட்காருகிறது.'

'குருவிகள் அப்படித்தான். பெண் குருவி போனவிடமெல்லாம் ஆண் குருவி அதைத்தொடர்ந்துகொண்டே செல்லும்.'

'அப்படியா? இதெல்லாம் உனக்கு எப்படியோ தெரிந்திருக்கிறதே!' என்று சொல்லிச் சிறிது புன்னகையுடன் அவன் முகத்தை உற்றுநோக்கினாள்.

'சரி, சரி, இதையெல்லாம் பார்த்துக்கொண்டும் பேசிக்கொண்டு மிருந்தால் வேலை கெட்டுவிடும். நீ சாதத்தை வைத்துவிட்டு சீக்கிரம் வீட்டுக்குப் போ. நான் சாப்பிட்டுக்கொள்ளுகிறேன்' என்றான்.

புதிய காதல் நிறைந்த ரங்கத்தின் இளமனம் முத்தனுடைய வார்த்தையைக் கேட்டதும் திடுக்கிட்டது; முகம் இருளடைந்தது. கண்களில் நீர் ததும்புவதைப்போல் தோன்றிற்று. கீழே குனிந்தாள். பட் பட்டென ஐந்தாறு துளிகள் விழுந்தன. 'சீ! என்ன சபலம்!' என்று கண்ணைத் துடைத்துக்கொண்டு மனதைத் தைரியப்படுத்தப் பார்த்தாள்.

கண்களினின்றும் நீர்த்துளிகள் விழுந்ததையும், ரங்கம் கண்களைத் துடைப்பதையும் முத்தன் பார்த்துக்கொண்டான். 'அம்மா, ரங்கம்! ஏன் அழுகிறாய்? அப்படி ஒன்றும் உன்மனம் வருந்தும்வண்ணம் நான் சொல்லவில்லையே' என்று பக்கத்தில் வந்தான். ரங்கத்திற்கோ, அழுகை அதிகரித்தது. தேம்பித் தேம்பி அழுதாள். அழுகையை அடக்க முடியாமல் தன் சபலத்திற்கு தானே அதிக வெட்கங்கொண்டவளாய் முத்தனை நிமிர்ந்து பாராமலும், மறுமொழி ஒன்றுஞ் சொல்லாமலும் போய்விட்டாள்.

முத்தன் திகைத்துவிட்டான். அவனுக்கு ஒன்றும் புலப்படவில்லை. மறுபடியும் அவளை அழைத்து விசாரிக்கவும் மனம் வரவில்லை. அவள் செல்லும்வரை பார்த்துக்கொண்டே நின்றிருந்து பிறகு வேலை செய்யப்போனான்.

வீட்டுக்குச் சென்ற ரங்கம் ஒருவாறு மனதைத் தேற்றிக்கொண்டு சமையல் செய்யலானாள். சாப்பாட்டு வேளையாயும் தன் தாய் வராததைக் கண்டு, தானும் முத்தனுடன் தோட்டத்தில் சாப்பிடலாமென நினைத்து, இருவருக்குமாக சாதத்தை எடுத்துக்கொண்டு ரங்கம் தோட்டத்திற்குச் சென்றாள்.

முத்தன் முகம் ஆழ்ந்தயோசனையிலிருப்பதைக் கண்டாள். 'முத்தா! வா, சாப்பிடலாம்' என்று புன்னகையோடு கூறினாள். தன்மேல் யாதொரு வருத்தமும் இல்லையென்று முத்தனுக்குக் கொஞ்சம் தைரியம் வந்தது. ஆயினும் அவள் அழுதகாரணத்தை அறியவேண்டுமென்னும் ஆவல் அதிகரித்தது.

'முத்தா, அம்மா இன்னும் வரவில்லை. நான் தனியே வீட்டில் சாப்பிடுவதற்குப் பிடிக்காமல் எனக்கும் சாதம் எடுத்துக்கொண்டு வந்துவிட்டேன்' என்று சிரித்துக்கொண்டு சொன்னாள்.

'சரி, ரங்கம். நீ முதலில் சாப்பிட்டுக்கொள். பிறகு நான் சாப்பிடு கிறேன்.'



'இல்லை. இருவரும் சாப்பிடலாம். நீயும் வந்து உட்கார்ந்துகொள். இதோ இரண்டு இலைகளிலும் சாதத்தை வைத்து விட்டேன்' என்று சொல்லிக் கொண்டே, அவன் பதிலுரைக்குமுன் இலையில் சாதத்தை வைத்து விட்டாள்.

முத்தனும் அவள் அழுதகாரணத்தை விசாரிக்கலாமென்று சம்மதப்பட்டு உடனே உட்கார்ந்துகொண்டு, 'ரங்கா! என் மனம் இன்னும் வருந்துகிறது. நீ காலையில் ஏன் அவ்வாறு அழுதாய்?' என்று வினவினான்.

'நான் அழுதாலென்ன? சிரித்தாலென்ன? அவற்றையெல்லாம் கவனித்தால் உன் வேலை கெட்டுவிடும். உனக்கு உன் வேலையே பிரதானம். அதுவே உன் உயிர். அதுவே உன் இன்பம். உனக்கு வேறென்ன வேண்டும்?' என்று சலிப்புடன் கூறினாள்.

ரங்கத்தினுடைய முகத்தை முத்தன் உற்று நோக்கினான். சந்தோஷமாய் இருந்தது உடனே விசனமாய் மாறினதையும், கோபம்கொண்டதையும் கவனித்தான். அவளும் அவனை நோக்கினாள். இருவரும் வாய் பேசாது ஒருநிமிஷம் ஒருவர் முகத்தை ஒருவர் நோக்கியவண்ணமாய் இருந்தனர். இப்பொழுதுதான் முத்தனுக்குத் தன்னுடன் பேசுவது ஒரு பருவம் நிறைந்த பெண் என்று தோன்றியது. இமைகொட்டாது அவள் சுந்தரவதனத்தை நோக்கினான். கருத்தை அறிவிக்கும் கண்களைக் கவனித்தான். அவனது பார்வையை எதிர்த்து நோக்கும் வன்மையில்லாது, வெட்கத்தால் ரங்கம் தலை குனிந்தாள். ரங்கத்திற்கும் சிறிது ஆறுதல் ஏற்பட்டது.

'ஏன் முத்தா! சாப்பிடலாமே! இன்று வேலை அதிகமில்லை போல் இருக்கிறது' என்று ஒருவித வெற்றிக்குரலில் ரங்கம் பேசினாள். முத்தன் ஒன்றும் பேசாது சாப்பிட ஆரம்பித்தான். அடிக்கொரு தடவை அவளை உற்று நோக்கினான். அவன் அவ்வாறு நோக்கும்போதெல்லாம் ரங்கம் வெட்கத்துடன் சிறிது புன்சிரிப்பெய்தி தலையைக் கீழே குனிந்து கொள்வாள்.

முத்தன் ஒருவாறு அவள் கருத்தை அறிந்துகொண்டான். எனினும் நிச்சயம் ஏற்படவில்லை. 'ரங்கம்!' என்று ஆரம்பித்து வேறொன்றும் சொல்லாது நிறுத்திக்கொண்டான். முத்தனுடைய தடுமாற்றத்தைக் கண்ட ரங்கம் உண்மையில் சிறிது இரக்கங்கொண்டு, 'ஆம்! நான் ரங்கம்தான். நீ முத்தன் தான். முத்துரங்கம் அல்லது ரங்கமுத்து என்று இருபெயரையும் ஒன்றாய்ச் சேர்த்துச் சொன்னால் காதுக்கு எவ்வளவு இனிமையா யிருக்கிறது பார்!'

என்று அவனது எண்ணத்தை அளப்பதைப்போல் அவன் கண்களின்மீது தன் பார்வையைச் செலுத்தினுள். நாணத்தால் உதடுகள் துடித்தன. முகஞ் சிவந்தது. தலை கவிழ்ந்தது. ரங்கத்தின் எண்ணத்தை உள்ளபடி அறிந்து கொண்டான் முத்தன். இவன் இவ்வாறு கிஞ்சிற்றும் எதிர்பார்க்கவில்லை, நெஞ்சு துடிக்க, மூச்சு தடுமாற, நாக்குழற, 'ரங்கம் உன் மனதை அறிந்தேன். இது தகாது. அம்மாள் சம்மதப்படமாட்டார்கள். உனக்குத்தகுந்த அந்தஸ் துள்ள ஓர் இடத்தை நீ சேரவேண்டியவள். என் நிலைமைக்கு இது வெகு தூரம்' என்று தாழ்ந்தகுரலில் வருத்தத்துடன் கூறினன்.

'எனக்கு உன் அந்தஸ்து போதும்! உன்மனது எனக்குச் சொந்தமானல் போதும். அம்மாளைப்பற்றி.........' என்று சொல்வதற்குள் தங்கம்மாள் பக்கத்தில் வருவதை இருவரும் கண்டார்கள். பேச்சை மாற்றிக்கொண்டு இருவரும் வெளிக்குக் கபடமற்ற சிரிப்புடன் கையலம்ப எழுந்தார்கள்.

* * *

தங்கம்மாளுக்குத் தன் மகள் விஷயத்தில் கொஞ்சநாட்களாகக் கவலை யேற்பட்டது. வயது பதினேழு முடிந்துவிட்டது. மணவிஷயத்தில் இது வரை யாதொரு முயற்சியும் செய்யவில்லை. தனக்குச் சகாயமாக நெருங்கின உறவினர் ஒருவருமில்லை என்று பலவாறு நினைத்துக்கொண் டிருந்தாள்.

ஒருநாள் தன் புருஷன்பேருக்கு ஒரு தபால் வந்தது. இவ்வாறு அவர் களுக்கு தபால் வருவது ரொம்பவும் அபூர்வமான விஷயம். தனக்காவது தன் மகளுக்காவது படிக்கத் தெரியாததலால் கடிதத்தை எடுத்துக்கொண்டு முத்தனிடம் தோட்டத்திற்குச் செல்லலானுள். ரங்கமும் கடிதத்திலுள்ள விஷயத்தை அறிவதில் ஆவல் கொண்டவள் போல், முத்தனைப் பார்க்கும் பொருட்டு உடன் சென்றுள்.

சென்ற பத்தாண்டுகளாய் தனக்குப் படிக்கத் தெரியும் என்பதையே மறந்திருந்த முத்தன் கடிதத்தைப் பிரித்து தடுமாற்றத்துடன் வாசித்தான்.

கொளும்பு,

15—6—190.

கனம்தங்கிய அத்தான் அவர்களுக்கு குருசாமி எழுதிக்கொண்ட கடிதம்.

இவ்விடம் நாங்கள் எல்லோரும் சுகமே. சென்ற இருபதுவருட கால மாய் யாதொரு தகவலும் உங்களுக்கு கிடைத்திருக்காததலால் உங்களுக்கு ஆச்சரியத்தை உண்டாக்கலாம். நாங்கள் உயிருடன் இருப்பதிலும்கூட நீங்கள் சந்தேகம்கொண் டிருந்திருக்கலாம். கொஞ்ச நாட்களாய் எங்களுக்கு அவ்விடம் வந்துவிட வேண்டும் என்ற ஆவல் நிறைந்திருக்கிறது. அடுத்த கப்பலில் புறப்படப்போகிறேமாதலால் அதிகம் ஒன்றும் எழுதவேண்டிய தில்லை. எல்லாம் நேரில் பேசிக்கொள்ளலாம். என் தங்கைக்கு விஷயம் சொல்லவும்.

இப்படிக்கு,

குருசாமி.

இதைக் கேட்டதும், தங்கம்மாளுக்கு நெடுநாள் பிரிந்திருந்த தமையன் வருகிறானென்றும், உதவியில்லாது திகைக்கும் தனக்கு ஓர் உதவி ஏற்படுகிறதென்றும் அதிக சந்தோஷமடைந்தாள்.

‘போகட்டும் போ! நமக்கு ஒரு சகாயம் ஏற்பட்டது! கொஞ்சநாளாய் ரங்கம் விஷயத்தில் நான் கொண்டிருந்த கவலையும் நீங்கும் என்று நினைக்கின்றேன். ரங்கம்! உன் மாமாவுக்கு இரண்டு ஆண் குழந்தைகள் உண்டு என்று சொல்லியிருக்கிறேனல்லவா? அவர்களில் ஒருவனுக்கு 24 வயதும், மற்றவனுக்கு 21 வயதும் இருக்கலாம்.,.......‘ஆம் இருக்கும்’ என்று ஆழ்ந்த யோசனையுடன் பேச்சை நிறுத்திவிட்டு, அக்கடிதத்தை வாங்கி மடியில் வைத்துக்கொண்டு மனக்கவலை நீங்கினவளாய், தோட்டத்தைச் சுற்றிப் பார்க்கப் போனாள்.

இவ்வாறு தன் தாய் சொன்னதின் கருத்தை ரங்கமும், மூத்தனும் ஒருவாறு அறிந்துகொண்டு, பெரும் ஏமாற்றம் அடைந்தவர்களாய், ஒருவரையொருவர் சிறிதுநேரம் பார்த்துக்கொண்டு நின்றார்கள். ரங்கத்தைவிட மூத்தனுக்குத்தான் அதிக விசனம் ஏற்பட்டதாகத் தோன்றிற்று. எந்நேரமும் உற்சாகம்பொருந்திய மூத்தனுடைய முகத்தில் வாட்டத்தைக் காண ரங்கத்திற்குச் சகிக்க முடியவில்லை. ‘மூத்தா! நான் உனக்குத்தான் சொந்தமாவேன்’ என்று தான் ஏதோ ஒரு முடிவிற்கு வந்துவிட்டவள் போலும், அம்முடிவில் தைரியம் கொண்டவள் போலவும் காணப்பட்டாள். ரங்கம் சரேலென்று தாயண்டை போய்விட்டாள். எனினும் மூத்தனுக்கு கொஞ்சம் கவலைதான். ரங்கத்தை அடையவேண்டுமென்பதில் ஊக்கமான எண்ணமும் ஆசையும் இதுவரை அவனுக்கு திடமாக ஏற்படாவிடினும், இனி அவள் வேறொருவனுக்குச் சொந்தமாய் விடுவாள் என்பதை நினைக்குந்தோறும் அதிக கவலை கொண்டான். அவளை அடைவதற்கு என் தான் முன்னதாகவே முயற்சித்திருக்கக் கூடாது? என்று கழிவிரக்கமும் கொண்டான்.

கடிதம் வந்த பன்னிரண்டு நாட்களுக்குப் பின்னர், ஒருநாள் பகல் இரண்டு மணிக்கு ஒரு இரட்டை மாட்டுவண்டி தங்கம்மாள் வாசலில் வந்து நின்றது. நாற்பத்தைந்து வயதுள்ள ஒரு ஆடவனும், நாலைந்து வயது குறைவாய் மதிக்கத்தக்க ஒரு பெண்ணும் வண்டியைவிட்டு இறங்கினார்கள். பிரிந்து இருபது வருடங்களாயினும் தன் தமையனையும், அண்ணியையும் அறிந்துகொள்வதில் தங்கம்மாளுக்கு சிறிதும் கஷ்டம் ஏற்படவில்லை. தங்கம்மாளுடைய கைம்பெண் கோலத்தைக் கண்ட குருசாமியும், அவன் மனைவியும் வருந்தினார்கள்.

இவ்விருவர் மட்டுமே வந்ததில் ரங்கம் ஆச்சரியமடைந்தாள். தன் தாய் சொன்னபடி வாலிபர் இருவரைக் காணவில்லை. ரங்கம் கவனித்தது அதைத்தான்’

‘எங்கண்ணா குழந்தைகள்’ என்று தங்கம்மாள் ஆவலுடன் கேட்டாள்.

‘ஐயோ! தங்கம்! நான் என்ன சொல்வேன். இங்கிருந்து போகும்பொழுது மூத்தபிள்ளைக்கு நான்கு வயதும், கைக்குழந்தைக்கு ஒரு வயதும்

இருக்குமல்லவா? அங்கு போய்ச் சேர்ந்த மூன்று மாதத்தில் இருகுழந்தைகளும் உன் அண்ணியும் நோயால் பீடிக்கப்பட்டு மிகவும் கஷ்டப்பட்டார்கள். அப்பொழுது நாங்கள் குடியிருந்த தெருவில் நம் பக்கத்து வேளாளன் தான்—முத்துசாமி என்பவன்—தன் பெண்சாதியுடன் நாங்கள் அவ்விடம் போவதற்கு மூன்று வருடத்திற்கு முன்பிருந்தே அங்கு குடி யிருந்தானும். அவர்களுக்கிருந்த ஒரு வயதுள்ள பெண் குழந்தை ஒன்று திடீரென்று இறந்துபோகவும், பாலில்லாது வருந்திக்கொண்டிருந்த நம் கைக்குழந்தையை அவன் பெண்ஜாதி தான் வளர்ப்பதாக எடுத்துக்கொண்டாள்.



'எங்கள் கஷ்டநிலையில் நாங்களும் சம்மதித்து கொடுத்துவிட்டோம்' என்றாள் குருசாமியின் பெண்ஜாதி.

'அவர்கள் அவ்விடமிருந்து கண்டிக்குப் போவதாகப் போய்விட்டார்கள். சுமார் ஆறு மாதங்களுக்குப் பிறகு நம் பெரிய குழந்தை இறந்துவிட்டது. இவளும் நெடுநாள்வரை சொஸ்தம் அடையவில்லை. ஆகையால் கைக்குழந்தையையும் அதுசமயம் கவனித்து வாங்கிக்கொள்ள முடியவில்லை.

'இருந்தாலும் அவர்கள் கண்டிக்குப் புறப்படும்பொழுதே எங்கள் குழந்தையை வாங்காமல் விட்டோமே! எங்கள் மதியீனத்தை என்னென்று சொல்லுவது!' என்றாள் குருசாமியின் பெண்ஜாதி.

'சுமார் ஒருவருடம் கழித்து கண்டியில் மூத்துச்சாமியைப்பற்றி விசாரித்தேன். தகவல் ஒன்றும் கிடைக்கவில்லை. அவன் அவ்விடமிருந்து சுமார் பதினைந்து வருஷங்களுக்கு முன்பே தன் மனைவியுடனும், ஐந்து வயது நிறைந்த ஒரு ஆண் குழந்தையுடனும் இந்தியாவுக்குப் போய்விட்டான் என்று சென்ற வருஷந்தான் அவனுடைய பந்து ஒருவனால் அறிந்தேன்.'

'என்னமோ. கொடுத்து வைத்திருந்தால் இன்னும் நம் குழந்தை நமக்குக் கிடைக்கும்' என்று குறுக்கிட்டுச் சொன்னாள் அவன் மனைவி.

திடீரென்று தங்கம்மாள் அந்த குருசாமி நம் நாட்டுக்கு வந்து பதினைந்து வருடம் ஆயிற்று? என்று ஆவலுடன் வினவினாள்.

'ஆம், இருக்கும்.'

'அப்பொழுது அந்த குழந்தைக்கு ஐந்து வயதா?'

'ஆமாம். ஐந்து அல்லது ஆறு இருக்கும்.'

'அந்த முத்துச்சாமியும் அவன் பெண்ஜாதியும் மிகக் கருப்பு நிறம் உடையவர்களா?'

'ஆம். மிகக் கருப்பு. அவர்களிடம் இருக்கும் நம் குழந்தையைக் கண்டால் அது அவர்கள் குழந்தை அல்ல என்று எவரும் திடமாகச் சொல்வார்கள்' என்றான் குருசாமி.

அதைக் கேட்ட தங்கம்மாள் ஆழ்ந்த யோசனையுடன், 'ஆம். அப்படித்தான் இருக்கலாம்' என்று தனக்குள்ளேயே சொல்லிக்கொண்டு, 'அந்த முத்துசாமியின் பெண்ஜாதி பெயர் என்ன?' என்று கேட்டாள்.

'என்ன உனக்குத் தெரியுமே' என்று குருசாமி தன் மனைவியைக் கேட்டான்.

'ஆம். அவள் பெயர் வள்ளியம்மாள்' என்றாள்.

'ஆ! என்ன! வள்ளியம்மாளா?' என்று ஆச்சரியத்துடன் தங்கம் எழுந்தாள்.

குருசாமியும் அவன் பெண்சாதியும் தங்கம்மாளுடைய செய்கையைக் கண்டு பிரமித்தார்கள்.

'அண்ணா! பயப்படாதீர்கள். உங்கள் குழந்தையை நான்தான் இப்பொழுது வளர்த்துக்கொண் டிருக்கிறேன். ரங்கம்! கேட்டாயா! நம் முத்தன் தான் உன் மாமன் மகன்' என்று அளவற்ற சந்தோஷத்துடன் சொன்னாள்.

இவற்றையெல்லாம் விடாமல் கேட்டுக் கொண்டிருந்த ரங்கம் ஆச்சரியமும் ஆனந்தமும் அடைந்து, 'நான் கூட்டிக்கொண்டு வருகிறேன்' என்று தோட்டத்திற்கு ஓட ஆரம்பித்தாள்.

முத்தனும் வெகு நேரமாகியும் சாப்பாடு வராததால், வீட்டை நாடி வந்தவன் வாசலில் நின்றான்.

'இதோ வந்துவிட்டான்' என்று மட்டற்றமகிழ்ச்சியால் வாய் குழற, 'அத்தான்! நானுனக்குச் சொந்தம்!' என்று சொல்லி ஆனந்தக் கண்ணீர் விட்டாள்.



# போலித்திருடனின் வீரச்செயல்கள்

[அ. கனகசபாபதி]

தேவகிரி என்னும் கிராமம் எங்கு பார்க்கினும் மலைகளையும் அழகிய சோலைகளையும் உடையது. அந்த ஊரில் பிராமணர் குலத்தில் உதித்த ஒரு செல்வந்தர் இருந்தார். அவர் பெயர் குண்டோதர ஐயர். அவர் அடிக்கடி பக்கத்திலுள்ள பட்டினங்களுக்கு அலுவல்களை முன்னிட்டு சென்றிடுவார். தற்போது நமது குண்டோதர ஐயருக்கு வயது சுமார் 35 இருக்கலாம். அவர் தேகம் தொள தொளவென்று பெருத்தும் கண்டவர் வியக்கும்படியாக புல்லாப் பானையைபோன்ற வயிற்றையும் உடையவரா யிருந்தார். ‘ஒதியன் பெருத்தால் உத்திரத்திற்காவா’ தென்றதுபோல் ஐயர் பெருத்து உண்மையில் யாதொரு பிரயோஜனமும் இல்லாதவராய் இருந்தார். ஆனால் ஐயர் நிலைமை இவ்வாறு இருந்தும் அவர் தன்னுடைய தைரியத்தையும் சாமர்த்தியத்தையும்பற்றி பெருமைப்படுத்திக்கொள்வார். தனது தைரியத்தைப்பற்றி தனது கிராமத்தாரிடமும் முக்கியமாக தனது காதலியிடமும் சொல்வதையே காலப்போக்காக ஐயர் காலங்கழித்து வந்தார்.

தற்போது நான் வாசகர்களுக்குச் சொல்லப்போகும் இச்சவம் நடக்கும்போது எங்கு பார்த்தாலும் திருடர் பயமே மிகுதியாக இருந்தது. நமது ஐயர் வழக்கம்போல் அயலூருக்கு போய்விட்டார். ஏழுவயதுள்ள அவர் குமாரன் இராமன் வீட்டில் தனது தாயுடனிருந்தான்.

குண்டோதரய்யர் மனைவி இலட்சுமியும், வேலைக்காரியும் திருட்டுச் சம்பவங்களைப்பற்றி பேசிக்கொண் டிருந்தனர். நீண்ட விவாதத்திற்குப் பிறகு போஜனம் அருந்திவிட்டு எல்லோரும் படுக்கைக்கு சென்றனர். பயத்துடன் படுத்ததாலோ அல்லது வாய் முணுமுணுத்ததாலோ தாம்பூலம் தரிக்கும் நினைப்பினாலோ என்னமோ தெரியவில்லை. இலட்சுமி விழித்துக்கொண்டாள். திடுக்கிட்டாள். ‘கா கா’ வென்ற சப்தத்தை காதால் நன்கு கேட்டாள். அவளுக்கு ஒன்றும் புலப்படவில்லை. கனவோ நினைவோ என்று ஐயமுற்றாள். கண்ணைத் துடைத்துக்கொண்டு உண்மையை அறிந்தாள். ஸ்தம்பித்து நின்றாள். சற்றுநேரம் கழித்து வேலைக்காரி ஆனந்தாவை எழுப்பினாள்.

நடந்தவற்றை சொன்னாள். 'அம்மா திருட்டுப்பயத்தாம்மா வந்துட்டா'ரென்று ஆனந்தாவும் கையைப் பிசைந்தாள். ஏழுவயது இராமனும் பதறலானான். அவர்கள் சொல்லமுடியாத பயத்தை அடைந்ததால் குழப்பம் அதிகமாயிற்று. இந்த புலிகள் ஒவ்வொருவரும் கையில் கழியை எடுத்துக்கொண்டு கொல்லைச் கதவண்டை சென்றனர். 'காகா'வென்ற சப்தத்தை தெளிவாகக் கேட்டனர். பாவம்! என்ன செய்வார்கள். அங்கே யிருந்துகொண்டு யாரடா! யாரடாவென்று சப்தம் செய்தனர். கால்மணி நேரம் சப்தம் கேட்காமலிருந்து பிறகு எப்போதும்போல் செவிக்கெட்டியது. இவர்கள் செய்த கூச்சலினால் அக்கம்பக்கத்திலுள்ளவர்கள் ஓடோடியும் வந்தனர். சுவரில் கற்கள் அறுக்கப்பட்டிருப்பதைப் பார்த்ததும், திகில் அடைந்தனர். அதில் ஒருவர் 'பயலுவோ ஓடில்லவிட்டானுவவோ' என்றார்.

இஃதிங்ஙனமிருக்க மறுநாட்காலை வெளியூரிலிருந்து குண்டோதாய்யர் திரும்பி வந்தார். நடந்தவைகளையெல்லாம் கேட்டார். 'நான் இல்லாத சமயத்திலல்லவா அந்தப் பயல்கள் வந்திருக்கிறார்கள். வரட்டும் சொல்லுகிறேன்' என்று தற்புகழ்ச்சி செய்துகொண்டார் ஐயர். குண்டோதர ஐயரை அவ்வூர்வாசிகள் மிகுந்த சாமர்த்தியசாலி யென்றல்லவா நம்பியுள்ளனர். அதற்கேற்ப ஐயரும்மிகுந்த ஆடம்பரமாய் 4, 5 அடியாட்களுடனிருந்தார். ஒவ்வொருவரும் தம் தம் வீரச்செயலைப்பற்றி வியந்தபிறகு நித்திரைக்கேகினர்.

இலட்சுமி அம்மாள் மாத்திரம் முன்தினம்போல் நடக்குமோ என்ற சந்தேகத்துடனும் அச்சத்துடனும் இருந்தாள். அவள் கண்ணில் தூக்கமே காணவில்லை. குரு, குருவென்று விழித்துக்கொண்டேயிருந்தாள். நடுநிசியில் முன்தினம்போலவே காகாவென்ற சப்தத்தைக் கேட்டாள். பயம் அதிகமானதால் எழுந்திருக்கவோ அல்லது பேசவோ முடியவில்லை. பிறகு ஒருவாறு மனதை திடம் செய்து கொண்டு தனது கணவரிடம் தெரிவித்தாள். உடனே ஐயர் தனது அடியாட்களுடன் கொல்லைக் கதவண்டை வந்தார். ஓசையைகூர்ந்து கவனித்தார். அவர் மனது படபடவென்றடிக்கலாயிற்று. வேர்வை அதிகமாயிற்று. அவைகளை யெல்லாம் வெளிக்குக் காட்டாமல் நடித்தார். தற்போது யார் முன் கதவைத் திறப்பதென்பது பெரும் கேள்வியாயிற்று. பாவம்! குண்டோதாய்யர் மானம் ரயலில் ஏறலாயிற்று. இவர்கள் செய்யும் சப்தத்துடன் சேர்ந்து காகா வென்ற சப்தம் கேட்கலாயிற்று. நான் போகமாட்டேன். நீ முதலில் போ, யென்று அவர்களுக்குள் குழப்பம் செய்துகொண்டனர். ஐயர் பார்த்தார். 'இவன் பெரிய திருடன்போ லிருக்கு! இது தொட்டுத்தான் இந்த சப்தத்துக்கெல்லாம் போகமாட்டேன்றான். நான் போய் போலீசை இட்டுக்கொண்டு வாரேன்' என்று போனார்.

போலீஸ்வீரும் துப்பாக்கியுடன் வந்தனர். அவர்களில் தைரிய முள்ள ஒருவன் கதவைத்திறந்து கையில் பரிசோதனை (Search-light)விளக்குடன் சென்றான். குண்டோதா ஐயரை தவிர மற்றெல் லோரும் அவர் பின் தொடர்ந்தனர். சுவரில் கற்கள் துண்டு துண் டாக அறுக்கப்பட்டு குவியல் குவியலாக இருப்பதைக் கண்டனர். ஆள் நுழையும்படியான ஓர் துவாரமும் காணப்பட்டது. ஆனால், திருடனை அவர்கள் பார்க்கவில்லை. நான்கு பக்கமும் நன்கு தேடிப் பரிசோதித்தனர். பின்பு எல்லோரும் துவாரம் ஏற்பட்ட இடத்திற்கு வந்தனர். முன்பு கிராமத்தாரிடம் தன்னைப்போல் தைரியமுள்ள வர்கள் கிடையாதென்று பெருமைப்படுத்திக்கொண்ட குண்டோதா ஐயர் இப்பொழுதுதான் வெளியே வந்தார். எல்லோரும் ஆழ்ந்த யோஜனையிலிருக்கும்போது கல்மூட்டு பக்கத்திலிருந்து குறுக்கே ஒரு பெருச்சாளி ஓடிற்று. இதைப் பார்த்து எல்லோரும் விழுந்து விழுந்து சிரித்தனர். ஆனால் ஐயருக்கோ கோபம் அடங்கவேயில்லை. அந்தோ! ஒரு சிறிய ஜந்துவால் ஐயர் பகல்வேஷ மெல்லாம் ஹம்பக்காய் விட்டதல்லவா?

ஒரு வீட்டுப் பெண் தயிர்காரியைப்பார்த்து தினந்தோறும் கட்டிபோடு என்று கேட்டுக் கொண்டே இருந்தாள். அதை அவள் ஞாபகத்தில் வைத்திருந்து ஒரு நாள் கயிறு கொண்டு வந்து அப்பெண்ணை தூணில் கட்டிவிட்டாள்.



பெண்ணின் தகப்பனார் ஓடி வந்து எதற்காக என் குமாரத்தியை கட்டிப்போட்டாய் என்று அதட்டிக்கேட்டார்.

தயிர்காரி :— தங்களுடைய மகள்தான் தினந்தோறும் என்னை கட்டிபோடு, கட்டி போடு என்று கேட்டுக்கொண்டே இருந்தாள். அதனால்தான் கட்டிப் போட்டேன்.

—ஜே. வி. பி




பையன்:—தாயாரைப் பார்த்து சேவிங்க்கு ஒரு அணு கொடு அம்மா.

தாயார்:—சேவிங்ஸ்பேங்கில் ஒரு அணு எடுக்க மாட்டார்கள்.

—பீ. கே. சீரங்கன்.

மானேஜர்:—நீ வேலை செய்யும் போதெல்லாம் பாடிக்கொண்டு இருக்கிறாயாமே.

வேலையாள்:—இல்லை பாடும்பொழுதுகூட சும்மா இருக்காமல் வேலைசெய்து கொண்டல்லவா இருக்கிறேன். —எஸ் எ. பெருமாள்

மனைவி.— குழந்தையைத் தொட்டிலில் இட்டு ஆட்டினால் சுருக்க சாப்பாடு கிடைக்கும் என்ற எண்ணமோ?

கணவன்:— இல்லை. தொட்டில் ஆடும் வேகத்தில் காற்று வீசும் என்றல்லவோ ஆட்டுகிறேன்.

—திருவை கே.
வைத்தியநாதன்.



பிரபு:—அடே மடையா! உனக்குக் கொஞ்சங்கூடப் புத்தியில்லை. நான் நல்ல நாழிகைபார்த்து நட்டசெடிகளை, நீ ஏன் பிடுங்கி மாற்றி நட்டாய்.

தோட்டக்காரன்:—பிரபு அது என் குற்றமல்ல. தாங்கள் பார்த்த நல்ல நாழிகையின் பலன் அது. —S.R.M.A. செல்லையா

தகப்பனார்:—என்டா ராமு இஸ்டரி, ஜாகரபி இந்த இரண்டு சப்ஜெக்டிலும் பெயிலாகி விட்டாயே.

ராமு:—இல்லே அப்பா நேற்றையதினம் உபாத்தியாயர் ஒரு கேள்வி கேட்டார். அதிலுள்ள சப்ஜெக்ட், பிரடிகெட், ஆப்ஜெக்ட் இவைகளை தப்பிதமில்லாமல் சொல்லிவிட்டேனே.

—பீ. கே. சீரங்கன்

உபாத்தியாயர்:—உதைக்கும் பிராணி எது?

மாணுக்கன்:—வாத்தியார் ஸார்.

உபாத்தியாயர்:—சீ நாயே.

மாணுக்கன்:—கடிக்கும் சார்.

உபாத்தியாயர்:—சீ கழுதை இங்கே வா.

மாணுக்கன்:—உதைப்பீங்க ஸார்.' —எஸ். எ. பெருமாள்



பெண்:—அப்பா இன்று நான் செய்திருக்கும் பலகாரம் எப்படி இருக்கிறதென்று நீங்கள் பார்க்க வேண்டாமா?

தகப்பனார்:—இல்லே. இன்றைக்கு ஏகாதசியாதலால் உபவாசமிருந்து விடுவோமென்று பார்க்கிறேன்.

—எம். சுப்பிரமணியம்.

ஒரு வைர வியாபாரி தோல்பையுடன் வீதிவழியே செல்ல ஒரு பிராமணன் அவனை நோக்கி 'வக்கீல் உன்னை தேடினார்' என்று சொல்லிச் சென்றான். வியாபாரியும் வக்கீல் வீடுசென்று 'சாமி' என்று கூப்பிட்டான். ஆனால் சிறிது நேரத்தில் வக்கீல் மனைவி கையில் தண்ணீருள்ள டம்ளருடன் வந்து அவனை நோக்கி 'எடு' என்றாள். வியாபாரி ஒன்றும் தோன்றாது விழிப்பதை யறிந்த வக்கீல் மனைவி உள்ளே சென்றாள். வியாபாரியோ, தன்னை அம்பட்டன் (பரியாரி) என்று நினைத்து டம்ளரில் தண்ணீர்கொண்டு வந்ததை எண்ணி வெட்கித் தன் வீடடைந்தான்.

—வி. ராமலிங்ககோன்.

உபாத்தியாயர்:—கிட்டு தென்மேற்கு பருவக்காற்றால் என்ன பிரயோஜனம்.

கிட்டு:—நல்ல தூக்கம் வருகிறது சார்.—கே. ஏ. கே. ராஜு

போலீஸ் இன்ஸ்பெக்டர், ஒருவாது அஜாக்கிரதையினால் டப்பியிலிருந்த பொடி தனது கண்களில் விழுந்துவிட அவர், அதைத் துடைத்துக்கொண்டு நின்றார். அப்போது விளையாட்டுத் துப்பாக்கியுடன் அங்கு நின்றிருந்த அவாது பையன் தன் தாயாரை நோக்கி,

'அம்மா! என்னுடைய துப்பாக்கியைப் பார்த்து அப்பா, கண்ணைக் கசக்கிண்டு அழறா! நான் அவரை ஒன்றும் செய்யமாட்டேன்னு அவர் கிட்ட சொல்' என்றாள்.

தாயார் —(நகைத்துக் கொண்டே) 'நீயே சொல்லிவிடேனப்பா!' என்றாள்.

பையன்:—'நான் சொல்லிண்டே தானப்பா இருக்கேன்! இந்த ஆம்பிளெ பேச்சு அவர் காதிலே ஏறமாட்டேங்கப்பா!' என்றான்.

—ரு. திருநாவுக்கரசு

தெருவில் வயது சென்ற கிழவி மெதுவாய் ஊர்ந்து நடந்து சென்று கொண்டிருந்தாள். அவளுக்குப்பின் ஒரு மோட்டார் வந்து கொண்டிருந்தது.



ஒருவாலிபன்:-(கிழவியை நோக்கி) 'பாட்டீ! தெருவில் மோட்டார் வருகிறதே சற்று ஓரமாய் நட' என்றான்.

கிழவி:—நான் எதற்காக ஓரமாய் போவேன்? என் மகன்தான் போலீஸ் சப்இன்ஸ்பெக்டர் என்று டிரைவருக்கு நன்றாய் தெரியாதோ?

—பி. ஏ. எம். கிருஷ்ணன்

வீட்டுச் சொந்தக்காரர் (வந்த ஒருவரைப் பார்த்து):-எங்கு வந்தீர்? யாரைத்தேடிக்கொண்டு வந்தீர்?

தனவந்தர்:—தாங்கள் தானா பல் டாக்டர் ?

வீ-சொ:--பல் டாக்டர்வீடு பக்கத்தில் இருக்கிறது.

வந்தவர்:--இல்லை, தங்கள் வாசலில் போர்டு இருக்கிறதே!

வீ-சொ:—(வெளியில் வந்து பார்த்துவிட்டு போர்டை அப்புறப்படுத்திவிட்டு தன் மகனைக் கூப்பிட்டு) அடே அந்த போர்டு நம்ம வீட்டுக்கு எப்படி வந்தது'

மகன் :—தாங்கள்தான் சொன்னீர்களே! இனிமேல் காசு கேட்டால் பல்லை உடைத்துவிடுவதாக. அதனால் அப்படி போர்டை மாட்டினேன்.

—எம். பொன்னுரங்கம்

---

முந்துங்கள்! முந்துங்கள்!!

டாக்டர் மே. மாசிலாமணி முதலியார் எழுதிய

# அனுபவ வைத்திய நூல்

(இரண்டாம் பதிப்பு)

இப் புத்தகம் ஒவ்வொரு வீட்டிலும் தவறுது இருக்க வேண்டியது இன்றியமையாததாகும். இந் நூல் வீட்டில் இருப்பது குடும்ப வைத்தியர் ஒருவர் உங்கள் இல்லத்தில் கூடவேயிருப்பதுபோலாகும். நோய் உண்டான காலத்தில் நீங்களே இந் நூலின் உதவியைக்கொண்டு சிகிச்சை செய்து கொள்ளலாம். இந் நூலில் எல்லா நோய்களின் விவரமும், அவைகள் உண்டாவதற்கு முன் தோன்றும் குறிகளும், அவைகளைப் போக்கும் சுலபமான வழிகளும், அதற்குரிய எளிய மருந்து வகைகளும் காணக் கிடைக்கும்.

அனுபவ வைத்திய நூலை வைத்துக்கொண்டே எவரும் ஒரு சிறந்த வைத்தியராகலாமென்பது திண்ணம்.

முன் பதிப்பைவிட இப்பதிப்பில் அநேக விஷயங்கள் சேர்க்கப்பட்டு உயர்ந்த கிளேஸ் காகிதத்தில் அச்சிட்டுள்ளது. சொற்ப பிரதிகளே கைவசமிருக்கின்றன. முந்துங்கள்.

இதன் விலை ரூபா 2.

பழய 2-ஆம் பாகம் விலை அணு 8. தபால் சார்ஜ் வேறு

---

உங்கள் கைரேகைப் பலன்களை நீங்களே பார்த்துக் கொள்ளலாம்.

# திரிகால ரேகை சாஸ்திரம்

(இரண்டாம் பதிப்பு)

இப்புத்தகம் தூய்மையான தமிழில் எளிய நடையில் படங்களுடன் விளக்கமாய் அனுபவ ஹஸ்த ரேகை சாஸ்திர ஆசிரியரான சக்திதாஸரால் எழுதப்பட்டிருக்கிறது. இதைப் படித்தும், இதில் படங்கள் மூலம் விளக்கப்பட்டிருக்கும் கை ரேகைகளின் குணகுணங்களைப் பார்த்தும், ஒவ்வொருவரும் அவரவர்களின் ஆயுள், விவாகம், சந்தானம், பக்தி, அதிர்ஷ்டம், கண்டம், காரியசித்தி, இல்லற சுகம் முதலியவைகளை எல்லாம் சுலபமாகத் தெரிந்து கொள்ளலாம். இப்புத்தகம் வேண்டுவோர் பன்னிரண்டு அணு ஸ்டாம்புகள் அனுப்பி அன்ரிஜிஸ்டர் மார்சலாகப் பெற்றுக் கொள்ளலாம். வி. பி. யில் அனுப்பப்பட மாட்டாது.

'தமிழரசு' புக்டிபோ,

31, வைத்தியநாத முதலி தெரு, ஜி. டி. சென்னை.

# காங்க்ரீன்

என்னும்

# இரண சஞ்சீவி

இம் மருந்தானது எல்லாவித இரணங்களேயும், கட்டிகளேயும் ஆற்றும். மதுமேக நோயால் பீடிக்கப்பட்டவர்களுக்குக் காணும் இராஜக் கட்டியானது எவ்வளவு அபாய நிலேயில் இருந்தாலும் குணமாய் விடும். ஆஸ்பத்திரிகளில் பார்த்து தீராதென அனுப்பி விட்ட கேசுகளே ஆச்சரியகரமாய் குணம் செய்யும். அநேக ஆங்கில வைத்தியர்கள் இதை உபயோகிக்கின்றனர்.

ஆஸ்பத்திரிகளில் பெரிய டாக்டர்களாக இருக்கும் என் சகோதர வைத்தியர்களுக்குத் தெரிவிப்பதாவது: உங்கள் ஆஸ்பத்திரி களிலாவது அல்லது தனிப்பட்டாவது பார்க்கப்பட்ட ராஜ கட்டிகள் (சைனஸ்) வைத்து (டையபடிக் கோமா) வந்து இனி இக்கேசு பிழைக்காது என்று நினேக்கும் சமயம் நீங்கள் கைவிட்ட சமயம் உங்கள் (இன்சொலின்) குணம் தராத் காலத்திலாவது இதை உபயோகித்து உயிரைக் காப்பாற்றுங்கள். ஆஸ்பத்திரிகளில் ஆப்பரேஷன் செய்யாமல் இரணங்களே ஆற்றி விடுங்கள். உங்களுக்கு இதன் குணம் தெரிந்துக் கொள்ளும் வரையில் உங்களால் முடியாது என்றபோது என்னிடமாவது அனுப்புங்கள். உங்கள் பார்வையும் வைத்துக் கொள்ளுங்கள். முக்கியமாய் ஜெனரல் ஆஸ்பத்திரி, ராயப்பேட்டை ஆஸ்பத்திரி, டிஸ்ட்ரிக்ட் ஆஸ்பத்திரிகளிலிருக்கும் டாக்டர்களுக்கும் டாக்டர் குருசாமி முதலியாருக்கும், கிருஷ்ணசாமி ஐயங்கார் அவர்களுக்கும், பாண்டலே அவர்களுக்கும் ராம ஐயங்கார் அவர்களுக்கும் இந்தியன் மெடிகல் ஸ்கூல் பிரின்சிபால் அவர்களுக்கும் வற்புறுத்தி மறு முறையும் கேட்டுக் கொள்வ தாவது உங்களால் முடியாது என்று எண்ணிய பிறகாவது எங்கள் இரண சஞ்சீவியை உபயோகித்துப் பாருங்கள்.

கண்டமாலே, அறையாப்புக் கட்டி இவைகளேயும் எத்தகைய ராஜ கட்டிகளேயும், புரைப் புண்களேயும் ஆற்றிவிடும்.

இம்மருந்து சேத்துப்புண், சொரி சிரங்கு, முகத்தில் காணும் மோகப்பருவு இவைகளே நீக்கும்.

ஆராத மேகப்புண், மேகப்படை கட்டி இவைகளுக்குப் பூச இரணம் ஆறும். பவுத்திர வியாதிக்கு மேல் பூசினுல் இரணம் ஆறிவிடும்

## சில அபிப்பிராயங்கள்

சென்னை கந்தப்பமுதலித் தெருவு, நெ. 21, P. சோமசுந்திர செட்டியார் தெரிவிப்பது:—நான் என் தாயாருக்கு ஏற்பட்டிருந்த ராஜகட்டிக்காக டாக்டர் மல்லய்யாவிடமும், ரங்காசாரியாரிடமும் இராயப்பேட்டை ஆஸ்பத்திரியிலும் காட்டி குணமடையாமல் சாகும் நிலையில் இருந்தபோது துரைசாமி ஐயங்கார் சொல்லியபடி தங்களிடம் வந்து மருந்து கேட்டேன். தாங்கள் கொடுத்த இரண சஞ்சீவியால் முள்ளந்தண்டிலும் மார்பிலும் வயிற்றிலும் இருந்த கட்டிகள் சுகமாய் விட்டது. பிறகு இன்பசாரம் சாப்பிட்டதில் இரத்தம் விருத்தி யடைந்தது. நீரில் சர்க்கரை அதிகமாய் இருந்ததும் மறைந்து விட்டது. 12—12—33.

---

தே. வ. இ. சோமசுந்திரம் செட்டியார், கல்லல். தெரிவிப்பது :-

எனக்கு முதுகில் ஏற்பட்டிருந்த ராஜ கட்டிகளை ஒரு தரம் திருப்பத்தூர் ஆஸ்பத்திரியில் ஆப்பரேஷன் செய்து ஒரு வருடமாய் ஆராமல் நீர் வந்துக்கொண்டே இருந்ததும் தவிர மேல்கொண்டு பல கட்டிகளும் முதுகு பூராவும் சல்லடைக் கண்கள் போல் உண்டாய் விட்டது. பாதை பொறுக்க முடியாமல் கஷ்டப்பட்டிருக்கும் சமயத்தில் டாக்டர் மே. மாசிலாமணி முதலியார் அவர்கள் கல்லல் ஆ. மு. ஆ. வீட்டுக்கு வந்தபோது காண்பித்தேன். அவர் பட்டணம் வந்தால் பூரணமாய் குணப்படுத்தலாம் என்று சொல்லி இரண சஞ்சீவியைப் போடக் கொடுத்தார் கொஞ்சம் வலி குறைவா யிருந்தது அதுசமயம் ஆ. மு. ஆ. முருகப்ப செட்டியார் அவர்கள் இந்த கேசை உங்களால் குணப்படுத்த முடியுமானால் பட்டணம் அனுப்பலாம் இல்லாவிடில் திருப்பத்தூரிலேயே பார்க்கலாம் என் மகன் இந்த வியாதியால் இறந்து போனான் என்று சொன்னதைக் கேட்ட பின் உறுதி சொன்னதின் மேல் நான் பட்டணம் வந்து ஒரு மாதம் மருந்தை போட்டதில் சகல கட்டிகளும் ஆச்சரியமான வகையில் இரண சஞ்சீவியால் குணமாய் விட்டது என்னிடம் ஒரு டஜன் இரண சஞ்சீவியை வைத்துக் கொண்டு ஏழைகளுக்கு கொடுத்து சுகப்படுத்தி வருகிறேன். இரண சஞ்சீவியை ஒவ்வொரு வீட்டிலும் கையிருப்பாக வைத்திருப்பது அவசியம். 10—9—33.

குறிப்பு:—இன்னும் கணக்கற்ற இரணங்களும் இராஜகட்டிகளும் குணமான நற்சாட்சி பத்திரங்கள் எங்களிடம் இருப்பினும் சில மாத்திரம் இங்கு குறிப்பிட்டோம்.

விலை புட்டி 1-க்கு ரூபா 1.

# இனி நீங்கள் கவலைப்பட வேண்டாம்

நீங்கள் பசியின்றி கஷ்டப்பட்டாலும், இருதய வியாதி, பித்த சோகை, வீக்கம், மதுமேகம், பாரிச வாய்வு, க்ஷய இருமல் சுரம் இவற்றில் எந்த நோயால் நீங்கள் பீடிக்கப்பட் டிருந்தாலும்,

# இன்பசாரம்




என்ற எங்கள் ஒப்பற்ற உயரிய மருந்தை வரவழைத்து உபயோகியுங்கள். உங்கள் நோய் உடனே பரிதி முன் பனிபோல் நீங்கி விடும்.

இன்பசார மாத்திரையை இரவில் படுக்கைக்குப் போகும்போது தூள் செய்து வாயில் போட்டுக்கொண்டு பால் சாப்பிட்டுவரின் பசி அதிகரிக்கும்; நரம்புகளுக்கு உணர்ச்சி ஏற்படும்; இரத்த விருத்தி புண்டாக்கும். இம் மாத்திரையானது தங்கம் ஒன்றையே செந்தூரம் செய்து பவளம், முத்து, காரோபா முதலான சத்து வஸ்துக்களுடன் விதை தினுசுகளும் சேர்த்துத் தயார் செய்யப்பட்டது.

இன்பசாரம் ஆணுக்கு இழந்துபோன ஆண் தன்மையை அதிகரிக்கச் செய்வதோடு இரு பாலர்களின் இச்சையையும் பூர்த்தி செய்து கொள்ள வேண்டிய வலிமையை அளிக்கும். நெடுநாள் குழந்தை யில்லாத தம்பதிகளுக்குப் புத்திர சந்தானத்தையும் உதவும்.

இன்பசார மாத்திரையானது க்ஷய இருமலையும் சுரத்தையும் 10 நாளில் குறைத்து விடுகின்றது. க்ஷயரோகத்தைப் போக்குவதில் இதற்கு நிகரான மருந்து இல்லை என்பது நிச்சயம்.

இன்பசார மாத்திரைகள் ஒடிந்த எலும்பைக் கூட்டுவதிலும் சொர்ப்பன ஸ்கலிதத்தை நீக்குவதிலும், சரீரத்திலுள்ள இரணத்தை ஆற்றுவதிலும் சிறந்தது. நூற்றுக் கணக்கான நல்லுரைகள் பெற்றுள்ளது. ஒரே வேளையில் குணம் தெரியும்.

விளம்பர மருந்துகளைப் போல் இம்மருந்தை நினைத்தலாகாது. இதன் அரிய குணத்தை டாக்டர்களும், நோயாளிகளும் ஏராளமாக அநுபவித்துப் புகழ்ந்திருக்கிறார்கள்.

## இன்பசார மாத்திரையைப்பற்றிய சில நற்சாக்ஷிப் பத்திரங்கள்

கனம் டாக்டர் மே. மாசிலாமணி முதலியார் அவர்களுக்கு,

நான் இருபது வருஷமாக காசி, இராமேஸ்வரம் முதலான இடங்களுக்குச் சென்று பல தானங்களைச் செய்தும் எனக்குப் புத்திர சந்தான மில்லாத காரணத்தால் தங்கள் மருந்தால் புத்திர உற்பத்தி யுண்டானால் இருபது ஆயிரம் கொடுப்பதாய் வாக்களித்தேன். தங்களுடைய இன்பசார மாத்திரையின் பெருமையை என்னென்று புகழ்வேன்.

எனக்கு உள்ள சொத்து ஒன்பதாயிரம் தாளக்கூடிய வீடு ஒன்றுதான். என்னிடம் வேறு பணங் கிடையாது. வேண்டுமானால் கிருஷ்ணா அண்டு கம்பெனியாரையும் கங்கிபாட்டி சுப்பிரமணியம் செட்டியாரையும் கேட்டுக் கொள்ளுங்கள்.

தங்களுடைய மருந்தால் எனக்கு ஆண் குழந்தை ஒன்று பிறந்தது. இத்துடன் 4 சவரன் அனுப்பியிருக்கிறேன். பெற்றுக் கொண்டு என்னை மன்னிக்கவும்.

தங்கள் அன்புள்ள,

தேவரப்பட்டு அப்பய்ய செட்டியார்.

ஹகீம் டாக்டர் அவர்கள் நேரில் சொன்னதாவது:

இன்பசார மாத்திரையை சென்னை ஐகோர்ட்டு ஜட்ஜி கனம் மாதவன் நாயர் அவர்களின் மனைவிக்குக் கொடுத்து குணம் கண்டாராம். அவ்வம்மையாருக்கு மூளை சம்பந்தமான வியாதி இருந்தாயும் இருட்டறையிலேயே சதா இருக்கவேண்டும் இல்லாவிடில்

மயக்கம் வந்துகொண்டிருந்ததாம். இவ்வியாதிக்காக ஐரோப்பா நாடுகள் பூராவும் சுற்றி அவ்விடத்திய தேர்ந்த வைத்தியர்களைக் கொண்டு சிகிச்சை செய்தனர்களாம். இந்தியாவிலும் தேர்ந்த வைத்திய நிபுணர்களால் சிகிச்சை செய்தும் குணமாகாதிருந்ததாம். அத்தகைய வியாதியை தன்னிடம் காண்பித்ததாயும், அதற்கு என்ன செய்யலாம் என்று என்னைக்கேட்டபோது நான் இன்பசார மாத்திரையைக் கொடுத்தால் குணமாய்விடும் என்று சொன்னதின் பேரில் மேற்படி மாத்திரையைக் கொடுத்து நோய் பூராவும் குணப்பட்டு தனக்கு நல்ல பெயர் கிடைத்ததாய் சொன்னார். இதனை சூசகமாய் தமது பதிப்புத்தாளில் குறித்திருக்கினறார். மே. மா.

ஒரு மாதம் சாப்பிடக்கூடிய 30 மாத்திரைகள் அடங்கிய புட்டி 1-க்கு விலை ரூபா 5.

# தைலாமிர்தம்



இத் தைலம் பலவித உயர்ந்த பச்சிலைகளின் ரசமும் பசுவின் பால் கோரோசனை முதலாண உயர்ந்த வஸ்துக்களும், மூளையைக் குளிரச் செய்யும் வித்துத் தினுசுகளும் மற்றும் பல கடைச் சரக்குகளும் சேர்த்துத் தயார் செய்யப்பட்டது.

இத் தைலத்தைத் தேய்த்து ஸ்நானம் செய்து வர, கண் எரிச்சல், கண் சிவப்பு, கண்ணில் நீர் வடிதல், கண் குத்தல், கண்ணில் பூ விழுதல், பார்வை மந்தம், கண் கூசல் முதலான சகல நேத்திர ரோகங்களையும், மூளைக் கொதிப்பு, தலை சுத்தல், மயக்கம், புத்தி மந்தம், சோம்பல் முதலானவைகளையும் நீக்கி மூளைக்குக் குளிர்ச்சியைத் தந்து, புத்தித் தீட்சண்யத்தை உண்டு பண்ணும். ஒத்தைத் தலைவலி, கழுத்து நரம்பு வலி, மண்டைக் குத்தல் இவைகள் போம். மூளையின் கொதிப்பால் உண்டாகும் பைத்தியம் நீங்கும்.

சில அபிப்பிராயங்கள்.

---

லக்ஷிமி நரசிம்மராவ், பார்ப்பத்திதார் (திருப்பதி தேவஸ்தானம்) எழுதுவது:— எனது மனைவியின் நேத்திரம் சிவந்து பார்வை போய், நீர்வடிந்துகொண் டிருந்தது. என் தம்பியின் மனைவி நேத்

திரமும் பூ விழுந்து பார்வை நீங்கி யிருந்தது. இவ்விருவர்களின் கஷ்டத்தைப்பற்றிச் சென்னை காசிச்செட்டி தெருவிலிருக்கும் ஜி. ஆர். கிருஷ்ணசாமி செட்டியாரிடத்திலும், நேஷனல் பாங் தலைமை குமாஸ்தா சுந்தர ராமாஞ்சலு நாயுடுகாரு இடத்திலும், வி. பெருமாள் செட்டி கம்பெனி சொந்தக்காரர் ஆழ்வார் செட்டியாரிடத்திலும் சொல்லித் துயருற்றபோது அம் மூவரும் சென்னைக்கு அனுப்பும் படிக் கட்டளையிட்டனர். அதன்படியே திருவாளர் ராவ்சாகிப் தர்ம லிங்க முதலியார் அவர்களின் சகாயத்தால் பட்டணம் சேர்ந்து டாக்டர் மே. மாசிலாமணி முதலியாரிடம் காட்டினோம். அவர் என் மனைவிக்குத் தான் சிகிச்சை செய்வதாயும் என் தம்பி மனைவியைக் கண்ணாஸ்பத்திரிக்கு அனுப்பும்படி கட்டளையிட்டார். அதுபோலவே நடந்துகொண்டதில், என் மனைவிக்கு தைலாமிர்தம் என்னும் தைலம் ஒரு புட்டி கொடுத்து, 4 நாளைக் கொருமுறை ஸ்நானஞ் செய்து வரச் சொன்னார். அதன்படி செய்ததில் 15 நாளில் கண் சிவப்பு மாறிப் பார்வையும் நன்றாய்த் தெரிந்தது. பிறகு 2 புட்டி தைலாமிர் தம் வாங்கிக்கொண்டு திருப்பதிக்கு என் மனைவி வந்துவிட்டாள்.

என் தம்பியின் மனைவி ஒரு வருடமாகக் கண்ணாஸ்பத்திரிக்குப் போய், சிகிச்சைபெற்றுக் கடைசியாய்க் கண் பார்வை உண்டாகாது என அனுப்பிவிட்டார்கள். பிறகு இச்செய்தியை டாக்டர் மே. மாசிலாமணி முதலியாரிடம் சொல்ல அதைத் தான் பார்ப்பதாக ஒப்புக்கொண்டு ஒரு புட்டி தைலாமிர்தம் கொடுத்து தலை முழுகச் சொல்லி, வேறொரு மருந்துப் பொட்டலம் கொடுத்துக் காட்டுக் களாப்பூவை முலைப்பாலில் ஊறவைத்து மருந்தையும் அதனுடன் கலந்து நாள்தோறும் கண்ணுக்குப் போட்டுவரச் சொன்னார். அதன் படியே செய்ததில் ஒரு மாதத்தில் கண்பார்வை பெற்று சுகமாக வாழ்கின்றாள். டாக்டர் அவர்களின் உதவிக்குத் திருப்பதி பெரு மாள் அவருக்கு சகாயம் அளிப்பார்.

5 பலம் கொண்ட டின் ரூபா 1. தபால்சார்ஜ் பிரத்தியேகம்.

## தலைவலிச் சூரணம்

இந்தச் சூரணத்தில் ஒரு சிட்டிகை எடுத்து வாயில் போட்டுக் கொண்டு ஜலம் சாப்பிட்டால் 5 நிமிஷத்தில் தலைவலி நீங்கும்; தவிர உடம்புவலி, கைகால்வலி, இவைகள் போம். எத்தகைய சுரமானாலும் ஒரு சிட்டிகை மருந்து சாப்பிட்டவுடன் வியர்வை விட்டு சுரம் நீங்கும். மருந்து உபயோகிக்கும் முறை மருந்துடன் அனுப்பப் படும். இம்மருந்து வீட்டிலிருப்பின் எந்தப் பாமும் எவ்வித அஞ் சனமும் வேண்டியதில்லை. புட்டி 1-க்கு விலை அணா 8.

# காஸ்டோலின்

## (இது சர்வ படையையும் சம்மரிக்கும்)



சரீரத்தில் இடுப்பிலும், கழுத்துப் பட்டைகளிலும், துடையின் இடுக்கிலும், சாமான் கூட்டின் மேலும் படரும் படையானது இரவுபகலாக மானாபிமானம் விட்டு பலர் முன்னிலையில் சாமான் கூட்டில் கையைவைத்து நமை நீங்க சொறிந்துக் கொள்ளச் செய்கின்றது.

சிலர்க்கு முகத்திலும் கழுத்திலும் படர்ந்து விகாரத்தை உண்டு பண்ணுகின்றது. சிற்சிலருக்கு முழங்காலுக்குக் கீழ், கணுக்காலுக்குமேல் படர்ந்து எந்நேரமும் நீர் கசிந்துகொண்டு இரணமாய் இருக்கின்றது.

இத்தகைய வியாதிக்கு இங்கிலீஷ் மருந்தில் ஆசிட்சாலிசிலிக் என்னும் பவுடரை மெதிலேடட் ஸ்பிரிட் என்னும் திரவத்துடன் கலந்து பலர் படை மருந்து என்று விற்கின்றார்கள். இம் மருந்தை வாங்கி பூசினவுடன் எரிச்சல் கொடுத்து உதிர்வதுபோல் காணப்பட்டு மீண்டும் திரும்பி விடுகின்றது. எரிச்சலும் பொறுப்பது கஷ்டமாகின்றது. சிலருக்குக் குணமே கிடைப்பதில்லை. ஆதலால் அத்தகைய மருந்தைக் காட்டிலும் தமிழ் மருந்தே வேருடன் களையக்கூடியது. ஆகையால் எங்களால் தயார் செய்யப்பட்டுள்ள காஸ்டோலின் என்னும் விளக்கெண்ணெயினால் தயார் செய்த படை மருந்தை உபயோகித்துப் பாருங்கள்.

வேண்டுவோர் 6 அணா தபால் தலை அனுப்பிப் பெற்றுக்கொள்ளவும்.

Rangoon,

**Dated 24th August 1933**

Dear Doctor

I have the pleasure to inform you that your GASTOLINE has got a very good effect in curing all kinds of skin diseases sa the stock previously recieved by V. P. P. is nearly finished, and there is a good demand for it, I request you to send ½ dozen bottles by earliest V. P. P. & oblige.

Thanking you in anticipation, yours faithfully

E. K. Panchanatham,

c/o The Rangoon Electric Tramway & Supply Co. Ltd,

Merchant Street, Rangoon.

எமது விலாசம்:—

டாக்டர் மே. மாசிலாமணி முதலியார்,

31, வைத்தியநாத முதலிதெரு, சென்னை.